Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 48 | 28 - 03 - பெப்ரவரி - 2005



## பேரழிவைச்சந்தித்த எமது மக்களும்



## பங்கிட வேண்டிய உதவிகளும்





# ஓயாத சுனாமி...

சுனாமிதந்த அலைச்சல்
இன்னமும் முடியவில்லை
பேரலை பெருகிய செய்தி
எட்டாதது போலவே
எமக்கான எதிர்காலம் பற்றியும்
நாம் அறியமாட்டோம்.

அடிபட்டு, எறிபட்டு நீர்ச்சமாதிக்குத் தப்பி ஒழுங்காய்
மூச்சு விடமுன்னரே அங்குமிங்குமாய் எறிபடுகிறோம்.
கரையை விட்டு
ஒரு கிலோமீற்றர் விலக
வானொலி சொல்கிறது ஒருநாள்
முன்னூறு மீற்றர் போதும்
மறுநாள் அதுவே சொல்கிறது.

யாரைப் பற்றிக் கதைக்கிறார்கள்?
எங்களைப் பற்றியா?
எங்களை வெளியே விட்டு
எங்களைப் பற்றி ஏன் கதைக்கிறார்கள்?
இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன.
எங்கள் தெரிவுகளை
எவருமே கேட்கவில்லை.

கரையை விட்டுப்போக
எங்களால் முடியாது
விட்டுப் போவது
எங்கள் உறவுகளும்
எங்கள் சொத்துகளும்
மட்டுமல்ல.
வாழ்க்கை முறையும்தான்.

கரையைக் கைவிட்டால்
எமக்குத் தொழிலில்லை.
உரிமைபற்றி முழக்குவோர்
எங்கள் உரிமைகளை
ஏன் புரிந்து கொள்வதில்லை?

எமது வீடு எமது கிராமம் என்றால்
வெறும்
நீள அகலங்களுடன்
நிர்மாணிக்கும் சூனியங்கள் அல்ல.
அது கலாசார சின்னம்.
அது வரலாற்றுப் பிணைப்பு.
எங்களுக்கென்று ஒரு கோயில்.
அதனோடிணைந்த வாழ்வு.
அதுதான் எங்களுக்குத் தேவை.
புதிய இடத்து
கோயில் முறைமைகளினுள்ளே
எங்களை ஏற்பார்களா?
அல்லது
இரண்டாம் தரத்தினராவோமா?

காட்டில் ஏதாவது இடம்?
கடலில் இருந்து
உயிரே, எங்காவது ஒரு இடம்?
அலையில் மீட்ட
எம்பிள்ளைகளை
காட்டு யானைக்குப் பலி தருவோமா?
களங்களுக்கருகாய் அகப்பட்டு
இருப்பிழந்து போவோமா?

கடதாசியில் திட்டமிட்டு
கணினியில் வடிவமைத்து
ஒரே ஒரு செக்கனுக்கு
ஒரே ஒரு அறிவிப்பு
''பத்தாம் திகதி
பள்ளிகள் தொடங்கும்''

இருபத்தாறில் தூங்கிய வீடு
எழுந்தபோது எமதில்லையாம்
பேரலைகள் கூறிவிட்டன.
நித்திரையேவராமல்
நாங்கள் தூங்குகின்ற இடம்
எமதில்லையாம் என்கிறது அறிவிப்பு.
எந்தப் பள்ளிக்கு? எந்தப் புத்தகங்களுடன்
எந்த உடுப்புடன் போவேன்?
என்பிள்ளை கேட்கிறான்.
முக்கண் ஞானிகளே
நாங்கள் கேட்பதெல்லாம்
எங்களைப் பற்றிய செய்திகள்
எங்களுக்குத் தெரிய வேண்டும்
அவ்வளவுதான்!

S.ஜெயசங்கர்
நுண்கலைப் பீடம்
தமிழில்:- வின்சென்ற் புளோறன்ஸ்

# கார சாரம்

## தொண்டைக்கு வந்த பின்னர்தான் திணறப்போகிறோமா…?

மரக்கறிக்கடையில் மரக்கறிவாங்கினால் அதை ஒரு 'சொப்பிங்' பையில் போட்டுத் தருகிறார்கள். இந்த 'சொப்பிங்பாக்' என்று சொல்லப்படுகிற பொலித்தீன் பை ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகளின் கடைசிக் கூற்றில்தான் புழக்கத்துக்கு வந்தது. அது வந்தபோது அதற்குள் இருபத்தெட்டுறாத்தல் ஏறக்குறைய பன்னிரண்டு கிலோ பொருட்களைப் போட்டுத்தூக்கலாம். கையில் எடுத்துச்செல்வதும் மிகச்சுலபம் என்பதால் அதுவரை பாவனையிலிருந்த பிரம்புக்கூடைகள் பன் உமல்கள், பிளாஸ்டிக்கூடைகள், என்பன படிப்படியாக மறைந்து போயின. அந்தப் பொருட்களை பின்னிவிற்கும் குடிசைத் தொழிலும் அற்றுப்போனதுடன் உள்ளூர் மூலப் பொருட்களான பன் ஓலை, பனையோலை, பிரம்பு போன்றவையும் தானே வளர்ந்து வீணே அழிகின்றன.

முறிகண்டி வடை ஒரு காலத்தில் உலகப் புகழ்பெற்று விளங்கியது. இன்றைக்கு சில வருடம் முன்பு முறிகண்டிக்கச்சான் அகில இலங்கைப் புகழ்பெற்று விளங்கியது. தூய வன்னிமண்ணில் விளைந்து வெயிலில் காயவைத்து பாண்போறணையில் தோல் கருகாமல் வறுத்து புனல் தட்டுகளில் கும்பக் குவியக் கொட்டிவைத்திருக்கும் கச்சானில் இரண்டை எடுத்துக் கொறித்துப்பார்த்து 'இதில ஒரு சுண்டுதா' அதில ஒரு சுண்டு தா என்று வாங்குவோம். கொழும்புக்குப் போனாலும் முறிகண்டிக்கச்சானைக் கேட்பார்கள். இன்று முறிகண்டியில் சூத்தை, சப்பி, காலஞ் சென்ற கச்சான், வறுபடாத கச்சான் என உதவாத கச்சானைப் பொலித்தீன் பையில் பொட்டலமாகக்கட்டிப் பயணிகளுக்கு கொடுக்கிறார்கள். சவடாலாக உட்கார்ந்து கச்சான் பையைப் பிரிக்க பேருந்து புறப்படும். சூத்தை சப்பி கழித்து மிஞ்சும் நாலைந்து கச்சான் வாங்கியவனைத் திருப்பியா போய்க் கேட்கமுடியும். ஊழலுக்கு உதவும் பொலித்தீன்பை.

பலசரக்குக் கடையில் பொட்டலம் கட்டப் பழையபேப்பர் தேவைப்படும். பத்திரிகை வாங்கிப் படிப்பவர்கள் அவற்றைச் சேகரித்து விற்றுச் சிறுதொகை பெறலாம். இப்போது பழைய பேப்பர் விற்கமுடிவதில்லை. மெல்லிய மிக மெல்லிய பொலித்தீன் பையில் சீனி, மல்லி, மாவு, அரிசி போன்ற முட்டினால் கொட்டிவிடும் பொருட்கள் கூட கட்டிக் கொடுக்கிறார்கள். நுகர்வோருக்குப் பொருட்களைப் பாதுகாப்பான பொட்டலங்களில் கொடுக்க வேண்டிய கடப்பாடு விற்பவருக்கு இல்லை. வாங்குவோரும் சிந்திக்கமுடியாத செக்குமாடுகளாக உள்ளனர்.

இதே பொலித்தீன் பைகள் தொண்ணூறுகளில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து தேங்காய் எண்ணெய், பொருட்கள், மண்ணெய் போன்றவற்றையும் கொண்டுவர உதவியது. மக்கள் கொள்கலன்கள் எதுவும் கொண்டுவரக்கூடாது என இராணுவம் தடை செய்தபோது இந்தப் பைகளை நம்பி எண்ணெய் வகைகளைப் பல இடர்களுக்கு மத்தியிலும் உடைந்து விடாமல் கொண்டுவந்து சேர்த்தனர் மக்கள்.

மீனைப் பெட்டியில் போட்டு பெட்டியை மிதிவண்டியில் கட்டி விற்கும் வியாபாரிகளை அனைவரும் அறிவோம். வவுனியாவில் இந்த வியாபாரிகளின் மீன்பெட்டிகளில் மீன்களின் அடியில் ஒரு ஈரச்சாக்கும் அந்தச் சாக்கின்கீழ் பொலித்தீன் பை (சொப்பிங்பை) யில் கட்டிய பொட்டலங்களில் கசிப்பு இருப்பதைக் காணலாம். இந்தக் கசிப்புவியாபாரம் பெரும்பாலும் சொப்பிங் பைப் பொட்டலங்களாகவே உள்ளன.

பொலித்தீன் பைகள் பொலித்தீன் விரிப்புகள், பொலித்தீன் உணவு சுற்றிகள், பொலித்தீன் போத்தல்கள், பொலித்தீன் உறைகள் எனப் பொலித்தீன் இல்லாத வாழ்க்கையே இல்லை என்னுமளவுக்கு பொலித்தீன் உலகமயமாகியுள்ளது.

கோயில் திருவிழாக்கள் போன்று கூட்டம் கூடும் இடங்களில் எல்லாம் கூட்டம் கலைந்தபின் பொலித்தீன் நிரம்பிப் பறப்பதைக் காணலாம்.

பொலித்தீன் இற்றுப்போகாது. நிலத்துள் புதைந்து போனால் மண்ணுக்குள் நீர் ஊடுருவவிடாது போடப்படும் 'பசளைகளையோ மருந்தையோ பசளை சேர்வதைத்தடுக்கும். எனவே விவசாயிகளுக்கு பொலித்தீன் எதிரிதான். போதாததற்கு யூரியா போன்ற பசளைகளுடனும் பெருமளவு பொலித்தீன் வயல் நிலங்களைச் சென்றடைகிறது. காற்றில் மிதந்து பறந்து செல்லும் பைகள் அழுக்கு மேடைகளில் உருண்டு புரண்டு எழுந்து நீரில் கலந்து அழுக்குகளை உள்வாங்கி நொதுநொதுத்துக் கிருமிகளை வளர்க்கும் நாற்று மேடையாகிறது. நீரில் இவை இற்று அழிவதில்லை. கிணறுகளில் கூட இவை விழுந்து நீந்துகின்றன.

பிளாஸ்டிக் பொலித்தீன் இவை இரண்டினதும் பெருக்கம் உலகத்துக்கே பெரும் அச்சுறுத்தலாகி விட்டதாம். இவற்றை அழிக்கவே முடியாது. பாவனையின் முடிவில் இவற்றைக் கொட்டிவைக்கும் இடங்கள் வேறு எவற்றுக்கும் பயன்படப்போவதில்லை. இவற்றை எரித்தால் கூட உருமாறுமேயன்றி அழிந்து போகாது என்பதுடன் எரிக்கும் போது எழும் வாயு மனித உடலுக்குள் சுவாசத்துடன் கலந்து சென்று நுரையீரலில் ஓட்டை போட்டுவிடும். இப்பொருட்களை இப்போது அபிவிருத்தியடைந்துள்ள வல்லரசு நாடுகள் பயன்படுத்துவதில்லை. மூன்றாம் உலக நாடுகளே உலகின் குப்பைத் தொட்டிகளாக உள்ளன. இவ்வளவும் தெரிந்திருந்தும் பொலித்தீன் பாவனையை ஒழிக்க அரசு முன்வரவில்லை. என்பதுடன் பொலித்தீன் உற்பத்தியிலும் அதனைப்பயன்படுத்துவதிலும்கூட முதன்மை வகிக்கிறது.

பொலித்தீன் வருவதன் முன் மக்கள் வாழவில்லையா? அல்லது பொலித்தீன் தொடர்ந்து பாவிக்கக் கூடிய பொருளா? இதுவுமன்றி பொலித்தீனை எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மூலப்பொருள் உள்ளதா? அல்லது பொலித்தீன் உடலுக்கோ உள்ளத்துக்கோ வலிமை சேர்க்கிறதா? வருமானம் சேர்க்கிறதா?

மக்களைத் தவறான பொருட்களின் பயன்பாட்டுக்குள் தள்ளி, உள்ளூர் மூலவளங்களை ஒழித்துக்கட்டுவது சுதந்திரத்துக்காக போராடும் ஒரு இனத்துக்கு தேவைதானா? நம்மூரில் பிரம்புப் பற்றைகள் நாறிக்கிடக்கின்றன. தென்னிலங்கையிலிருந்து பிரம்புத்தளபாடங்கள் வாகனமேறி இங்கு வருகின்றன. ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அங்குபோகின்றன. பிரம்புத் தொழிற்கலைஞர்களை வரவழைத்து அந்தக் கலையை இங்குள்ளவர்களுக்கு கற்பிக்க யார் முயன்றார்.

தமிழ் இனத்தின் சாபக்கேடா இது? தொழில் செய்யவும் வெளிநாடுதான் போகவேண்டும். பாவனைப் பொருட்களும் வெளிநாடுகளிலிருந்துதான் வரவேண்டும். இந்தியவிடுதலைப் போராட்டத்தின் போது சுதேசியப் பொருட்களைப் பாவிக்கவேண்டும் என்பதும் ஒரு இயக்கமாக இருந்தது.சீன விடுதலைப் போராட்டத்திலும் ஜப்பானியப் பொருட்களை அங்குள்ள மக்கள் ஒதுக்கி வைத்தனர். தீயிட்டழித்தனர். இவையெல்லாம் எதிரியின் பொருள் என்பதால் மட்டுமல்ல சுதேச உற்பத்தியை வளர்க்கவும் தான். அறிவுரீதியாக வெளிவரும் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் தடை செய்துதான் உள்ளூர் புத்திரிகைகளை வளர்த்தோம். இந்தியத் திரைப்படங்களை தியேட்டர்களையும் மட்டுப்படுத்தியும் இல்லாதொழித்தும் கூட கொள்கை வளர்த்தோம். நல்ல செயல்கள்தான். இதே மண்ணில் யுத்தச் சூழலில் வீட்டுக்கு வீடு கயிறு பின்னி வயிறுவளர்த்தவர்கள்,இன்று தொழிலையே மாற்றிக் கொண்டுள்ளனர். பனையோலைப் பெட்டிகளும் நார்க்கடகங்களும் பின்னிய குடிசைத்தொழிலாளர்கள், இன்று இரும்புத்தாச்சியும் பிளாஸ்டிக் கலன்களும் வந்துவிட்டதால் தொழிலைக்கைவிட்டு விட்டனர்.

அந்தக் காலத்தில் வீட்டின் அடுக்களையுள் அடுக்குப் பெட்டி மூடல்கள் இருக்கும். அடிப்பெட்டி வெங்காயம், மிளகாய், அடுத்தது மல்லி அடுத்தது சீரகம் கடுகு, மற்றது மஞ்சள், சீரகம், மிளகு இதையடுத்த சிறுபெட்டி வெந்தயம், இந்தப் பெட்டியும் ஒரு மிளகாய்த்தூள் செப்பு இவையே அடுக்களை ஆதிக்கம். காசு வைக்க காணி உறுதிகள் ஆவணங்கள் ஓலைச்சுவடி வைக்க ஒரு வல்லுவம், மடியில் கட்டிச் செல்ல கொட்டப்பெட்டி இதில் உள்ளறை வைத்துப் பின்னியிருக்கும் காசு உள்ளறை நடு அறை வெற்றிலை பாக்கு சந்தை வியாபாரம் செய்ய ஒரு மூடுபெட்டி கட்டுச்சோற்றுக்கு மூடல், பொருட்கள் வைக்க கடகப் பெட்டி இதெல்லாம் இப்போது எங்கே? நாங்கள் இப்போது என்ன செய்கிறோம்.

ஆற்றிலே புளிகரைத்தது போல வாழ்நாளைக் கழித்து வருகிறோம்.பணம் வெளிநாட்டில் காய்க்கிறது. "ஹலோ....வில பேசினா கிலோவில வருது. சுலோவில்லை பாஸ்ற்றாவே வந்திடும்" பிறகென்ன உள்ளூர் உற்பத்தியும் உள்ளூர் வளமும்- பொலித்தீனும் பிளாஸ்டிக்கும் எங்கள் தொண்டை வரை வந்தபிறகுதான் திணறப்போகிறோமா? அரசும் மக்களும் இதைப் பற்றி எப்போ சிந்திப்பது.

மாயா



# சந்திரிகா எந்த வழியால் போகிறார்?

நிலாந்தன்

நீ எதையாவது புதிதாக உருவாக்கவிரும்பினால் முதலில் ஏற்கனவே இருப்பதை அழித்துவிட வேண்டும் என்று ஜேர்மனிய தத்துவ ஞானியான நீட்ஷே ஒருமுறை கூறியிருந்தார். இது இலங்கைத்தீவின் இப்போதுள்ள நிலைக்கு மிகப் பொருத்தமான ஒருகூற்றாகத்தெரிகிறது.

குறிப்பாகத் தென்னிலங்கையின் கடலோரங்களை மீள வடிவமைக்கும் விசயத்தில் அரசாங்கம் முன்பு செய்யமுடியாதிருந்த ஒருவிசயத்தை. சுனாமி செய்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். மேற்படி கடலோரக்கட்டுமானங்கள் பல சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக மீள வடிவமைக்கப்படாதவைகளாய் இருந்தவை என்றும் அவற்றை சுனாமியின் பெயரால் இப்பொழுது புதிதாகக் கட்டியெழுப்ப ஒரு வாய்ப்புக்கிடைத்திருக்கிறது என்று துறைசார் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

17ஆம் நூற்றாண்டில் லண்டன் மாநகரை சாம்பலாக்கிய நெருப்பு எப்படி இப்பொழுதுள்ள லண்டன் மாநகரை புதிதாக வடிவமைக்க உதவியதோ அப்படித்தான் இதுவும் என்று அவர்கள் கூறுகிறார்கள். 17ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த "லண்டன் நெருப்பு" அப்போதிருந்த பழைய மரக்கட்டடங்களை எரித்தழித்துவிட்டது. இது பின்பு புதிய லண்டன் மாநகரை கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கியது.

இலங்கைத்தீவிலும் இப்படித்தான் சுனாமி அழிவின் பின் அநேகமான கடலோரக் குடியிருப்புக்களையும் நகரங்கள் பட்டினங்களையும் புதிதாய் வடிவமைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதுவும் வெளிநாட்டுக் காசிலேயே இதைச்செய்யக்கிடைத்திருப்பது என்பது ஒரு கூடுதல் அனுகூலம்தான்.

ஆசியாவின் சுனாமி எனப்படுவது எமது காலத்தில் நிகழ்ந்த மெய்யான பூகோள அனர்த்தம் என்று அழைக்கப்படுவதாக ஆர்தர்.சி.கிளாக் கூறுகிறார். சுனாமியின் வருகை பற்றிய தகவல்களைப் பரிமாறும் விசயத்தில் தகவல்யுகம் அல்லது பூகோள கிராமம்போன்ற படிமங்களைச் சூழ்ந்திருந்த மாயைகள் பெருமளவுக்குக் கலைந்துபோய் விட்டபோதிலும்கூட, சுனாமிக்குப் பிந்திய தகவல் பரிமாற்றத்தை பொறுத்தவரை உலகளாவிய தகவல் வலையமைப்பு மிகப் பெரியதொரு தொண்டை செய்திருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

சுனாமி அழிவின் புகைப் படங்கள் உலகமெலாம் பரவப்பரவ வந்து குவியும் நிதியும் பூகோளமயப்பட்டதாக மாறலாயிற்று. ஆனால், இந்த நிதியைக் கையாள்வதற்குரிய நம்பகத்தன்மை மிக்கதும் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதுமாகிய ஒரு நிர்வாகக்கட்டமைப்பை உருவாக்கும் விசயத்தில் இலங்கைத்தீவு இப்பத்தி எழுதப்படும் நாள்வரையிலும் வெற்றிபெற்றிருப்பதாகத்தெரியவில்லை.

ஆனால், அதேசமயம் அரசாங்கம் தெற்கில் தனது சுனாமி அரசியலின் ஓர் அங்கமாக புதிய கடலோரக் குடியிருப்புக்களை வடிவமைக்கும் முயற்சிகளை தொடங்கியிருக்கிறது. இதற்காகத்தெரிவு செய்யப்பட்ட மாவட்டம் எது என்பதிலும் சந்திரிகாவின் அரசியல் இருக்கிறது. அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷவின் கோட்டைக்குள் வருகிறது. அதேசமயம் அது ஜே.வி.பியின் கோட்டையும் கூட. எனவே அம்பாந்தோட்டையைத்தெரிவுசெய்ததன் மூலம் சந்திரிகா ராஜபக்ஷவையும் ஜே.வி.பியையும் ஒதுக்க முயற்சிக்கிறாரா?

சுனாமியால் அவருக்கு கிடைத்த பெரிய ஆதாயங்களில் ஒன்று ஜே.வி.பியைக் கையாள்வதில் அவருக்கிருந்த பலதடைகளை சுனாமி அள்ளிக்கொண்டு போய் விட்டது என்பதே. ஜே.வி.பி மேற்கிற்கு எதிரானது என்றிருந்த படிமங்களை எல்லாம் சுனாமி அள்ளிக் கொண்டு போய்விட்டது. சுனாமிக்குப் பிந்திய சிறிலங்கா அரசியல் எனப்படுவது முன்னெப்போதும் காணப்பட்டிராத ஒரு நூதனமான கலவையாக மாறிவருகிறது.

ஒருபுறம் சந்திரிகா ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்திருக்கிறார். இன்னொருபுறம் அமெரிக்கத் துருப்புக்கள் நாட்டினுள் இறங்க அனுமதி கொடுத்திருக்கிறார். இது தவிர இந்தியத் துருப்புக்களும் நாட்டில் உண்டு. இது ஒன்றைக்காட்டுகிறது. சுனாமிக்குப் பிந்திய இலங்கைத்தீவின் அரசியலானது தற்சமயம் நிலவும் உலக ஒழுங்கை அதிகம் பிரதிபலிக்கும் ஒன்றாக மாறிவருகிறது. இதில் ஜே.வி.பி தான் ஒரு இடறல். ஆனால், அதுவும் பெருமளவுக்கு தணிந்து காணப்படுகிறது.

இப்படிப் பார்த்தால் முன்பு ரணில் விட்ட இடத்துக்குக் கிட்டவாக சந்திரிகா வந்துகொண்டிருக்கிறார் எனலாமா? சமாதானத்தைக் கையாள்வதில்தான் அவருக்கும் ரணிலுக்குமிடையீல் சிலவேறுபாடுகள் உண்டு. மற்றும்படி பொருளாதார அர்த்தத்தில் முழுக்கமுழுக்க ரணிலின் அலை வரிசையிலேயே சந்திரிகாவும் சிந்திக்க வேண்டிய ஒரு அரசியல் சூழலை சுனாமி கொண்டுவந்திருக்கிறது.

"சிறிலங்காவை மீளக் கட்டியெழுப்புவது" என்ற அரசாங்கத்தின் திட்டம் கிட்டத்தட்ட முன்பு ரணில் வைத்திருந்த "சிறிலங்காவை மீட்பது" என்ற திட்டத்தின் சாயலை உடையதாகவே காணப்படுகிறது .

கடலோரங்களை மீளக் கட்டியெழுப்பும் விசயத்தில் சந்திரிகா முன்பு ரணில் அரசாங்கம்விட்ட இடத்திலிருந்தா தொடங்கப்போகிறார்? என்ற சந்தேகம் தவிர்க்க இயலாதபடி எழுகிறது. ஏனெனில் மீளக் கட்டியெழுப்புதலுக்கான நிபுணத்துவ ஆலோசனைகளை நிதியுதவிகளை பெருமளவுக்கு மேற்கு நாடுகளே செய்ய முன்வந்துள்ளன. ஒன்றில் மேற்கு நாடுகள் நேரடியாகவோ அல்லது அவற்றின் ஆசீர்வாதத்துடன் உதவி வழங்கும் நிறுவனங்களோ தான் இந்த மீளக்கட்டியெழுப்பும் திட்டங்களின் பின்னால் இருப்பது தெரிகிறது. ஆயின் சந்திரிகா ரணிலின் சிறிலங்காவை மீட்பது என்ற நிகழ்ச்சித திட்டத்தை சந்தடியின்றி திருடப்போகிறாரா?

இதை இன்னும் சரியாக விளங்கிக்கொள்வதென்றால் முதலில் ரணிலின் சிறிலங்காவை மீட்பது என்ற திட்டத்தை சுருக்கமாக விளங்கிக்கொள்வது உதவியாயிருக்கும்.

முன்பு தனது பதவிக் காலத்தில் ரணில் முன்வைத்த இத் திட்டத்தின் படி சிங்களப் பகுதிகளிலுள்ள உட்கட்டுமானக் கட்டமைப்புக்கள் யாவும் பெருமெடுப்பில் மீளுருவாக்கம் செய்யப்படும். இது ஏழைகளுக்கு உதவும் திட்டம் என்று ரணில் சொல்லிவந்தார். ஆனால், அது உண்மையல்ல. உண்மைநிலை என்னவெனில் அது முதலீட்டாளர்களுக்கு உதவும் ஒரு திட்டமே. அத் திட்டத்தின்படி சிறிலங்காவின் உட்கட்டுமானங்கள் யாவும் புரட்சிகரமாக மாற்றப்படுவதன்மூலம் சிறிலங்காவை முதலீட்டாளர்களை கவரவல்ல ஒரு நாடாக மாற்றுவதே ரணில்- மொறகொட அரசின் இறுதி இலக்காய் இருந்தது.

ஒருபுறம் யுத்தமற்ற சூழலை பேணிக்கொண்டு இன்னொருபுறம் தென்னிலங்கையை முதலீட்டாளர்களின் கவர்ச்சிக்கன்னியாக மாற்றும் மேற்படி திட்டத்தை சிறிது கொச்சை வழக்கில் சொன்னால் ... ஒரு பாலியல் தொழிலாளி தனது வாடிக்கையாளர்களை கவர்வதற்காக தன்னை எப்படி எப்படியெல்லாம் அலங்கரித்து அழகுபடுத்திக்கொள்வாரோ அப்படித்தான் இதுவும் எனலாம்.

இப்பொழுது சந்திரிகாவும் அதேதிட்டத்தின் மற்றொரு நகலையே கரையோரங்களில் பிரயோகிக்கப்போகிறார் போலத்தோன்றுகிறது.

உதவிவழங்கும் பன்நாட்டு நிறுவனங்களின் ஆலோசனைப்படி அவர் வடிவமைக்கப்போகும் கடலோரங்கள் நிச்சயமாக முதலீட்டாளர்களின் உல்லாசப் பயணிகளின் ருசி, ரசனை என்பவற்றை மனதில் வைத்து வடிவமைக்கப்படும் ஏது நிலைகளே அதிகம் தென்படுகின்றன.

கடந்தவாரம் ஜெனிவாவில் சிறிலங்காவின் நிதியமைச்சரை சந்தித்த அமெரிக்க அதிகாரிகள் ஒரு முக்கியமான விசயத்தை சொல்லியிருக்கிறார்கள். அதன்படி கடன்களை தள்ளுபடி செய்வதில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும் இது தொடர்பாக ஐ.எம்.எவ் இன் நிகழ்ச்சித் திட்டம் ஏதும் இல்லை என்றால் சுனாமியின் பின் கவர்ச்சியாக அறிவிக்கப்பட்டதுபோல, கடன்களை தாமதமாகச் செலுத்தலாம் என்ற சலுகையில் கையெழுத்திடும் நிலையில் தான் இல்லை என்று அமெரிக்கா கூறுகிறதாம்.

ஐ.எம்.எவ் இன் நிகழ்ச்சித் திட்டம் என்று அவர்கள் எதைக் கருதுகிறார்கள் என்பது தெளிவில்லை. ஆனால், அது அநேகமாக மீள் கட்டமைப்புப் பணிகளை உதவி வழங்கும் நிறுவனங்களின் விருப்பங்களுக்கேற்ப வடிவமைக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற் கேஇட்டுச்செல்லமுடியும் என்று ஊகிக்கத்தக்கதாகத்தான் மேற்படி நிறுவனங்களின் கடந்த கால செயற்பாடுகள் காணப்படுகின்றன.

2000 ஆம் ஆண்டில் சந்திரிகா அரசாங்கம் உலக வங்கியுடன் செய்துகொண்ட ஒரு உடன்படிக்கையின் படி 20 பொதுசன நிறுவனங்களை மீளுருவாக்கம் செய்ய ஒப்புக்கொண்டது. ஆனால், அப்பொழுது காணப்பட்ட கடும் எதிர்ப்புக் காரணமாக அதை முழு அளவில் நடைமுறைப்படுத்தமுடியவில்லை. ஆனால், இப்பொழுது சுனாமி அரசியலில் சந்திரிகா அதிகமதிகம் உதவிவழங்கும் நிறுவனங்களுக்கு விட்டுக்கொடுக்கத் தொடங்கிவிட்டார். சுனாமிக்கு முன்பு ஜே.வி.பியிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புக்களையிட்டு அவர் தயங்கினார். ஆனால், சுனாமி வந்து அவருடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுத்திருக்கிறது.

கடந்த வாரம் கிடைத்த தகவல்களின்படி இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் அதிகாரசபை போன்றவை உதவிவழங்கும் நிறுவனங்களின் கைகளில் கொடுக்கப்படும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

எனவே சுனாமி அரசியலின் கீழ் சந்திரிகா சுனாமிக்கு முந்திய தனது அரசியலில் காணப்பட்ட வெற்றிடங்களை ஒவ்வொன்றாக நிரவிவருகிறார் என்றே தோன்றுகிறது. இப்படிப் பார்த்தால் அவருடைய மீளக்கட்டியெழுப்பும் திட்டம் முன்பு ரணில் வைத்திருந்த திட்டத்தின் வேறொரு வடிவமாக அமையும் வாய்ப்புக்களே அதிகம் தென்படுகின்றன.

பொருளாதார வார்த்தைகளில் கூறின் ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் ஏற்கனவே அதிகம் வித்தியாசம் இருக்கவில்லை. சுனாமிக்குப்பின் ஏற்கனவே இருந்த கொஞ்சநஞ்ச வித்தியாசங்களும் அள்ளுண்டு போவது தெரிகின்றது.

சந்திரிகா நம்புகிறார் வெளிநாட்டுப் படைகள் நாட்டில் உள்ளவரை மீண்டும் ஒரு யுத்தம் வராது என்று. எனவே வெளிநாட்டுத் துருப்புக்களை வைத்திருப்பதன்மூலம் யுத்தமற்ற ஒருநிலையை பேணும் அதேசமயம் மேற்படிநாடுகளுக்கு விசுவாசமாக அவர்கள் விரும்பும்வடிவத்தில் நாட்டை மீளக்கட்டியெழுப்ப அவர் தயாராகிவருவதன்மூலம் தனது தனிப்பட்ட கனவுகளை நிறைவேற்றக் கிடைத்திருக்கும் ஒரு புதிய தெரிவை கையாளப்போகிறார் என்றே தோன்றுகிறது.

என்பதால்தான் அவர் அம்பாந்தோட்டையில் தனது மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தை தொடக்கி வைத்த நிகழ்வில் உரையாற்றிய போது இனி ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் இல்லை என்று கூறினார்.

சுனாமிப்பேரழிவு பூகோள அளவில் ஒரு பேருண்மையை உணர்த்தியிருக்கிறது. மனிதனுடைய அறிவியல் வெற்றிகள் யாவும் பலசாலிகளான பணக்கார நாடுகளுக்கே சேவகம் செய்கின்றன என்பதே அது.

சுனாமி அரசியலிலும் இந்த பேருண்மையின் பிரதிபலிப்புக்களை காணமுடியும். சுனாமி அழிவின் பேரால் உதவிக்கு வந்த பலசாலி நாடுகள் வறியசிறியநாடுகளின் அரசியலை தமக்கு சேவகம்செய்யும் ஒன்றாக மாற்றிவருகின்றன. இதில் தமிழர்கள் கவனிக்கவேண்டியது என்னவெனில்- சுனாமி அரசியலின் கீழ் சிறிய வறிய நாடுகளை தமது சேவகர்களாய் மாற்றிவரும் பலசாலி நாடுகள் சிறிய போராடும் இனங்களின் விசயத்தில் எப்படி நடந்து கொள்ளப்போகின்றன என்பதையே. ●

# நறுக்கென...

## ஆட்சியைக் குழப்பும் சுனாமி



அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலும் நடைபெறப்போவதில்லை என்ற சிறிலங்கா சனாதிபதியின் அதிரடி அறிவிப்பால் அதிகபட்சம் அதிர்ச்சியடைந்துபோயுள்ளார்கள். அவரது சகோதரரும், பிரதான பங்காளிகளும்தானாம்!

எப்படியாவது சனாதிபதிக் கதிரையில் ஒருதடவை குந்திவிட்டாவது எழும்பும் நாற்காலிக் கனவில் 'சதா போதையுடன்' மிதக்கும் அநுரா பண்டாரநாயக்க தனது சகோதரியின் இந்த அறிவிப்பால் சோர்ந்து துவண்டு தொளதொளத்துப் போயுள்ளாராம்,

ஏற்கெனவே ஜே.வி.பியினருக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு மிடையே தேர்தல் கால கூட்டணி அமைக்க உடல் குலுங்க அநுரா ஓடியோடி புரோக்கர் பணியாற்றிய போது அடுத்த சனாதிபதித் தேர்தலில் அவருக்கு முழு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்த ஜே.வி.பியினர் கடந்தவாரம் அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப் போட்டியிடும் என்று அறிவித்ததால் அலமலந்துபோன அநுரா இப்போது சகோதரியின் அறிவிப்பால் மனம் உடைந்தே போயுள்ளாராம்.

எல்லோருமே தன்னை ஒரு அரசியல் கோமாளியாகவே பார்க்கிறார்கள் என்ற எண்ணமும் அவருக்கு உருவாகியுள்ளதாம்.

அதனைவிடவும் இப்போது ஜே.வி.பி யினரின் அதிகார- ஆதிக்க வெறியுடன் கூடிய செயற்பாடுகள் மற்றும் அறிக்கைகளால் ஆத்திரமும் ஆவேசமும் அடைந்த நிலையில் குமுறும் சந்திரிகா அவ்வப்போது அநுராவையும், அவரது சகபாடி புரோக்கரான மங்களசமரவீரவையும் அழைத்து 'உங்கள் தோழர்களை அளவுக்கு மீறி அலட்டவேண்டாம் என்று சொல்லுங்கள்' என்று கண்டித்ததால் ஒருவர் அசட்டு முழியும் மற்றவர் திருட்டு முழியும் முழிக்கத் தொடங்கியுள்ளனராம்.

இப்போதெல்லாம் 'உலகே மாயம் அரசியல் வாழ்வே மாயம்....' என்று குடிகார தேவதாஸ் பாணியில் உளறத் தொடங்கியுள்ள அநுராவை கட்சியின் சிரேஷ்ட தலைவர்களும் மதிப்பதில்லை. இவரால்தான் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்து கூத்தாடவேண்டி ஏற்பட்டது என்று எல்லோரும் குற்றம் சாட்டுவதும் உண்மையே...

ஜே.வி.பியும் அவரை ' ஆற்றை கடக்குமுன் அண்ணன் தம்பி, அதன் பிறகு நீ யாரோ, நான்யாரோ என்ற பாணியில் கையாள்வதாக உள்ளது.

சரி, ஐந்தாண்டுத் தேர்தல் இல்லை என்ற சனாதிபதி அறிவிப்பால் அநுராவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை விடவும் ஜே.வி.பி யினருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அதிகமாக இருப்பதற்கு காரணம் சந்திரிகாவும் ஐ.தே.கட்சியும் ஏதோ நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் ஒன்றாக இணைந்து செயற்பட முனைவதாக வெளியான செய்தியேயாகும்.

இருதரப்பும் இணைந்து செயற்பட நேர்ந்தால் தங்களது பதவிகளுக்கு மட்டுமல்ல அரசியல் எதிர்காலத்திற்கும் அச்சுறுத்தலாகிவிடும் என்றே ஜே.வி.பி அஞ்சுகிறது.

ஜே.வி.பியினரின் அதிகார மேலாதிக்க போக்கிற்கு சந்திரிகா கொடுத்துள்ள அதிர்ச்சி வைத்தியம் இந்த அறிக்கை என்றும் சிலர் கூறுகிறார்கள். சுனாமிஅலை அரசியல் அலையாகி நாட்டை குழப்பத் தொடங்கிவிட்டது போலும்.

## பிசுபிசுத்துப் போன ஹெலிகொப்ரர் விவகாரம்



கடைசியில் அரசின்- ஜே.வி.பியின் - ஏன் அனைத்துப் பேரினவாத சக்திகளின் அந்த நம்பிக்கையும் கந்தறுந்து போய்விட்டது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய நிவாரணப் பொருட்களுடன் இரு ஹெலி கொப்ரர்களுக்கான உதிரிப்பாகங்களும் வரச்சேர்ந்தமை தொடர்பான செய்திகள் வெளியானதும் பேரினவாத சக்தி வரிந்து கட்டிக்கொண்டு விடுதலைப் புலிகளை அந்த ஹெலிகளுடன் தொடர்புபடுத்தும் பிரசாரப் போரில் களமிறங்கின.

இந்த இரு ஹெலிகளுக்கான உதிரிப்பாகங்களில் ஒன்று 'பெல்'ரக உலங்கு வானூர்திக்குரியவை என்றும், மற்றது வேறொரு ரகத்திற்குரியவை என்றும் விமானப்படைப் பேச்சாளர் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்ததையடுத்து விடுதலைப்புலிகளே இவற்றை நிவாரணப் பொருட்களுடன் பொருட்களாகக் கடத்தியுள்ளனர் என்று கதறத் தொடங்கிய ஜே.வி.பி உட்பட அனைத்துப்பேரினவாத கும்பல்களும், இந்த நடவடிக்கை நாட்டிற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதென்றும் உடனடியாக இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கத்தத் தொடங்கினர்.

விமானப்படைத்தளபதியே - அதாவது அந்த அதிபுத்திசாலியான எயார் மார்ஷல் டொனால்ட் பெரேராவே- இந்தச் செய்தியை அறிந்தவுடன், இதற்கு விடுதலைப்புலிகள்தான் பின்னணியில் இருப்பார்கள் என்று துள்ளியுள்ளார்.

அது மட்டுமல்ல எந்தவொரு இராணுவ தளபாடத்தையும் இங்கு கொண்டு வரவேண்டுமெனில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற்றே கொண்டுவர வேண்டும். இதற்கு சிவில் விமானப் போக்குவரத்துச் சபையின் அங்கீகாரமும் வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், இருதினங்களிலேயே உண்மை வெளிச்சமாகிவிட்டது. அமெரிக்க தொண்டு நிறுவனங்களுக்கே அந்தக் ஹெலி கொப்ரர் உதிரிப்பாகங்கள் கொண்டுவரப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துவிட்டது.

இப்போது இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கினை மீறி அமெரிக்கத் தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட இந்த உலங்கு வானூர்திகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அந்தத் தொண்டு நிறுவனம்மீது என்ன நடவடிக்கை அரசு எடுக்கப்போகிறதாம்.

விடுதலைப் புலிகள் கொண்டுவந்தால் அது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அதையே அமெரிக்க நிறுனம் இறக்குமதி செய்தால் அதுதொண்டு நடவடிக்கைக்குத் தேவையானது என்றா கூறப்போகிறார்கள்?

சுனாமியின் பெயரால் அந்நியப் படைகள் மட்டுமல்ல அவர்களின் தேவைக்கான அனைத்து ஆயுத தளபாடங்களும் இங்கு வந்து இறங்கிவிட்டன. பாதுகாப்பு அமைச்சும்- சிவில்விமானப் போக்குவரத்து அமைச்சும் தமக்கு சாதகமான முறையில் அனைத்திற்கும் நியாயம் கூறி தப்ப முனைவது இலங்கையின் பாதுகாப்புக்கு எந்த வகையிலும் உதவப்போவது கிடையாது.

## சிங்கள இனவாதிகளின் சுயநலம்



சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் தேர்தல் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட 'சந்தர்ப்பவாத' கூட்டணிக்கான உடன்படிக்கை தொடர்பான விடயங்களில், சனாதிபதி தரப்பினர் பாதிப்பு ஏற்படும் வகையில் நடப்பார்களேயானால் அதன்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் எனவும், இது தொடர்பாக தாம் தனித்து தீர்மானங்களை எடுக்கவேண்டி நேரிடுமென்றும் ஜே.வி.பியினரின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அரசுக்குக் கடும் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இது அவரின் உண்மையான எச்சரிக்கையா, அல்லது வெறும் மிரட்டல்தானா என ஆராய்வது ஒரு புறமிருக்க இப்படி ஒரு அச்சுறுத்தலை வெளிப்படையாக சனாதிபதியை நோக்கி விடுமளவுக்கு ஜே.வி.பி ஆட்சிக்குள் அதிகார பலம் கொண்ட ஆதிக்க சக்தியாக வளர்ந்துள்ளது என்பது வெளிப்படையாகியுள்ளதுடன், ஜே.வி.பியினரின் அதிகார தோரணை கொண்ட செயற்பாடுகளால் அரசுக்குள் சி.ல.சு. கட்சிக்கு சவாலான பங்காளியாக ஜே.வி.பி வளர்ந்து விட்டுள்ளதையும் உணரக்கூடியதாக உள்ளது.

சாத்தானோடு கூட்டுச்சேர்ந்துள்ள சனாதிபதி அதன் மிரட்டல்களுக்கெல்லாம் இது நாள்வரை பணிந்து வந்துள்ள நிலையில் இப்போது அவருக்கும், அவரது 'பண்டா' பாரம்பரிய அரசியலுக்கும் அவரது பிரதான தோழமைப்பங்காளிகளே மோசமான எதிரிகளாக உருவாகிவருகின்ற சூழலில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேறு ஏதாவது புதிய பேயுடன் கூட்டுச்சேரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார் என்று கூறப்படுகிறது. இந்த நிர்ப்பந்தத்திற்கு 'சுனாமியால்' ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடிகளும், சர்வதேச அழுத்தங்களுமே காரணம்.

'இரவல் புடவையில் இது நல்லகொய்யகம்' என்பதுபோல் 'சுனாமி'யால் கிடைத்துவரும் உதவிகளை தமது சுய அரசியல் இலாபங்களை நோக்கிய பிரசாரத்திற்கு ஜே.வி.பியும், தனது ஆட்சியை தக்கவைக்கும் முயற்சிகளும் சனாதிபதியும் பயன்படுத்த நினைப்பதும் முயற்சிப்பதும் சர்வதேச சமூகத்திற்கு எரிச்சலூட்டும் விடயங்களாகிவிட்டுள்ள நிலையில் ஜே.வி.பியை அடக்கி வாசிக்குமாறும், மனிதநேயப்பணிகளில் குறுக்கிடாது இருக்குமாறும், சனாதிபதி கூட்டணிப் புரோக்கர்களான மங்கள சமரவீர மற்றும் அநுரா பண்டார நாயக்க மூலம் ஜே.வி.பி தலைமைக்கு விடுத்துள்ள மறைமுக எச்சரிக்கையே அவர்களை சீற்றம் கொள்ளச்செய்துள்ளதாம்.

இந்த நிலையில் கடந்த ஒன்பது மாத காலத்துள் ஆட்சியின் சகல கட்டமைப் புகளுள்ளும், நன்கு வேரூன்றிவிட்ட ஜே.வி.பியினர் மீண்டும் ஒரு கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபடும் நோக்குடனேயே தமது சகல நடடிக்கைகளையும் திட்டமிடுவதாகவும் இதற்கு பிராந்திய வல்லாதிக்க சக்தியொன்று பின்னணியில் இயங்குவதாகவும் தென்னிலங்கை அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

எதுவானாலும் சந்தர்ப்பவாத ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணிக்குள் சுயநலவாதம் ஆட்சியை சிதைக்குமளவிற்கு விரிசலை ஏற்படுத்திவருகிறது.

## நன்றி...லால்காந்த அவர்களே... நன்றி..!



இன்றைய சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு எப்படிப்பட்டது என்பதை வெளியார்கள் எவரும் விமர்சித்தால் அது காழ்ப்புணர்ச்சியுடன் கூறப்படும் ஒரு கருத்துத்தான் என்றே எவரும் எண்ணக் கூடும். ஆனால் அந்த விமர்சனத்தை அதே அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய பங்காளிகளே முன்வைத்தால் என்ன நடக்கும் ? நம்பத்தானே வேண்டும்.

சுனாமி பேரலை அனர்த்தத்தால் சிதையுண்டு போன மக்களின் வாழ்க்கையையும் தேசத்தையும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் மீளக்கட்டியெழுப்புவோம் என்று அரசும் சனாதிபதியும் உலகமறிய ஓங்கிக் குரல் எழுப்பிய போது பாதிப்புக்குள்ளான மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது இயற்கையே.

ஆனால், சனாதிபதியுடன் அதே கோசத்தை இன்னமும் ஓங்கி ஒலிக்க வேண்டிய அவரது சமகால அரசியல் பங்காளிகளான ஜே.வி.பி யினர் அதற்கு மாறாக தாங்கள் அங்கம் வகிக்கும் அரசையே மட்டகரமானதாக விமர்சனம் செய்கையில் எல்லா நம்பிக்கைகளும் புஸ்வானமாகியல்லவா போய்விட்டன.

அண்மையில் ஜே.வி.பி யின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் அமைச்சருமான லால்காந்த அவர்கள் சிறிலங்காவை மீளக் கட்டியெழுப்பக் கூடிய தலைமையை தற்போதைய அரசிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளதுடன் முன்னொரு காலத்தில் சக்கரவர்த்தி ஒருவர் முட்டாள் தனமாக நிர்வாணமாக பவனிவந்த கதையொன்றை உதாரணப்படுத்தி அப்படிப் பட்ட முட்டாளாகவே சிறிலங்கா அரசு செயற்படுவதாகவும் விளங்கியுள்ளார்.

நன்றி ... மிஸ்டர் அமைச்சர் லால்காந்தா அவர்களே... மிக்க நன்றி!

உங்களையும் உங்கள் கட்சியின் ஏனையோரையும் உள்ளடக்கிய ஒரு அரசு முட்டாள்த் தனமான அரசாகவே இருக்கும் என்பதை உங்கள் வாயாலேயே ஒப்புக் கொண்டு விட்டீர்கள்... மிக்க நன்றி....!

உங்களையெல்லாம் அமைச்சர்களாக ஏற்று அங்கீகரித்து மக்களை ஆளும் அதிகாரத்தையும் வழங்கிய தலைமை எவ்வளவு முட்டாள் தனமுடைதாக இருக்கும் என விபரிக்கவே தேவையில்லை.

முட்டாள்களுக்கு ஒருபோதும் ஒரு புத்திசாலி தலைமைதாங்கவோ, அல்லது அவர்களை வழி நடத்தவோ மாட்டான். அதற்கு ஒரு அடிமுட்டாளால்தான் முடியும்.

அப்படியானால் அப்படிப்பட்ட அடி முட்டாள் தனமான தலைமையென யாரை நீங்கள் கூறுகிறீர்கள்...? சனாதிபதியையா....? பிரதமரையா? அந்த அடிமுட்டாள் தலைமையை ஏற்றுக்கொண்டு ஆட்சியில் ஒட்டிக்கொண்டுள்ள உங்கள் தலைமையின் முட்டாள்தனத்தை எப்படி வர்ணிப்பதாம்? எப்படியோ உங்களையெல்லாம் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த மக்களின் தன்மையை முட்டாள்தனத்தின் உச்சம் என்பதா ?அறியாமையின் உச்சம் என்பதா?

எப்படியோ முட்டாள்களுக்காக முட்டாள்களே நடத்தும் முட்டாள் தனமான அரசாங்கம் என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டு விட்டீர்கள்! அதுவே போதும்.


**செங்குட்டுவன்**

# புலனாய்வுச் சமூகத்தின் ஆற்றலும் பலமும்

தரணியிலுள்ள எல்லா நாடுகளும் பல்வேறு நவீன புலனாய்வு உத்திகளை உருவாக்கி அவற்றை தமது தேவைக்கு ஏற்ப புலனாய்வுப் போரியலினுள் உட்படுத்தி புலனாய்வு ஆற்றலை விருத்தி செய்து வருகின்றன.

நாடுகள் தமது பாதுகாப்பு, நலன்கள் போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தி பலமுள்ள நாடுகளாக தம்மை ஆக்கிக்கொள்ள புலனாய்வுச் சமூகத்தின் ஆற்றலின் பின்னணி விளைவுகளிலேயே பெருமளவு தங்கியிருக்கின்றது.

நாட்டினது உள்ளரங்க பாதுகாப்பு விவகாரங்களைக்கருத்திற் கொண்டு உள்ளக மேற்பார்வை, உள்ளக பரிசோதனை ஆகிய பணிகளினுள் புலனாய்வு ஆற்றலை பயன்படுத்தியும், சுற்றியுள்ள நாடுகளில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி ஒரு நோட்டம் விடவும், மறைமுகமாக உட்புகுந்த எதிரியை பலவீனப்படுத்தவும் புலனாய்வு ஆற்றலை ஒருமித்த முனைப்போடு பிரயோகித்தும் வருகின்றது.




புலனாய்வு ஆற்றலுள்ள புலனாய்வு சமூகம் தமது நாட்டிற்காக சுய திடத்துடன் அர்ப்பணித்துவருகின்றது. அதாவது உலகம் முழுவதுமாக நூற்றுக்கணக்கான முனைகளில் இருந்தவாறு முகவர்கள் மிகப் பெறுமதிமிக்க ஆயுதங்களை அந்நாட்டிற்கு வழங்கும் தங்கள் பணியினை சந்தடியின்றிச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதுதான் அறிவாயுதம்.

தரணியெங்கும் வியாபித்திருக்கின்ற புலனாய்வு அமைப்பினுள் சி.ஐ.ஏ, மொசாட், பிரித்தானிய புலனாய்வு நிறுவனம் (Mi-5, Mi-6) ஆகிய நிறுவனங்கள் தமது அறிவாயுதம் மூலம் புலனாய்வு ஆற்றலை, புலனாய்வுப் பலத்தை பெறுகின்றன. இது அந்நாடுகளுக்கு போரிடும் வல்லமையைக்கொடுக்கும் சக்தியாக இருந்துவருகின்றது.

சி.ஐ.ஏ. ஆள்சேர்க்கும் இயக்கமொன்றை 1981 இல் ஆரம்பித்தது. அதாவது புத்திக்கூர்மை மிக்கவர்களை சி.ஐ.ஏ இல் வேலைக்கமர்த்துவதற்காகத் திறமைமிக்கவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டது.

உளவுவேலை செய்வதற்கு ஆயுதங்கள் பாவிப்பதில் திறமையும், வலிமை மிகுந்த உடல்வாகும் தேவையில்லையாயினும், தகவல்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து அவற்றை வகைப்படுத்தும் புலனாய்வு ஆற்றலும், விரைவான, தெளிவான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலும் தேவையென்பதை சி.ஐ.ஏ யின் ஆட்சேர்ப்பதற்கான விளம்பரங்கள் தெட்டத்தெளிவாக எடுத்துரைத்தன.

சி.ஐ.ஏ இந்த விளம்பரங்களை ஒரு பக்கத்தால் செய்து கொண்டு மறுபக்கத்தால் மறைமுக நடவடிக்கைகளை மறைமுகமாகவே விஸ்தரித்து நாசங்களை விளைவித்த நிகழ்வுகள் ஏராளம். அவ்வாறான நிகழ்வுகளினுள் சோவியத் யூனியனின் பொருளாதாரத்தை தளம்பச் செய்வதற்கான சி.ஐ.ஏ இயக்குனர் வில்லியம் கனி என்பவரின் மறைமுக நடவடிக்கை ஒன்றை இங்கு பார்ப்போம்.

அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போர் நடைபெற்றுவந்தது. இக்காலப்பகுதியின் போது மேற்குலக நாடுகளின் நவீன தொழில்நுட்பத்தை பெறுவதற்காக சோவியத் அதிகாரிகள் "டிரக்டரேட்டரி" எனும் பெயரில் புதிய பிரிவொன்றை இரகசியமாக 1970 ஆம் ஆண்டில் ஆரம்பித்தனர்.

இதேவேளை சோவியத் திடமிருந்து மேற்குலக நாடுகள் எரிவாயுவை இறக்குமதி செய்வதை தடுப்பதற்கு அமெரிக்கா முயற்சி செய்தது. இத்தகைய சூழ்நிலையில் தான் சோவியத்யூனியனின் எரிவாயு தொழிற்சாலைக்கான பொருட்கள் கொள்வனவுப் பட்டியலொன்றும் சி.ஐ.ஏ க்கு கிடைத்தது.

இதையடுத்தே சிறிது காலம் ஒழுங்காக வேலைசெய்து இறுதியில் நாசம் விளைவிக்கக்கூடிய, இயற்கை எரிவாயு குழாயை கட்டுப்படுத்துவதற்கான கணனி மென்பொருட்களை போலியாகத் தயாரித்து சி.ஐ.ஏ முகவர்களால் "டிரக்ட ரேட்டரி"க்குக் கொடுக்கப்பட்டது.

**— நீலன் —**

சி.ஐ.ஏ கொடுத்த போலி கணனி மென்பொருள் பம்பிகளின் வேகத்தையும், வால்வுகளின் இயக்கத்தையும் தாறுமாறாக்கி 1982 ஆம் ஆண்டு சைபீரியாவின் ஊடாக சென்ற எரிவாயுக்குழாயில் பாரிய வெடிவிபத்து ஏற்பட்டு சோவியத் பொருளாதாரத்தில் தளம்பலை உண்டாக்கியது.

இதுபோன்ற திகைப்புறச் செய்யும் பேரழிவுகளை உண்டு பண்ணும் மறைமுகப்புலனாய்வு நகர்வுகள் இருந்தபோதிலும், பற்பல உத்திகளை பயன்படுத்தி திருப்பு முனைகளை ஏற்படுத்தும் திறவுகோலாக புலனாய்வு ஆற்றல் இருந்துள்ள பிறிதொரு உண்மை. உதாரணமொன்றை இங்கு நோக்குவோம்.

பிரித்தானிய உளவாளியான றெய்லி சர்வதேச அரசியல் மாறுதல்கள் நிகழப்போகின்ற முக்கியமான இடங்களை உளவறிந்து கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தார்.

இந்தப் புலனாய்வு ஆற்றலால் பெற்றோலியத்துக்கான கண்டுபிடிப்பு மத்திய கிழக்கில் தொடங்குமென றெய்லி பிரித்தானியாவிற்கு வெளிப்படுத்தினார். இதற்கு அமைவாக அவர் ஈரானுக்கு பயணமானார்.

ஈரான் மன்னர் "ஷ" பெற்றோலியம் ஆராய்ச்சி செய்வதற்கான உரிமைகளை அவுஸ்திரேலியரான வில்லியம் டி.ஆர்சிக்கு வழங்கியுள்ள தகவலை அங்கு அவர் அறியநேரிட்டது. அத்துடன் கோடீஸ்வரரான றொதஸ் சைலருடன் தனது திட்டத்தில் முதலீடுசெய்யுமாறு டீ.ஆர்சி பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டிருந்த தகவலையும் பெற்றுக்கொண்ட றெய்லி மதகுருபோல் வேடமணிந்து ஆலயத்திற்கு நிதிசேகரிப்பதாக றொத்ஸ் சைலடின் உல்லாசப் படகிற்குள் சென்றார். அச்சமயம் டீ.ஆர்சி றொத்ஸ் இருவரும் கலந்துரையாடிய பின்னர் காசோலை ஒன்றில் கையெழுத்திடும் வேலையில் றொத்ஸ் ஈடுபட்டிருக்கும் பொழுது றெய்லி ஒரு தந்திரத்தை கையாண்டார்.

டீ.ஆர்சியை றெய்லி ஒரு பக்கமாக அழைத்துச்சென்று இந்த திட்டத்தில் பிரிட்டிஸ் அரசாங்கம் முதலீடு செய்வதற்கு விருப்பம் கொண்டிருப்பதை இரகசியமாக அவருக்குக் கூறினார்.

இதன் பயனாக 1905 ஆம் ஆண்டு பிரிட்டிஸ் பெற்றோலியக் கொம்பனியை நிறுவி மத்திய கிழக்கில் எண்ணெய்க்கான முயற்சியில் பிரித்தானியா வெற்றிபெற்றது. இதற்காகவும் இன்றும் சில உளவுப் பணிகளுக்காகவும் பிரித்தானியா றெய்லிக்கு மிலிட்டரிகுரோஸ் (இராணுவக் குருசு) பதக்கத்தை வழங்கிக் கௌரவித்தது.

இஸ்ரேல் மிகச்சிறிய நாடு என்பதனால் அதன் புலனாய்வு நிறுவனம் ஆளணி வளம் மற்றும் நிதிவளம் இரண்டிலுமே வளங்கள் மிகக்குறைந்தனவாக இருந்தன. இருப்பினும் புலனாய்வுச் சமூகத்தின் ஆற்றலும், பலத்தையும் அது கொண்டிருந்தது.

இஸ்ரேலுக்குப் பயன்படக் கூடிய வெளிநாட்டுத் தகவல்களை சேகரிப்பதும் பகுப்பாய்வு செய்வதும் அதன் பணியாக இருந்தபோதிலும் மொசாட் மறைமுக நடவடிக்கைக்காகத் தனது புலனாய்வு ஆற்றலை, பலத்தை தேவைக்கு ஏற்ப உபயோகித்து பலவெற்றிகளைப் பெற்றுவந்துள்ளது.

இந்த நாடு பகையுணர்வான அரபு நாடுகளாலேயே சூழப்பட்டிருந்ததனால் இஸ்ரேலை சகல துறைகளிலும் பலப்படுத்துவதும் மொசாட்டின் முதன்மைப் பணிகளாக இருந்தன.

அரபு நாடுகளுடனான போரின் போது இஸ்ரேலின் விமானப் படை பிரெஞ்சு நாட்டு "மிராஜ்" குண்டு வீச்சு விமானங்களைப் பயன்படுத்தியது. இக்காலப் பகுதியில்தான் பிரேஞ்சு அரசு இஸ்ரேலியர் மீது ஆயுதத்தடையுத்தரவைப் பிறப்பித்தது.

"மிராஜ்" விமானங்களுக்கு போரின்போது சேதாரங்கள் ஏற்படுமாயின் அவற்றைச் சீர்படுத்தி திருத்தங்களை மேற்கொள்வதற்கான உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்வதில் மிக நெருக்கடியை ஆயுதத் தடையுத்தரவு உருவாக்கியது.

சுவிஸ்லாந்தில் 'மிராஜ்' விமானங்களின் கட்டுமான வேலைக்கு மேற்பார்வை செய்யும் பொறுப்பில் பொறியியலாளர் ப்ரவுன் இருந்தார். அவர் இஸ்ரேலியர் மீது அனுதாபம் கொண்டவராக இருக்கின்றார் என்கிற தகவலை பெற்றுக்கொண்ட மொசாட், ப்ரவுனை அணுகி தமக்கு சார்பாக செயற்படக்கூடிய இரகசியத் திட்டமொன்றை முன்வைத்தது. ஆனால் அந்தத் திட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

மிராஜ் திட்ட வரைபடங்கள் நீலப் பதிப்புக்களாக (BLUE PRINTS) காணப்பட்ட இரண்டு தொன் நிறைக்கும் அதிகமானவற்றை கடத்தும் திட்டம் இரு பகுதியினராலும் வகுக்கப்பட்டு அதற்கான நகர்வுகள் ஆரம்பித்தன.

சுவிஸ் இராணுவப் புலனாய்வு அமைப்பானது நீலப்பதிப்புகள் இருக்கும் இடத்தை கடுமையான உள்ளக மேற்பார்வையின் கீழ் வைத்திருந்தது. எனினும் ப்ரவுன் பொறுப்பில் அந்த இடம் இருந்ததனால் நீலப்பதிப்புக்கள் அனைத்தும் துரிதமாகவும், சந்தடியின்றியும் இஸ்ரேலிய விமானத்தொழில்மையத்தினுள் பாதுகாப்பாக வந்தடைந்தன.

மொசாட்டின் புலனாய்வு ஆற்றலாலும், பலத்தாலும் 1975 இல் கிபிர் (KIFIR) இஸ்ரேல் தலைநகரில் வெள்ளோட்டப் பறப்பை மேற்கொண்டது. அதனைப்பார்த்த இராணுவ வல்லுநர்கள் மிராஜின் புத்திரன் என பெருமிதம் கொண்டனர்.

இவ்வாறே ரஷ்ய தயாரிப்பான அதி நவீன தொழில் நுட்பங்களைக்கொண்ட மிக் 21 (MIG) மொசாட்டின் புலனாய்வு ஆற்றலால் 1966 இல் ஈராக்கிலிருந்து கடத்தப்பட்டு இஸ்ரேல் விமான ஓடு தளத்திற்கு வந்து இறங்கியது.

இந்த வெற்றிகரமான நடவடிக்கைக்கு நியூயோர்க்கில் பிறந்த அமெரிக்க கடவுச்சீட்டினை வைத்திருந்த பெண்முகவரை ஊடுருவலுக்கு மொசாட் பயன்படுத்தியது. அதாவது முனீர் ரெட்பா என்கிற கிறிஸ்தவரான ஈராக் விமானியை மொசாட் தம்வலையில் வீழ்த்த பெண் முகவரை களத்தில் இறக்கியது. அதில் வெற்றியும் பெற்றது.

இஸ்ரேல் மிகச்சிறிய நாடாக இருந்தபோதிலும் பலமுள்ள யூத இனமாக இன்று திகழ்கின்றது. இந்தியாபோன்ற பெரும் வல்லரசு நாடுகள்கூட இஸ்ரேலின் நவீன தொழில்நுட்பங்களையும், புலனாய்வு உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தங்களை செய்துள்ளன. இத்தகைய பலமானதளம் உருவாகுவதற்கு யூதர்களின் தேச பக்தியும், இனபக்தியும் காரணமாக இருந்தபோதிலும் யூதப் புலனாய்வுச் சமூகத்தின் ஆற்றல்கள் இஸ்ரேல் தேசத்தை பலமாக்கிக்கொள்ள ஆதிகாரணமாக இருக்கின்றது.




யூத இனத்தை ஒத்த தனித்துவமான குண இயல்புகள், தொன்மை, அறிவுப்பலம்போன்ற சிறப்புப் பண்புகள் தமிழ் இனத்திற்கும் உண்டு. தமிழ் இனம் பலமுள்ள இனமாக 1621 ஆம் ஆண்டுவரை இறையாண்மையோடு வாழ்ந்துள்ளது. இடையில் சுமார் 350 ஆண்டுகள் பலம் இழந்து அடிமை இனமாக வாழவேண்டிய நிலைக்கு தமிழர் தள்ளப்பட்டனர்.

இன்று 1621 ஆம் ஆண்டு இழந்த இறையாண்மையை தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் மீளப்பெற்று நவீனபலத்தோடு தமிழர் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்.

தமிழர் பலத்தின் அளவுகோலின் மறுபுறத்தில் புலனாய்வுச் சமூகத்தின் ஆற்றலும், பலமும் முக்கிய இடம் வகிக்கிறது. ஆகவே தமிழர் உயிரோட்டமான புலனாய்வுப் பங்களிப்பை செய்து புலனாய்வு ஆற்றலை விருத்தி செய்வதன் மூலமே தமிழீழம் உலகில் பலமுள்ள தேசமாக விளங்க வழிகோலும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 28 . 01 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## வினைத்திறனுடன் செயற்படமுடியா அரசு!

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச நாடுகள் வழங்கும் உதவிகள் பாதிப்படைந்த மக்களுக்கு உரிய முறையில் சென்றடைய வேண்டுமானால் அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றிற்கு முன்வரவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் நாட்டில் கரையோரத்தை தாக்கிய சுனாமி பேரலையால் எழுந்தபெரும் நெருக்கடியை கையாண்ட விதத்தில் அரசைவிட புலிகள் அதிக வினைத்திறனுடன் செயற்பட்டனர்.

புலிகளின் இந்த விரைவுச் செயற்பாட்டை சர்வதேச நாடுகளும் ஊடகங்களும் பெரிதும் பாராட்டின.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சர்வதேச நாடுகளால் வழங்கப்படும் உதவிகளை கையாள்வதில் அதிலும் குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான உதவிகள் புலிகள் இயக்கம் வலியுறுத்துவது போன்று காத்திரமான பொதுக் கட்டமைப்பினூடாக மேற்கொள்வது அவசியமாகிறது.

ஏனெனில் பெரும் இடரை சந்தித்துள்ள மக்களின் மனிதாபிமான பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விவகாரம் இது.

இதில் அரசியல் சித்து விளையாட்டுகளுக்கு அப்பால் அவசர மற்றும் மனிதாபிமான ரீதியில் மக்களின் துயரை நீக்குவதற்காக யதார்த்தத்துக்குப் பொருத்தமான வகையில் களத்தை மதிப்பீடு செய்துசெயற்படவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இதில் சர்வதேச சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு அவசியமாகிறது.

அரசு இன்னும் தமிழர் தாயகப்பகுதியின் யதார்த்த சூழ்நிலையை புரிந்துகொண்டு செயற்படுவது போல தெரியவில்லை.

எந்தவொரு சூழ்நிலையிலும் தமிழர் தாயகத்திற்கு சர்வதேச உதவிகள் நேரடியாக வழங்கப்படுவதை ஜீரணித்துக் கொள்ள முடியாதவர் களாகவே காணப்படுகின்றனர்.

இதனை சனாதிபதியின் பேச்சாளரான கரிம்பீரிஸ் தெரிவித்துள்ள கூற்று உறுதிப்படுத்துவதோடு யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளாத அரசின் வரட்டுப்போக்கையும் காட்டுகிறது.

“ஆழிப்பேரலை அனர்த்த பாதிப்பு நிவாரண உதவிகள் வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்த வெளிநாடும் இங்கு அரசு அல்லாத அமைப்போடு நேரடியாக இவ்விடயத்தை கையாளமுடியாது” எனத் தெரிவித்திருப்பது இதனையே காட்டுகிறது.

இதே நேரம் அரசு வினைத்திறனுடன் கூடிய வகையில் செயற்படவும் முடியாது திணறி வருவதைக் காணக்கூடியதாகவும் உள்ளது.

இதற்கு அரசின் தலைமை அமைச்சரவை மட்டத்திலிருந்து நிர்வாகக் கட்டமைப்புவரை பரந்து காணப்படும் ஊழல் மற்றும் மோசடிகளே பிரதான காரணமாகவுள்ளது.

இந்த நிலையில் அரசு தெரிவிக்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அழைப்பு தொடர்பாக தமிழர்தரப்பு நிதானமாக இருக்கவேண்டியதேவையுள்ளது.

அரசு இப்பொழுதும் தமிழர்தரப்பை பக்கத் துணையாகப்பயன்படுத்தி தனது பொருளாதார மீட்சியையும் அரசியல் இலாபத்தையும் தேடிக்கொள்ளவே முனைகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தை தொடர்ந்து தோன்றியுள்ள சூழலைப் பயன்படுத்தி சமாதான முயற்சிக்கு ஏற்ற வகையில் பாதை அமைக்க வாய்த்துள்ள நல்லதொரு வாய்ப்பை அரசு பயன்படுத்துமா அல்லது கைகழுவி விடுமா என்பது இப்போது உள்ள பெரும் கேள்வி.

## அரச ஊடகங்களின் அருவருப்பூட்டும் “பணிகள்”

பு.சத்தியமூர்த்தி

வின்செென்ற் புளோறன்ஸின் ‘வெறும்வாயை மெல்லும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள்’ எனும் கட்டுரையினை கடந்த 7ஆம் திகதி வெள்ளிநாதத்தில் படிக்கக் கிடைத்தது. அதனைத்தொடந்த வாசகங்களில் சிறிலங்கா அரச ஊடகங்கள் நடந்து கொண்ட முறைமையைக் கவனித்த போது மேற்படி கட்டுரையின் தலைப்பின் கொள்ளவு போதுமானதல்ல என எண்ணத்தோன்றியது.

நிறைவேறாத எண்ணங்களே கனவுகளாகின்றன என்பது உளவியல். அதேபோல ஆள்மன எதிர்பார்ப்புகளே சடுதியாக வார்த்தைப் பிரயோகங்களாக வெளிவருவதும் நிகழ்கிறது. பெரும்பாலான கொழும்பு மைய ஊடகங்களின் - வீரகேசரி, தினக்குரல், சுடரொளி போன்ற விரல்விட்டு எண்ணக் கூடியவை தவிர்ந்த - சொல்நெறியை மேற்கூறிய பின்னணியில் வைத்துப் பார்க்கும் ஒருவருக்கு அவற்றின் ஆழ்மன ஆவல் என்னவென்பது வெள்ளிடை மலையாக தெரியவரும். அத்தோடு அந்த ஆவல் எந்தளவுக்கு வேர்விட்டு விழுதெறிந்து நிற்கிறதென்பதை கணித்துக்கொள்ளும் போது ஒரு புறம் பரிதாபமும் மறுபுறம் அருவருப்பும் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் இருக்கிறது.

சுனாமியின் பின்னான நாட்களில் நாடு பேரழிவில் சிக்கி அதிலிருந்து மீளத்துடிக்கும்போது அரச ஊடகங்கள் எவ்வாறு செயற்படல் வேண்டும்? அவற்றின் முழுக்கவனமும் மக்களின் பாதிப்புக்கள், அவற்றிலிருந்து மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகள், அவற்றிலான குறைநிறைகள், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய குறுங்கால நீண்டகாலத் திட்டங்கள் என்பன பற்றியல்லவா அவை சிந்தித்தல் வேண்டும்?

இவற்றில் இருந்து விலகிச் செல்பவர்களையும் அந்தப் பாதைக்குள் ஈர்த்தெடுக்கும் வேலைத்திட்டங்களையல்லவா அரச ஊடகங்கள் கடைப்பிடிக்கவேண்டும்.

ஆனால், சிறிலங்காவின் அரச ஊடகங்கள் என்ன செய்தன? தாங்கள் எதிர்த்தரப்பென்று வரித்துக் கொண்ட தரப்புகள்மீது குறிவைத்துத் தாக்குவதற்கு ஒரு ஆயுதமாக சுனாமி பேரழிவை அவை எடுத்துக் கொண்டன. யதார்த்தத்திற்கு அப்பால்பட்டு அவை சிந்திப்பதுவும் நடந்துகொள்வதுவும் ஊடக தர்மத்தை மட்டுமல்ல பகுத்தறிவைக்கூட புறமொதுக்கியதாக அமைந்திருந்தது. நடுநிலையான விமர்சகர்களையே அருவருப்படைய வைக்கக் கூடியதாய் இருந்தது.

அடிப்படையற்ற “விருப்பார்வங்களை” தகவல்களாகவும், அறிக்கைகளாகவும் வெளியிட்டு அவற்றுக்கு அதீத முக்கியத்துவம் அளித்து ‘குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் குள்ள நரித்தனத்தோடு’ அரச ஊடகங்கள் நடந்து கொண்டன.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டு தற்போது அநாமதேயமாக இயங்கிவரும் முரளிதரன் தெரிவித்ததாக இணையத் தளமொன்றில் வெளியாகி இருந்த ஒரு தகவலை சனவரி மூன்றாம் வாரத்தில் முக்கியத்துவமளித்து பிரசாரப்படுத்தியது அரச தொலைக் காட்சியான ITN.

தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் சுனாமி அலையின் தாக்கத்திற்கு உள்ளாகிவிட்டார் என்றவாறு முரளிதரன் தெரிவித்த தகவலை ITN வெகு குதூகலத்துடன் வெளியிட்டது. ஏனைய அலைவரிசைகளும் பத்திரிகைகளும் இதனை வெகுபக்குவமாக எதிரொலித்தன.

இதே தகவலை சிறிலங்காவின் முப்படை அதிகாரி தயாசந்த கிரியை மேற்கோள் காட்டி சனவரி முதல் வாரத்தில் அரச ஊடகங்கள் கூக்குரல் இட்டதையும் அதற்கு அரசியல்துறை மறுப்பறிக்கை வெளியிட்டிருந்ததும் தெரிந்த ஒன்று.

அதன் பின் இருவாரங்கள் கழித்து மீண்டும் அதே தகவலை ஒரு அநாமதேய மனிதனை மேற்கோள் காட்டி ‘புதுக்கரடி’ ஒன்று விட்டிருக்கின்றது அரச ஊடகங்கள்.

இந்த ஊடகங்கள் உண்மையிலேயே ஒரு நம்பிக்கையான தகவல் மூலத்தைக் கொண்டிருக்குமாயின், தாம் வெளியிட்ட தகவலை ஏன் அரசாங்கத்தின் ஏதோ ஒரு அலகை மேற்கோள்காட்டி வெளியிட்டிருக்கக்கூடாது? தமது தகவல் மூலமாக ஒரு அநாமதேய மனிதனை அதுவும் ஒரு இணையத்தில் அந்த மனிதன் வெளியிட்ட செய்தியை ஏன் தூக்கிப்பிடிக்கவேண்டும்?

அரசாங்கம் தனது எதிரியாக வரித்துக்கொண்ட தரப்பை எப்படியும் எந்த வேளையிலும் பலவீனப்படுத்த எதனையும் செய்யத் தயாராக இருக்கிறதென்பதே இதன் அர்த்தம். அதற்குமப்பால் நேர்மை, நாகரிகம் ஊடக தர்மம் என்பன பற்றியெல்லாம் அவை கவனத்திற் கொள்வதில்லை.

இதற்கு மற்றுமொரு உதாரணத்தை இங்கே தரலாம். இது ஒரு உள்வீட்டு உதாரணம். முதலில் நாம் கூறியதைப் போன்று எதிர்த்தரப்பு அதை அரச ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் மங்கள சமரவீர அமைத்த ‘ஊடக உளவுப்படை’ அமைச்சருக்குத் தேவையான தகவல்களை திரட்டிக்கொடுப்பதுவும்; திரட்டிய தகவல்களை அமைச்சருக்கு ஏற்றவிதத்தில் வெளியிடுவதுமே அரச ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் செய்யும் பணி.

இதனை மங்கள சமர வீர அரச ஊடகங்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல் என்பதன்மூலம் மிகத் துல்லியமாக விளங்கிக்கொள்ள முடியும்.“அரச ஊடகங்களின் வேலை எதிர்த்தரப்பினரை தாக்குவதே!” என்பது மங்கள சமரவீரவின் தத்துவம்.

அவரின் வழிகாட்டலின் கீழ் இருக்கும் ஊடகங்களால் வேறு எதைத்தான் செய்து விட முடியும்?

ஏனெனில் ‘அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி’ அல்லவா?



உதாரணமல்ல.

சிறிலங்கா பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் நடவடிக்கைகளை அவதானிக்க ‘ஊடக உளவுப்படை’ ஒன்றை அமைத்திருக்கிறார் சிறிலங்காவின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.காரணம் என்னவெனில் சுனாமிக்குப் பின்னான நிவாரண நடவடிக்கைகளில் இவர்கள் இருவருக்கும் அதிக முக்கியத்துவம் அரச ஊடகங்களில் வழக்கப்பட்டு வருவதாக ஊடகத்துறை அமைச்சருக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளதாகும். அதன் காரணமாக மேற்படி ஊடகப் பிரபல்யத்தை அவர்களுக்கு கிடைக்காமல் செய்வதற்காகவே ஊடக உளவுப் படை அமைக்கப்பட்டு இருக்கிறது!

எப்படியிருக்கிறது? ஒரு பிரதமர் முக்கியத்துவம் பெறுவதாக, அவரது அமைச்சரவையில் இருக்கும் மற்றுமொரு அமைச்சர் காட்டமாகி உள்ளதோடு அதனைத் தடுக்கவும் முற்படுகிறார். இவர்களிடம் எதிர்த்தரப்பு மீது எவ்வாறான நடவடிக்கை அல்லது மனநிலை காணப்படும் என்பதை ஊகித்துக்கொள்வது கடினமானதாகவே இருக்கப் போவதில்லையே!

# புஷ்ஷின் இரண்டாவது பதவிக்காலம்



உலக அரசியலில் அமெரிக்க சனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு தனித்துவமான பதிவை ஏற்படுத்தியிருந்தது. உதிரிகளான அரசுகளின் ஆட்சியாளர்களைக் காட்டிலும் அதிகார அடிப்படையிலும் கௌரவமான பதவி என்பதிலும் உலகளாவிய தலைமைப் பதவி என்பதிலும் அமெரிக்க சனாதிபதி முதன்மையானவர் என்பதையே காட்டி நிற்கிறது. அத்தகைய பதவியிலும் வில்லியம் புஷ் இரண்டாவது தடவை பதவியேற்பதென்பதே அதைவிடவும் முதன்மையானதும் சுவாரசியமானதுமெனக் கூறலாம். அந்தவகையில் அமெரிக்காவின் போக்கிலும் சனாதிபதி புஷ்ஷின் போக்கிலும் காணப்போகும் மாறுதல் பற்றி பரிசீலிப்போம்.

இரண்டாவது தடவை பதவி ஏற்கும்போது அதற்கு முன்பு சனாதிபதி புஷ் தனது கடந்த கால அரசியல் நடத்தையை மதிப்பீடு செய்தவர்போன்றே காணப்பட்டார். குறிப்பாக அமெரிக்காவின் பெயருக்கு களங்கம் ஏற்படும் என்பதாகவும், தனது கடுமையான போக்குகளோ, அதற்கான அணுகுமுறைகளோ இனி நடைபெறாது எனவும் புஷ் வெளிப்படையாக பிரஸ்தாபித்திருந்தார். தனது முதலாவது ஆட்சிக்காலத்திலான அமெரிக்க சனாதிபதி என்ற விதத்தில் அரசியல் நடத்தைகளை கண்டு மனம் வருந்துவதாகவும் கூறிக்கொண்டார். அதன்படி பார்த்தால் வில்லியம் புஷ் புதிய பிறவியாக மாறப்போவதுபோல் காட்டப்பட்டிருந்தது. ஊடகங்கள் அதனைப் பெரிதுபடுத்தி அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கையில் பெரியளவான மாறுதலை எதிர்பார்க்கலாம் எனவும் மென்மையான போக்கை புஷ் கடைப்பிடிக்கக்கூடும் எனவும் பேசப்பட்டது.

ஆனால், அமெரிக்கா சனாதிபதியாக அவர் பதவியேற்றபோது முன்வைத்த உரையில் காணப்பட்ட அம்சங்கள் எப்படியானவை என்பதை உலகம் மறந்திருக்கமுடியாது. கடந்தகாலத்தில் பின்பற்றப்பட்ட வெளிநாட்டுக்கொள்கைக்கும் தற்போது புஷ் பிரஸ்தாபித்திருக்கும் வெளிநாட்டுக்கொள்கைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டினை தெரிந்துகொள்ள புஷ்ஷின் உரையின் முக்கியவிடயங்களை நோக்குவோம்.

முதலில் புஷ் முன்வைத்த அம்சங்கள் அனைத்து உலக நாடுகளை நோக்கிய உலக அரசியலாகக் காணப்பட்டாலும் அவை ஒவ்வொன்றையும் வேறுவேறு விதமாக அமெரிக்க சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட இராசதந்திரிகள் மதிப்பிட்டிருந்தனர். அமெரிக்க சிரேஷ்ட தர அதிகார மட்டத்திலுள்ள அலுவலகர் புஷ்ஷின் உரையின் அடிப்படை வெளிநாட்டுக் கொள்கை அல்ல அது அமெரிக்காவின் நீண்டகால இலக்கின் கொள்கை என்றார். இன்னொருவர் குறிப்பிட்டார். அமரிக்காவின் போக்குக்குரிய சரியான திசையைகொண்ட உரை என்றார். அமெரிக்காவின் இலக்கை திட்டமிட்டு கொண்ட உரையாக அமைந்தாலும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு சரியான நேர்த்தியான கலாசார அடிப்படைகளை, பண்பாடுகளை, வரலாற்று மூலகங்களை, பாரம்பரியங்களை உணர்த்துகின்றதாகவும் மதிப்பீடு செய்துகொண்டனர்.

இத்தகைய மதிப்பீடுகளும், கருத்துக்களும் காணப்பட்டாலும் அதனை தெளிவான வெளிநாட்டுக் கொள்கையாகவே நோக்கப்படவேண்டும். அதனை ஆதாரப்படுத்த முயலும் பல அமெரிக்கர்களையும் இச்சந்தர்ப்பத்தில் தரிசிக்க முடிந்தது. Joshua Muravchik என்பவர் புஷ்ஷின் உரை உலக அரசாங்கத்துக்கான வெளிநாட்டுக்கொள்கை என்றார். அத்தகைய உலக அரசாங்கத்தை ஸ்தம்பிக்கும் நோக்குடனான அடையாளப்படுத்தலாவே புஷ்ஷின் இரண்டாவது காலப்பகுதிக்கான கொள்கை உள்ளது என்றார். அந்த வகையில் உலக அரசாங்கத்திற்கான அமைப்பையே புஷ் முன்வைத்திருக்கிறார்.

புஷ்ஷின் உரையில் சனநாயக அபிவிருத்தி பற்றி அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், சுதந்திரம் பற்றிய எண்ணப்பாட்டில் மேற்காசியா தொடர்பாகவும் நினைவு படுத்தப்பட்டிருந்தது. மேற்காசியாவின் சுதந்திரம், சனநாயகம் பற்றிய முன்னுதாரண நாடுகளாக ஆப்கானிஸ்தான் ஈராக் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று உலக அரசாங்கத்துக்கான சமிக்ஞை காட்டப்பட்டது போல் ஈரான் தொடர்பான விடயத்திற்குமான பதிலும் அவரது உரையில் அமைந்திருந்தது. ஏனெனில் புஷ்ஷின் உரை மறுதினம் உப சனாதிபதி டிக்செனி குறிப்பிடும்போது மிகமோசமான ஆபத்தினை விளைவிக்கும் பட்டியலில் முதல் நாடு ஈரான் உள்ளது எனக்குறிப்பிட்டார். இதனால் ஈரான் மட்டுமல்ல வடகொரியாவும் கவனம் கொள்வது பொருத்தமானதாகவே உள்ளது.

இவற்றைவிட பயங்கரவாதம் எப்படியாவது தோற்கடிக்கப்படவேண்டும் என்பதில் கவனம கொள்ளும் புஷ் அல்கெய்தாவை அழிப்பதற்கான கொள்கைகளைத்தனது அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தினார். இதனால் அடுத்துவரும் காலப்பகுதியிலும் அமெரிக்காவின் வெளிநாட்டுக்கொள்கையில் பயங்கரவாதம் தவிர்க்கமுடியாத அம்சம் என்பதனை தெளிவாக உணர்த்தியிருக்கின்றது புஷ்ஷின் உரை.

புஷ்ஷின் உரை தொடர்பாக முன்னால் சனாதிபதி ஜோஜ் புஷ் கூறும்போது இது ஒரு இராசதந்திர உரை என்றும், அமெரிக்காவின் உறவு நிலைகளை குறிப்பதாக இருப்பதோடு எதிர்காலத்தில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவுடன் எப்படியான உறவு எனபதை குறிப்பதாகவும் உள்ளது என்றார். மேலும் மக்கள் மத்தியில் தவறாகவும் பிழையாகவும் புஷ்ஷின் உரை திரிபுபடுத்தியும் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் குறைப்பட்டுக்கொண்டார்.

எனவே தெளிவாக புலப்படுகின்றது சர்வதேச மட்டத்திலும் அமெரிக்காவிலும் புஷ்ஷின் உரையில் பலவீனம் உள்ளது என்பது மட்டுமன்றி அதன் தனித்துவம் பதவிக்கான தனித்துவத்துக்கு களங்கம் ஏற்படுத்துவது போலுள்ளது என்பதை காட்டுவதாக விளங்குகிறது. மொத்தத்தில் அமெரிக்க சனாதிபதி வெளிப்படுத்திய செய்திகள் ஒவ்வொன்றும் அமெரிக்காவின் கடந்தகாலத்திற்கு ஒப்பானதேயன்றி வேறு எதுமில்லை. பெரியளவானவேறுபாடில்லாத அதே கொள்கையையே புஷ் தொடரப் போகிறார் என்பது புலனாகின்றது.

புஷ்ஷின் உலக அரசாங்கம் என்பது அமெரிக்க தலைமையிலான அரசாங்கமாகவே உள்ளது. அதற்கு தயாராக முயலும் இலக்கையே நீண்டகால கொள்கையாகக் கொண்டு அமெரிக்கா செயல்படப் போகிறது. ஈராக்போன்று ஈரானுக்கு ஏற்படாதுவிட்டாலும் பாதிப்புகளும், நெருக்கடிகளும் ஈரானுக்கு வடகொரியாவுக்கு மட்டுமல்ல சீனாவுக்கு உண்டு என்பதனை மறுக்கமுடியாது. ஈரானையும், வடகொரியாவையும் மிரட்டுவதற்கு பதிலாக அமெரிக்கா சீனாவையே எச்சரிக்கின்றது. எனவே சீனாவுக்கான அச்சுறுத்தலாகவே அமெரிக்க அணுகுமுறை காத்திருக்கிறது. தாய்வான் மிகப்பிரதான பங்கெடுக்கும் அமெரிக்கா மாறுகின்ற நிலை காணப்படுகின்றது. அமெரிக்காவின் உலக அரசாங்கம் பற்றிய நீண்ட இலக்குக்கு பிரதான தடை சீனா என்பதையே அளவீடாக அமெரிக்கா கொண்டுள்ளது.

எனவே புஷ்ஷின் இரண்டாவது ஆட்சிக்காலம் பாரிய வேறுபாடுகளற்ற ஆதிக்க விஸ்தரிப்பை மேலும் தீவிரப்படுத்துகின்ற கொள்கையாகவே அமையவுள்ளது. அமெரிக்காவின் கொள்கைக்கு இசைவாக செயல்படும் வெளிநாட்டு அரசுகள் ஒவ்வொன்றும் தெளிவாகவும் துல்லியமாகவும் அடுத்துவரும் நான்கு ஆண்டுகளை பயன்படுத்தும். அமெரிக்க மயப்படுத்தலுக்கு உள்ளாகும் உலகம், உலக அரசாங்கத்தை வேகமாக சாத்தியமாக்கிவிடும் என்ற அச்சமே உலகத்திடம் எஞ்சியுள்ளது.

**ஐங்கரன்**

---

# பதினெட்டு ஆண்டுகளாகும் கொக்கட்டிச்சோலை படுகொலை



மட்டுநகர்,

தென் தமிழீழத்தின் நித்திலம்.

நெய்தலும், மருதமும், முல்லையும் சேர்ந்த வீரத் தமிழினத்தின் வரலாற்றுச் சொத்து. கொக்கட்டிச்சோலை மட்டின் இதயமெனலாம். கடல் சார்ந்த, வயல் சார்ந்த தொழிலாளர்கள் வாழும் ஒரு கிராமம். உழைத்து உழைத்து உரமேறிய உடல் வாகுகொண்ட தமிழர்கள் வாழும் கிராமம்.

1987 தை 28அன்று வழமைபோல் கொக்கட்டிச்சோலை கிராமம் வழமையில் மூழ்கியிருந்தது. வரப்போகும் பயங்கரத்தை அறியாமல் வயலுக்கும், இறால் பண்ணைக்குமென தங்களின் ஏனைய கடமைக்குமென கொக்கட்டிச்சோலை கிராம மக்கள் விரைந்து கொண்டிருந்தார்கள். அறுவடைக்கு அதிக நாட்களில்லாத நெல்வயல்கள் கதிர் முற்றி நிலம்பார்த்து நின்றது. இதைப் பார்க்க பல விவசாயிகள் தங்கள் வயல் நோக்கி விரைந்தார்கள்.

அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் வளச் சுரண்டல் நிலையமாய் அமைந்திருந்த இறால் பண்ணைக்குச் சிலரும், தங்களின் அன்றாட ஏனைய கடமைக்குச் சிலருமாய் விரைந்து கொண்டிருந்த பொழுது...

வீதியை மறித்து நின்ற இராணுவக் கவசவாகனம். பல பகுதிகளிலும் துப்பாக்கி வேட்டொலி "எல்லோரும் வெள்ளக்காறன்ர பண்ணைக்குப் போவோம். எங்கள ஒண்டும் செய்யமாட்டாங்க...." என எண்ணியே பலரும் பண்ணைக்கு ஓடினார்கள்.

பண்ணைக்குள் புகுந்தனர் காடையர்கள். கண்ணில்பட்ட அனைவரையும் கண்மூடித்தனமாய் சுட்டனர். சுடப்பட்ட அனைத்து சடலங்களும் உழவியந்திரத்தில் ஏற்றி ஊர்வலமாய் கொண்டுவரப்பட்டன. வீதியெங்கும் இரத்த நீரோட்டம். வீதியில் காணப்பட்ட மக்கள் உழவியந்திரத்தில் ஏறுமாறு அடித்து ஏற்றப்பட்டனர். ஏறிய அவர்கள் சுடப்பட்டு பிணங்களோடு பிணங்களானார்கள்.

ஊருக்குள் புகுந்த காடையர்கள் வயது வேறுபாடின்றி கண்ட ஆண்களையெல்லாம் "ஏய் நீ கொட்டியா தானே?" என கேட்க அவர்களின் வாய் திறக்குமுன்னமே சிங்கள இராணுவக் காடையர்களின் துப்பாக்கி துப்பியது.

தாய்க்கு முன்னாலேயே மகன் உழவியந்திரத்தில் ஏற்றி சுடப்படுகிறான். கதறுகிறாள் தாய். பயன் என்ன தாயும் காடையர்களால் தாக்கப்படுகிறாள். "என்ர கண் முன்னாலேயே என்ர மகன் பனைமரம் மாதிரி விழுந்தான்" என இன்றும் அவள் கதறுவதை என்னவென்று சொல்வது. கணவனுக்கு முன்னால் மனைவியும் தந்தைக்கு முன்னால் மகளும் தாய்க்கு முன்னால் மகளும் பயிற்றப்பட்ட சிங்கள இராணுவக் காடையர்களால் சீரழிக்கப்பட்ட கொடூரம்;

"என்ர மனைவியை ஒன்றும் செய்யாதேங்கோ" என இராணுவ சப்பாத்துக்காலை கட்டியணைத்து கெஞ்சிய கணவனின் கைகால்கள் முறிக்கப்பட்டன.

ஒருதாய் தன் கண் முன்னால் தனது மகள் சிங்கள இராணுவக் காடையர்களால் மாறிமாறி சீரழிக்கப்பட்டபோது தனது கழுத்தில் இருந்த கையில் இருந்த நகைகளையெல்லாம் கழற்றி இராணுவத்திடம் கொடுத்து "இதையெல்லாம் வைத்துக்கொண்டு என்ர பிள்ளையை விடுங்கோ" என கெஞ்சியபோது பயனேதுமில்லை. அந்தக் காமுகர்களின் வெறிக்குள் அகப்பட்டு மயங்கியே போனாள் அந்தப் பெண்.

இன்னும் எத்தனை கொடூரங்கள். அவர்களால் இதை எப்படிச் செய்யமுடிந்தது. மறக்கமுடியுமா இந்த நாளை.

இதோ!. இன்றுடன் கொக்கட்டிச்சோலை படுகொலைக்கு வயது பதினெட்டாகிறது. புதிதாக பயிற்சி பெற்று வந்தசிறிலங்கா கொமாண்டோ அணியின் பரிசீலனைப்படுகொலைக்கு வயது பதினெட்டாகிறது.

சிங்கள ஏகாதிபத்திய அரக்கர்களுக்கு நரபசியெடுக்கும் வேளைகளிலெல்லாம் மட்டுநகர் மக்களின் இரத்தம் மண்ணில் சிதறவேண்டியேற்படும். இதற்கு இரண்டுதடவை பலியாகிப் போனது கொக்கட்டிச்சோலை. இரண்டாவது தடவை 1991ஆம் ஆண்டு ஆனி முதலாம் நாள்.

மட்டக்களப்பு மண் உட்பட்ட கிழக்கு மாகாணத்தில் இராணுவ வெறிக்கு தொகை தொகையாக இரையாகிப்போன மக்களின் எண்ணிக்கை எந்த மனித உரிமைகள் அமைப்புக்களாலும் கணக்கில் எடுக்கப்படாதது. அன்றைய காலத்தில் சிங்கள இராணுவத்தினருக்குள் கொடிய மிருகம் குடிகொண்டிருந்ததால் அவர்களை மனித உரிமை அமைப்புகள் மனிதர்களாய் மதிக்கவில்லை போலும். அவர்களின் கோரருத்திர தாண்டவத்துக்குள் சிக்கி சின்னா பின்னமான கிராமங்கள் பல.

தோனிதாட்ட மடு, புல்லுமலை, சித்தாண்டி, வந்தாறுமூலை, புனாணை, பெண்டுகல்சேனை, உடும்பன்குளம், சத்துருக்கொண்டான், அட்டப்பள்ளம், வீரமுனை என நீண்ட பட்டியலைக் கொண்டது. வெறியர்களின் வெறியாட்டத்தில் அழியா வடுக்களை ஏற்படுத்திய பாதகர் புரிந்த படுகொலைகள். ஒவ்வொரு படுகொலைகளும் ஒவ்வொரு தமிழரின் இதயத்தில் ஏறிய குண்டூசி. ஆனால் கொக்கட்டிச்சோலைப்படுகொலை ஒவ்வொரு தமிழ் மகனின் இதயத்தில் ஏறிய ஈட்டி. இன்றும் தாங்கி நடந்து கொண்டிருக்கின்றோம். கனத்த இதயத்துடன் ஆண்டுகள் பதினெட்டல்ல பல நூறுகள் ஆனாலும் மாறாது வடு.

**அ.பிரகாஷ்**

# மாணவர்களை நாம் இழந்திருப்பது எமக்கு ஒரு பேரிழப்பாகும்

**முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா**

*பரீட்சைத் திணைக்களம் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் விரும்பினால் யூன்மாதத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று அறிவித்தல் வந்துள்ளது. இவ்வறிவித்தல் எமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. பத்திரிகை வானொலிகள் ஊடாகவே அறிய முடிகிறது.*

*க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான கூட்டம் (27 ஆம் திகதி) பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவுள்ளது. அக் கூட் டத்திலேயே இதன் இறுதி முடிவு தெரியும்.*

அ.அருள்

சுனாமிப் பேரனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதம் கழிந்துவிட்ட நிலையில் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் கூரை விரிப்பால் அமைக்கப்பெற்ற கூடாரங்களில் குடியமர்த்தும் பணி நடைபெறுகிறது. இம்மக்களுக்கான மறுவாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அபிவிருத்தியாளர்களால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேளையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீள்புனரமைத்தல், பாதிக்கப்பட்ட மாணவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்தல் ஊடாக அவர்களின் இயல்பான செயற்பாட்டுக்கும் கற்றலுக்குமாக வழிகோலவேண்டியுள்ளது.

இந்தவகையில் அண்மைய சுனாமி பேரனர்த்தம் முல்லைத்தீவின் கல்வித்துறையில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பையும் அதற்கான மாற்று நடவடிக்கைகளையும் அறிந்துகொள்ளும் நோக்குடன் முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. குருகுலராஜா அவர்களைச் சந்தித்தோம். எமக்கு அவர் வழங்கிய செவ்வியை எமது வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.

அண்மைய சுனாமிப் பேரலை தங்களின் வலயத்திற்குட்பட்ட கல்வித்துறையில் ஏற்படுத்திய இழப்புக்கள் பற்றி?

எமது பகுதியில் பேரலையால் மூன்று பாடசாலைகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. எத்தனை மாணவர்கள் இறந்துள்ளார்கள் என்ற புள்ளிவிபரம் இன்னும் முழுமையாக எடுக்கப்படவில்லை. மாணவர்கள் பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதால் இதனை முழுமையாக எடுப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இதுவரை எடுக்கப்பட்ட தரவின் படி 300இற்கு மேற்பட்டவர்கள் இறந்திருப்பதாக அறியமுடிகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட பாடசாலைச் சமூகத்தின் கூற்றின்படி இத்தொகை நானூறிற்கு மேல் இருக்குமென்ற அச்சம் அனைவரிடமும் காணப்படுகிறது.

அவ்வாறு அதிகரித்த தொகையாக இருப்பின் அது ஒரு பாரிய இழப்பாகவே இருக்கும். ஏனெனில் சுமார் 1600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளின் மாணவர்களில் நானூறுக்கு மேற்பட்ட மாணவர்களின் இழப்பு என்பது எமக்கு ஒரு பேரிழப்பாகவே அமையும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை தெய்வாதீனமாக ஒரு நிரந்தர ஆசிரியரும் இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும் இறந்துள்ளனர். சொத்துக்கள் இழப்பு என்ற வகையில் 155 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டட இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதேயளவான தொகையே இதனை மீளப் புனர்நிர்மாணம் செய்யத் தேவைப்படுகிறது.



க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு ஓரிரு மாதங்களே இருக்கின்ற இவ்வேளையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உயர்தர மாணவர்களின் மனநிலை பாதிப்பு, அவர்களின் கற்றல் உபகரண இழப்பு,கல்வியை மேற்கொள்ள முடியாத நிலை காரணமாக பரீட்சையில் தோற்றமுடியாத நிலை காணப்படுகிறது. இந்த நெருக்கடி நிலைக்கு தங்கள் திணைக்களம் கண்டுள்ள தீர்வுகள் அல்லது மாற்று ஒழுங்குகள் பற்றிக் கூறமுடியுமா?

இம்மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதென்பது ஒரு பிரச்சினையாகவே காணப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களம் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் விரும்பினால் யூன் மாதத்தில் பரீட்சைக்குத்தோற்றலாம் என்று அறிவித்தல் வந்துள்ளது. இவ்வறிவித்தல் எமக்கு இன்னும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. பத்திரிகை வானொலிகள் ஊடாகவே அறிய முடிகிறது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான கூட்டம் (27 ஆம் திகதி) பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவுள்ளது. அக் கூட்டத்திலேயே இதன் இறுதி முடிவு தெரியும்.

முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த அநேகமான மாணவர்கள் வெளியிடங்களில் தங்கள் கல்வியைத் தொடர்வதாக அறிகிறேன். மற்றைய மாணவர்களை வித்தியானந்தாக் கல்லூரியிலும், மிக விரைவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும் இணைத்து வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதைவிட இடம்பெயர்ந்த மக்கள் இன்றும் சில பாடசாலைகளில் தங்கியுள்ளதால் வகுப்புக்களை நடாத்த முடியாத நிலை காணப்படுகின்றது. உதாரணமாக வற்றாப்பளை மகாவித்தியலயத்தில், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் என சில பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆனாலும் பொது மண்டபங்கள், மரநிழல்களிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை நடாத்துகிறோம். எனவே இடம்பெயர்ந்த மக்களை மாற்று ஒழுங்கின் ஊடாக தற்காலிகக் கூடாரங்களில் குடியமர்த்தும் பணி நடை பெற்றாலும் முற்றாக மக்கள் வெளியேறிய பின்னரே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பும்.

எத்தனை பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளார்கள்?

நாளுக்கு நாள் இதனுடைய தொகை மாறுபடுகிறது. தற்போது 16பாடசாலைகளில் தங்கியிருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

*அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டமக்களுக்கு தங்கள் கல்விசார் சமூகம் ஆற்றிய செயல்கள் பற்றி?*

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வேளை மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர். இம்மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முல்லை வித்தியானந்தாக் கல்லூரியின் சாரணியர்கள் தங்களால் ஆன முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்கள். அதேபோன்று பழைய மாணவர்களின் சங்கங்கள் அனர்த்தத்தின் போது சேவைகள் புரிந்துள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்ட மக்களுடன் எமது ஆசிரிய சமூகம் கலந்துரையாடி உளநல மேம்பாட்டுச் செயற்பாட்டை மேற்கொண்டது. தற்போது கூட எச்சத்திலும் எழுவோம் எனும் ஆற்றல்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளின் கல்வி மேம்பாட்டுக்கு அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து ஏதாவது உதவிகள் கிடைத்துள்ளனவா?

Unicef அமைப்பு எமக்கு உடனடியாக பாடசாலைகளைத் துப்புரவு செய்யவும் மீள இயங்க வைப்பதற்காகவும் கொட்டகைகள் அமைப்பதற்காகவும் முற்பணம் வழங்கியுள்ளது. சீருடைகள் வழங்கியுள்ளது. கற்றல் உபகரணங்கள் வழங்கியுள்ளது. இது தவிர்ந்த Unicef நிறுவனத்தினர் அழிந்துபோன பாடசாலைகளை மீள அமைத்து தருவதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளார்கள். இவை தவிர சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் (S.C.F) எம்முடன் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களும் சில வேலைகளைச் செய்து தருவதாகக் கூறியுள்ளார்கள்.

அரசதரப்பைப் பொறுத்தவரை நாம் அரசுக்குச் சில விபரங்களை அனுப்பவேண்டும் எனவும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்கான அறிக்கை தாங்களும் அனுப்ப வேண்டி இருப்பதாகவும் கூறினார். அத்தோடு திணைக்கள மேலதிக செயலாளருடன் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமரக்கோண் அவர்கள் தமிழீழக் கல்விக்கழகப்பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களுடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டுள்ளார். இது தொடர்பாக அவர்களும் அறிக்கை சமர்ப்பித்திருப்பார்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும் தங்கள் திணைக்களத்திற்கு உட்பட்ட ஆசிரியர்கள் சாரணியர்கள் மாணவர்கள் சேர்ந்து பல பணிகளில் ஈடுபட்டதாகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வந்த மாணவர்களை ஏனைய மாணவர்கள் தங்களோடு சேர்ந்து அன்பாகப் பழகுவதையும் நினைக்கும் போது தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், கல்விச் செயற்பாட்டை வழமைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் தம்மால் இயன்றவரை வெகு விரைவில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுப்பதாகவும் இதற்கு உதவி செய் பவர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்கள்.

# யார் முட்டுக்கட்டை?

'சுனாமி' கடற்பேரலை தனது கோரக்கரங்களைப் பதித்து ஒருமாதம் கடந்துவிட்டது. இதனால் ஏற்பட்ட பேரழிவை சமன்செய்யும் முயற்சியில் அழிவுக்கு உள்ளான நாடுகளைத் தேற்றியெடுக்க உலகமே கைகோர்த்து நிற்கிறது.

இந்தப் பேரழிவு ஏற்பட்ட காலம் இலங்கையைப் பொறுத்த வரை ஒரு திருப்புமுனையொன்றை எதிர்பார்த்திருந்த காலம். அதாவது மூன்று வருடகாலச்சமாதான முயற்சிகள் சிறிலங்கா ஆட்சியாளர்களின் சுயநலநோக்கணினால் தளம்பல் நிலையை அடைந்து அடுத்து எதுவும் நடக்கலாம் என அனைவருமே எண்ணிக்கொண்டிருந்த காலம்.

இந்தச் சுனாமி தாக்கிய பகுதிகளில் குறிப்பாக தமிழ் தாயகப் பகுதிகளில் இருந்த அனைவருமே "யுத்தம் ஆரம்பித்து விட்டது" என்று நினைக்குமளவுக்கு நிலைமை இருந்தது.

நோர்வே சமாதான முயற்சயாளர்கூட தமது முயற்சியில் மனம் தளர்ந்து போயிருந்தவேளை அது.

இதற்குக்காரணம் சமாதான முயற்சிகளுக்கும் நாட்டின் நன்மைக்கும் மேலாக - சுயநலம் பதவி வெறி- தென்னிலங்கை அரசியல் வாதிகள், குறிப்பாக ஆட்சியாளர்கள் மத்தியில் காணப்பட்டதாகும். பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கியதேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறமிருக்க, புலிகளின் நியாயமான நிலைப்பாட்டுக்கு இணங்கி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஆளும்கட்சி தயாரில்லாது இருந்தது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி தமது அதிகாரத்தை நீடிக்கும் எண்ணத்தில் ஜே.வி.பிக்கு பணிந்து போகும் நிலையில் இருந்தார். அதனைப்பயன்படுத்தி சமாதானமுயற்சிகளுக்கு ஜே.வி.பி பாரிய முட்டுக கட்டைகளைப் போட்டிருந்தது.

இப்பொழுது நாட்டிலுள்ள மூவின மக்களுமே பேரழிவொன்றில் சிக்கி துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து மீள வழியிருக்கின்ற போதிலும்கூட அதற்கும் கூட அதேதென்னிலங்கை அரசியல வாதிகளின் சுயநலமும் போட்டி பொறாமையுமே முட்டுக்கட்டையாக இருக்கின்றது.

இப்பேரழிவு ஏற்பட்டகாலத்தில் சமாதான ஒப்பந்தமொன்று நடைமுறையில் இருந்தமையால் தமிழர்தாயகப்பகுதி உடனடி நெருக்கடியிலிருந்து விரைவாக மீளக்கூடியதாக இருந்தது. அதாவது மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளும் தமிழா புனர்வாழ்வுக் கழகமும் அனைவரையும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு அந்தநெருக்கடியிலிருந்து மீட்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் புலம் பெயர்ந்த மக்களினதும் தாயகம் வாழ மக்கள் அமைப்புகள் மனிதாபிமானம மிக்க ஏனைய பகுதி மக்களினதும் உதவிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

நெருக்கடி ஏற்பட்டு சில தினங்கள் அரசாங்கம் செயலற்றுக் கிடந்தவேளையிலும் அரச, அரசசார் பற்ற அமைப்புகளையும் ஒருங்கிணைத்து புலிகள் இதனைச்செவ்வனே செய்து உலகத்தின் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இதன் காரணமாக இப்பொழுதும் கூட உலகம், புலிகள் அடுத்த கட்டப்பணியையும் செவ்வனே செய்து முடிப்பார்கள் என்றநம்பிக்கையை வெளிப்படுத்திவருகின்றனர். இதன் காரணமாகவே உலகப்பொது அமைப்புகளும் நாடுகளும் இவ்விடயத்தில் புலிகளின் யோசனைகளைப்பெற்று அதனையும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கின்றன.

எனவேதான் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுக் கட்டமைப்பொன்றை சுனாமி அனர்த்த மீள்கட்டுமான நடவடிக்கை களை நடைமுறைப்படுத்த அவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

ஆனால், மக்கள் இன்று பேரழிவைச் சந்தித்து இன்னலுற்றிருக்கின்ற இவ்வேளையில்கூட



இவற்றையெல்லாம், சீர்தூக்கிப் பார்க்கின்ற மனநிலையற்றவர்களாக அதே சுயநல இனவாதச் சக்திகள் இருக்கின்றன.

சமாதானச் செயலகங்கள் ஊடாக இவ்வாறான கட்டமைப் பொன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெறுகின்ற இவ்வேளையில் அம்முயற்சிக்கும் முட்டுக்கட்டை ஏற்படும் நிலை ஏற்படுமா? என்ற கேள்வி ஒருபுறம் எழுகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரச இயந்திரம் ஒருபுறம் புலிகளும் நிவாரண நடவடிக்கையில் இணைந்து செயற்படுவதாகப்பிரசாரம் செய்கின்றது. மறுபுறம் புலிகளை அவதூறு செய்து பிரசாரம் நடத்துகிறது.

அதேவேளை தமிழர் தாயகப்பகுதியில் அவசரகால நிலைப் பிரகடனம் நிவாரண நடவடிக்கைகளில படையினரின் பிரசன்னம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையென பெரும் இடையூறுகளை விளைவிக்கின்றது. தேசவிரோதச் சக்திகளை புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கின்றது.

அதேவேளை அரசாங்கத்தின் சக்திமிக்க பங்காளிகளான ஜே.வி.பி வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்த புள்ளி விபரத்தில் கூட சந்தேகம் கொள் கிறது. தமிழ் மக்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்த 22 கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினாகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்கமறுக்கிறது. ஆனால், மக்களால் நிராகரிக்கப்பட்ட தேசவிரோதிகளை ஏற்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழவிடுதலைப் புலிகளை புனரமைப்பு நடவடிக்கைகளில் இணைத்துக்கொள்வது நடக்கவே நடக்காது எனக கூறுகிறது. அதற்கு அதுகூறும் காரணம் அது புலிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது போலாகிவிடுமாம்.

இன்று உலகளாவிய ரீதியிலேயே புலிகள் அங்கீகரிக்கப்பட்டு உலகப் பிரதிநிதிகள் கொழும்பிற்கும் கிளிநொச்சிக்கும் சமநிலை கொடுத்திருக்கையில் ஜே.வி.பி இவ்வாறு கூறுவது இனவாத அடிப்படையிலானது தவிர வேறில்லை. எனவே இனவாதரீதியில் தமிழ் மக்கள் சந்தித்து நிற்கின்ற அனர்த்தத்தை பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடனேயே ஜே.வி.பி இவ்வாறு கூறிக்கொள்கிறது.

இந்த நிலையில் உலகம் இன்னொன்றையும் எதிர்பார்க்கிறது.

அதாவது இந்த அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்கும் நடவடிக்கையில் சிங்கள அரசாங்கமும் புலிகளும் ஒன்றிணைந்து ஒத்துழைத்துச் செயற்படுவார்களாயின் அது சமாதான நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கும் என்பதே அதுவாகும்.

அதற்கு தமிழர் தரப்பு தயாராகவே இருக்கிறது. ஆனால், சிங்களத்தரப்பு சுயநல அரசியலைக் கைவிட்டு வருமா? மக்கள் இன்னல்பட்டிருக்கின்ற வேளையிலாவது அத்துயரைத் துடைக்க மனப்பூர்வமாகச் செயற்படுமா?

ஐந்தாண்டுகாலத்திற்குத் தேர்தல் இல்லையென்ற சனாதிபதி சந்திரிகாவின் காலத்துக்குப் பொருந்தாத தேவையற்ற அறிவிப்பும், புலிகளுடன் இணைந்துசெயற்பட மாட்டோம்என்ற ஜே.வி.பியின் அறிவிப்பும் அதற்கான நம்பிக்கையைத்தருவதாக இல்லை. அத்துடன் ஆயுதக்கொள்வனவு, கடற்படை கலங்கள் கொள்வனவு விமானப்படை, கடற்படைத்தளங்கள் புனரமைப்பு....இவையெல்லாம் நிலைமையை மேலும் மோசமடையைச் செய்பவையாகவே இருக் கின்றன.

இவற்றிற்கெல்லாம் உலக நாடுகள் வழங்கும் சுனாமி நிவாரண நிதியையே சிறிலங்கா ஆட்சியாளர் நம்பியிருக்கையில்,இவர்களை வழிக்குக்கொண்டு வரும் மார்க்கம் உலக அமைப்புகளிடம் உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் துன்பத்துக்கு உள்ளாகாது பார்த்துக்கொள்ளும் அதேவேளை அவர்களை அதிலிருந்து மீட்கும் அதேவேளை அவர்களது நல்லெண்ணத்தை சிறிலங்காவின் சுயநல அரசியல்வாதிகள் பயன்படுத்தாது பார்த்துக்கொள்வதும் உலக அமைப்புகளின் பொறுப்பாகும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# "பண்டார நாயக்காக்கள்" ஆட்சி முடிவுக்கு வருமா...?

சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு குடும்பங்களின் பங்களிப்பும், அக்குடும்ப அங்கத்தவர்கள் அரசியலில் வகித்த பாத்திரங்களும் முக்கியமானதே. ஆட்சியாளர்கள் வரிசையில் இந்த இரு குடும்ப உறுப்பினர்களே பெரும் பங்காற்றினர். ஏன் இந்நாட்டின் இன்றைய இந்நிலைமைக்கு அவர்களே காரணம். இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும் அந்தக் குடும்பங்கள் எவையென்று; ஒன்று சேனநாயக்க குடும்பம், மற்றது பண்டாரநாயக்க குடும்பம். இப்போது நாம் இங்கு பார்ப்பது பண்டாரநாயக்க குடும்பத்தைப் பற்றியே; நாட்டின் தற்போதைய நிலைக்கு தற்போதைய







தலைவியின் குடும்பம் ஆற்றிய பங்களிப்பு வரலாற்றில் மறக்கமுடியாதது. தமிழர்களால் இலகுவில் மறந்துவிடமுடியாததும் மக்கள் மத்தியில் என்றும் வாழ்கின்ற தலைவர்களாக இருக்க வேண்டுமானால் ஒன்று நாட்டிற்குரிய நல்ல தலைவனாக இருக்கவேண்டும். அல்லது கொடும் பண்புகளை கொண்ட தலைவராக இருக்கவேண்டும். அந்த வகையில் தமிழர்களின் உள்ளங்களில் நீங்காத இடம்பிடித்துக்கொண்டார்கள் பண்டார நாயக்க குடும்பத்தினர். காரணம் இரண்டாவதாக குறிப்பிட்ட வகையின்படி தமிழர்களால் மறந்துவிடமுடியாத தலைவர்கள் என்ற பெருமை அவர்களுக்கே. இதைவிட இந்நாட்டின் அரசியல் வாழ்வில் சேனநாயக்க குடும்பமும் காத்திரமான பங்களிப்பு வகித்ததை நினைவில் கொள்ளவேண்டும். 1948ஆம் ஆண்டு D.S. சேனநாயக்க நாட்டின் தலைமை அமைச்சராக பதவியேற்றார். அதன்பின் அவரின் மகன் பினட்லி சேனநாயக்க என தொடர்ந்து முடிவுக்கு வந்தது. காலத்திற்குக் காலம் ஆளும் கட்சிகள் மாறியது. ஆளும் தலைவர்கள் மாறினார்கள். ஆனால், ஆளும் இனமாக சிங்கள இனமும் ஆளப்படுகின்ற இனமாக தமிழினமும் மாறாமல் இன்றுவரை சிறிலங்காவில் தொடர்கிறது. 1956 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்விகண்டது. 24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்று கூறிக்கொண்டு S.W.R.D. பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்து வாரிசு அரசியலுக்கு அடிக்கல் நாட்டினார். 1956 யூன் 05ஆம் திகதி சிங்களம் மட்டும் என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இது தமிழர் பிரச்சினைக்கு திருப்புமுனையாக அமைநதது. இதனால் போர்க்கோலம் பூண்ட தமிழர்களை சமாளிக்க 1957ஆம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், பின்னர் அது கிழித்து எறியப்பட்டது. இதைவிட இவர் தமிழர்களுக்கு செய்த துரோகம் பல சிங்கள வெறிபிடித்த ஆட்சியாளராகத் தன்னை இனம் காட்டிக் கொண்டார் பண்டாரநாயக்க; இவரை தொடர்ந்து இவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க 1970 ஆம் ஆண்டு ஆட்சி பீடம் ஏறினார்; கணவனை மிஞ்சுமளவுக்கு தமிழர்களுக்கெதிரான செயலில் தன் பங்கையும் காட்டினார். அதன் முதற்கட்டமாக சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஒன்றரை இலட்சம் இந்திய வம்சாவழி தமிழ் மக்களை குடியுரிமை பறிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பிய பெருமையுண்டு; அதைவிட 1972இல் "சிலோன்" என்ற பெயரைமாற்றி சிறிலங்கா என்ற சிங்களப் பெயரைக் கொண்டு வந்தார். அத்தோடு நிறுத்தவில்லை. குடியரசு யாப்பின் மூலம் அதுவரை தமிழர்களுக்கு இருந்த சிலசில சலுகைகளும் பறிக்கப்பட்டன. இவ்வாறு தனது ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்கு எதிரான பல செயற்பாடுகள் மூலம் நீங்கா இடம் பிடித்துக் கொண்டார்; இவரை தொடர்ந்து இவரது மகள் சந்திரிகா ஆட்சிபீடம் ஏறினார். சமாதான தேவதையாக ஆட்சிக்கு வந்து சில காலங்களிலேயே பரம்பரைப் புத்தியை வெளிக்காட்டினார். ஒரே குட்டையில் ஊறுன மட்டைகள்தானே இவர்கள்; தான் ஒரு விதவை என்றும் போரின் வடுக்களை அனுபவித்தவள் என்றும் அதனால்தான் போரை விரும்பவில்லை என்றெல்லாம் கூறியவர், அதற்கு மாறாக பல தமிழ்ப் பெண்களை விதவைகளாகினார். மேலும் சமாதானத்திற்கான் போர் என இரு எதிர்க்கருத்துள்ள சொற்களை இணைத்து அறிமுகப்படுத்தி பெரும் போர் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் யாழில் இருந்து ஒரே நாளில் பல இலட்சம் மக்கள் இடம்பெயர வைத்த பெருமை சந்திரிகாவையே சாரும். மாமனும், மருமகளுமாக ஜெயசிக் குறு நடவடிக்கையும் தொடங்கி பின்னர் பலத்த அடி வாங்கியதும் மறக்க முடியாததே. இவ்வாறு தொடர்ந்த பண்டாரநாயக்க குடும்ப வாரிசு அரசியல் நாளைய நிலையில் கேள்விக்குறியாக உள்ளது. சந்திரிகாவின் ஆட்சிக்குப் பின் பண்டாரநாயக்க பரம்பரையில் இருப்பவர் சந்திரிகாவின் தம்பி அநுராபண்டாரநாயக்க நெளிவுசுழிவுகள் தெரியாது. அக்காவைப் போன்று அரசியல் குத்துக கரணம் அநுராவால் அடிக்க முடியாது. அத்தோடு மக்கள் மத்தியில் அவருக்கு அதிகம் செல்வாக்கும் இல்லை. கட்சியிலும் அநுராவைவிட அரசியல் முதிர்ச்சி கொண்ட பலர் உள்ளனர். எனவே இவரால் நாட்டின் தலைமைப் பொறுப்பை அடைவது என்பது கடினமே; சந்திரிகாவின் பிள்ளைகள் பார்த்தால் தற்போது அவர்களுக்கு அரசியல் நீரோடையில் நீந்துவதற்கே தெரியாது. எனவே இந்நிலையில்தான் இனிவரும் 05 ஆண்டுக்கு தேர்தல் இல்லையென்ற சனாதிப்தியின் திடீர் அறிவிப்பு; பதவிககாக ரணில் அரசை கலைந்து விட்டு ஆட்சியை கைப்பற்றிய சந்திரிகா தற்போது இவ் அறிவிப்பை செய்திருப்பது வியக்கத்தக்க விடய மன்று. அவரின் பதவிக்காலம் இவ்வருடத்துடன முடிவுக்கு வரும் வேளையில் இவ் அறிவிப்பானது முதலில் ஜே.வி.பியின் விமல் வீர வன்சவையே பெரிதும் பாதித்துள்ளது. கூட்டணி அரசு அமைக்கும்போதே விமல்வீர வன்ச எவ்வித அமைச்சுப் பொறுப்புக்களையும்தான் ஏற்காமைக்கு அவரின் சனாதிபதி நாற்காலிக் கனவே காரணம். அதற்காக அவர் சிங்கள கிராமப்புறங்களில் சற்று வெளிப்படையாகவே பிரசாரம் செய்தவர். இவரின் கனவுக்கான எதிர் பார்ப்பில் இருந்தவர் சந்திரிகாவின் அறிவிப்பால் ஆத்திரமுற்று

**மு.தமிழ்ச்செல்வன்**

21 ஆம் பக்கம் பார்க்க





# பொங்கு தமிழின் நான்காம் ஆண்டு எழுச்சியும் விஷமப்பிரசாரங்களும்

ஞாபகன்

பொங்கு தமிழின் நான்காம் ஆண்டு எழுச்சி நிகழ்வு கடந்த 17ஆம்திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. சுனாமிப் பேரலைகளினால் தமிழீழத் தேசம் மிகப் பெரிய அழிவுகளைச் சந்தித்து, தமிழ்த் தேசியம், விடுதலைப் போராட்டம் தொடர்பான நிகழ்வுகள் இருபது நாள்கள் வரை இடைநின்று போயிருந்ததன் பின்பு இடம்பெற்ற சுயாதீனமான அடையாள எழுச்சி நிகழ்வு இதுவாகும்.

எதிர்பாராத விதமாக சுனாமி பேரலைகள் கரையோரப்பகுதிகளைத் தாக்கி நிர்மூலம் செய்ததை அடுத்து முழுத் தமிழர்களுமே நெருக்கடிக்கு உள்ளானார்கள். அவசர மனிதாபிமான உதவிகளும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுமே முதன்மைப்படலாயின.

ஏற்கனவே இன விடுதலைப் போராட்டத்தின் அங்கமான சமாதான முயற்சிகள் தேக்கநிலையடைந்திருந்தன. சிங்கள அரசு தமிழ்த் தேசிய எதிர் வியூகங்களை வகுத்து, விடுதலைப் போராட்ட முறியடிப்புக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில் தமிழர் தரப்பு பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் இருக்கக் கூடியதான எல்லைக் கோடுகளை நெருங்கி இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தது.

அதன் அங்கமாக மக்கள் எழுச்சிப், போராட்டங்கள் தன் முனைப்பாக இடம்பெறத் தொடங்கியிருந்தன. மனிதச் சங்கிலிப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வட புலத்தில் தீவிரம் பெறத்தொடங்கியிருந்தன. அத்தருணத்தில் தான் இயற்கையின் சீற்றம் சிறிலங்காவையும் தமிழீழத்தின் கரையோரப் பகுதிகளையும் பலிகொண்டது. இந்த இயற்கையின் சீற்றம் இலங் கைத் தீவின் அரசியல் இராணுவ நிலைகளில் பெரும் மாற்றங்களை அல்லது ஸ்தம்பிதத்தை ஏற்படுத்தியது.

எல்லா வளங்களும் எல்லா செயற்பாடுகளும் மீட்புப் பணிக்காகவும் மீண்டவர்களை பராமரிப்பதற்காகவும் மறுவாழ்வு நடவடிக்கைகளை செய்வதற்காகவும் என மாறின. தமிழீழ விடுதலைப் புலிகளின் அண்மை நாளைய கடமையே இதுவாகியது. ஆனால், தென்னிலங்கையில் அதன் நகர்வுகள் முழுவதும் அரசியல் சாயம் பூசப்பட்டதாக, கட்சி நலன் சார்ந்ததாக அமைந்துவிட்டமைதான் இருதரப்புக்கும் இடையிலான வித்தியாசமாக அமைந்தது.

பாரபட்சங்களும் இன வேறுபாடுகளும் அரசியல் தலைமைகளாலும் கட்சிகளாலும் துலக்கமாக அடையாளம் காட்டப்பட்டன. விதிவிலக்காக ஓரிரு அமைப்புக்களும் தனிப்பட்ட சிங்கள மக்களும் மனிதாபிமானத்தோடு இது விடயத்தில் நடந்ததை மறுக்க முடியாது. எனினும், முன் சொன்ன அரசியலாக்கி வெறும் வியாபார கண்ணோட்டத்தில் செயற்பட்டமை தவிர்க்க முடியாமல் எதிர்ப் பரப்புரை ஒன்றுக்கு தமிழர் தரப்பை தள்ளிவிட்டுள்ளது.

அதனோடு ஒருபடி மேலே சென்று சிறிலங்கா மிக மோசமாக வீழ்ச்சி கண்டுவிட்ட தனது பொருளாதாரத்தை இதனூடாகக் கட்டியெழுப்பவும் தலைப்பட்டிருக்கின்றது. எதிர்பார்த்ததற்கும் மேலாக சர்வதேச சமூகத்திடம் இருந்து வந்து குவிந்த உதவிகள் அதனை ஒரு பொருளாதார ஸ்திர நிலைக்கும் ஆளும் தரப்பின் உள்ளக அரசியல் நெருக்கடித் தணிவு நிலைக்கும் இட்டுச் சென்றிருக்கின்றது.

இது இன்னும் அதன் இனவாத நிலைப்பாட்டைத் தூக்கிப் பிடிக்கவே வழி வகுத்திருக்கின்றது. அதன் வெளிப்பாடாக அல்லலுற்று நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த தமிழ் மக்களை இராணுவ சீருடைகளோடு எதிர்கொள்ள சிறிலங்கா அரசு முயன்றது. அத்தோடு வெளிநாட்டில் இருந்து கிடைத்த நிதியுதவிகள் இராணுவத்தை பலப்படுத்துவதற்கான ஆயுதக் கொள்வனவுக்கும் பயன்படுத்தப்படும் மெய்மை கசப்பானதாகவே இருக்கின்றது. இந்த இயற்கை அனர்த்தம் போர்க்காலங்களில் சிறிலங்கா அரசும் படைகளும் எவ்வாறு நடந்து கொண்டனவோ அவ்வாறே நடக்கத் தூண்டியுள்ளது.

செயற்பாடுகள் மட்டுமன்றி அதற்கு பின்னுதவியாக சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. ஏறத்தாழ மூன்றாண்டுகளாக செயலிழந்து போயிருந்த அவசரகால நிலை தமிழர் தாயகம் முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரம், நிவாரணப் பணி என்ற போர்வையில் தமிழ் மக்களை மீண்டும் அடக்கி ஆள்வதற்கான முகாந்திரத்தை வழங்கியுள்ளது.

ஏனெனில், கடந்த சில நாள்களாக வடக்கிலும் கிழக்கிலும் நடந்து வரும் நிகழ்வுகள் அதனையே கோடி காட்டுகின்றன. மிதவாத அரசியல் கட்சிகளிடம் இருந்தும் தன்னார்வ அமைப்புக்களிடம் இருந்தும் வரும் அவசரகால நிலைக்கு எதிரான கண்டனங்கள் அதன் பின்னுள்ள கடுமையான எதிர்கால விளைவை காட்டுவனவாக உள்ளன.

இந்த நிலையில்தான் பொங்கு தமிழின் நான்காம் ஆண்டு நிறைவு எழுச்சி நாள் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்திருக்கின்றது. நான்கு ஆண்டுகளுக்கு முன் எத்தகைய அசாதாரண சூழ்நிலையில் பொங்கு தமிழ் நிகழ்ந்ததோ ஏறத்தாழ அதேபோன்றதொரு அசாதாரண நிலையில்தான் இப்போதும் நிகழ்ந்திருக்கின்றது. இரண்டு அசாதாரண சூழ்நிலைக்குமான காரணங்கள் வேறாயினும் அதன் நோக்கங்கள் ஒன்றாகவே இருக்கின்றன.

ஏனெனில், இது தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் விஷமத்தனமான கருத்துக்கள் அதனையே காட்டுகின்றன. பொங்கு தமிழ் நிகழ்வு இன்றைய சூழ்நிலையையும் தேவையையும் கருத்தில் கொண்டு நான்காம் ஆண்டின் அடையாள எழுச்சியாகவும் இடம்பெற்றது. இயற்கை அனர்த்தத்தால் உறைந்து போயிருந்த தமிழ் உரிமை பற்றிய அசைவை திரும்பக் கொண்டு வரவும் எதிர்கால வெகுஜன போராட்டங்களின் தேவையை வலியுறுத்தவும் அது கடைப்பிடிக்கப்பட்டது என்பது பொருத்தமானது.

ஆனால், அது மிக எளிமையாக இடம்பெற்று முடிந்த கையோடு சிறிலங்கா அரசின் தூண்டுதலின் பேரில், தமிழ் விரோத சக்திகள் சில மோசமான கருத்துக்களை அதன் ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டுள்ளன. இது உண்மையில் பொங்கு தமிழின் நோக்கம், உணர்வு நிலை என்பவற்றை சரியாகப் புரிந்து நின்று செயற்பட்ட அத்தனை பல்கலைக் கழக மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் மக்களுக்கும் எரிச்சலூட்டக் கூடியதே. இத்தகைய சக்திகளின் இவ்வாறான பிரசாரங்கள் வழமையானவை என்றாலும் கூட, அதனை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் இட்டுக்கட்டல்களையும் பொய்மைகளையும் அம்பலப்படுத்துவது சிறந்தது என்றே படுகின்றது.

ஈ.பி.டி.பியின் பத்திரிகை, வானொலி, இணையத்தளம் மூன்றும் ஒன்று சேர தமிழ்த் தேசியத்துக்கு எதிராகக் கருத்துக்களை பரப்பிவருகின்றன. அதிகமான தமிழ் மக்களுக்கு அவை கூறுவது எல்லாமே திரிக்கப்பட்ட, உண்மைக்குப் புறம்பான செய்திகளின் கூடாரம் என்பது தெரிந்தவையே. அநேகமான சந்தர்ப்பங்களில் அவற்றின் செய்தி, செய்திக்குரிய பகைப்புலத்தில் இருப்பவர்களுக்கு சிரிப்பையே ஏற்படுத்துவன.

ஆயினும், அளவுக்கு மீறி அபாண்டமான குற்றச்சாட்டுக்கள், நேரடியாகவோ மறைமுகமாகவோ அதற்குரிய ஏதுநிலைகள் எதுவும் இல்லாத போதும் உருவாக்கப்படும் பொய்யுருக்கள் என்பன கடுமையான கோபத்தை ஏற்படுத்துவதை தவிர்க்க முடிவதில்லை. அதனை கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத சகிப்புத் தன்மையற்றவர்களின் செயற்பாடு என்று அதற்கெதிராகக் கிளர்ந்தெழுபவர்களை அக்கட்சி கூறி தன்னை நியாயப்படுத்தவும் கடந்த காலங்களில் செய்துள்ளது.

அதேவேளை மாணவர்கள் தாமாக கிளர்ந்தெழுந்து மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு புலிச்சாயம் பூசுவதும் புலிகளின் தூண்டுதலின் பேரில்தான் இடம்பெற்றன என்று கூறுவதும் இந்த விரோத சக்தியினதும் அரசு சார்ந்தவர்களின் அடிவருடிகளினதும் நாளாந்தமாக உள்ளது. ஆனால், அவற்றுக்கு அஞ்சி மாணவர்களோ மக்களோ வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் என்பவற்றில் ஈடுபடாமல் விட்டுவிடவில்லை. மாறாக இதை விடவும் தீவிரமான அவசியமான நாளாந்த இயல்பு வாழ்வுக்காகப் போராடவேண்டியிருப்பதனால் இவை இப்போது பின் தள்ளப்பட்டவையாகி உள்ளன.

ஆனால், கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட தென்னாசியாவின் அரசியல், இராணுவ, பொருளாதார



தடுமாறல்களுக்கு மத்தியில் இழப்புக்களுக்கு மத்தியில் ஒரு நிலைமாறு கட்டமாகவும் நிகழ்ந்த பொங்கு தமிழ் ஆண்டு நிறைவின் அடையாள எழுச்சியை மிகக் கேவலமான முறையில் கொச்சைப்படுத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதே.

மாலை நேரம் ஒலிபரப்பாகும் இதயவீணை நிகழ்ச்சி பொங்கு தமிழுக்காக விடுதலைப் புலிகள் வற்புறுத்தல்களை மாணவர்கள் மீதும் மக்கள் மீதும் மேற்கொண்டதாகவும் ஒலிபெருக்கிகள் மூலமாக யாழ். பல்கலைக்கழகத்தை சூழவுள்ள பகுதியில் அதற்கு வருமாறு அழைப்பு விடுத்ததாகவும் கூறியிருக்கியிருக்கின்றது. ஆனால், அதை மக்களோ மற்றவர்களோ பொருட்படுத்தவில்லை என்றும் எவரும் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்றும் இட்டுக்கட்டல் திறமையை அதன் செய்தியாளர் வெளிக்காட்டி இருக்கின்றார்.

இவற்றில் எவையுமே உண்மையல்ல என்பது முக்கியமானது. அதாவது ஒலிபெருக்கிகள் மூலம் பொங்கு தமிழ் ஆண்டு நிறைவு எழுச்சிக்கு வருமாறு அழைப்பு யாருக்கும் விடுக்கப்படவில்லை. அதேவேளை மக்களோ மாணவர்களோ அதிகளவில் கலந்துகொள்ளவில்லை என்பதும் அப்பட்டமான பொய்யாகும் என்பது மண்டபம் நிறைய வந்திருந்தவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

திறந்த சிறைச்சாலை போன்று அன்றைய யாழ்ப்பாணம் காணப்பட்ட போது அடக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்கள் தமது உணர்வுகளை காட்ட வேண்டும் என்ற எண்ணக் கருவின் வடிவமாக பொங்கு தமிழ் தோற்றமாகப் பெற்றது. அதனை நிகழ்த்துவதற்கு முன்னேற்பாடுகளை மாணவர்கள் மேற்கொண்ட போது, யாழ். குடாநாட்டை முற்றுகை நகரமாக துப்பாக்கிகள் சூழ வைத்திருந்த அரசுக்கு விசுவாசமாக அச்சுறுத்தல்களை பொது அமைப்புக்களுக்கு விடுத்தது ஈ.பி.டி.பியே.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புக்கள், மத அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றுக்கு கலந்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கைகளையும் விடுத்தது. ஆனால், மக்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாது இராணுவ முற்றுகைகளையும் மீறி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டார்கள். அந்த நிகழ்வே தமிழர்களின் அபிலாசைகளையும் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதையும் சிங்களப் பேரினவாத அரசுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துக் காட்டியது.

ஆனால், விரோத சக்திகளின் மாறான இந்தப் பிரசாரத்தில் உள்ள மிகக் கேவலமான பகுத்தறிவுக்கு முரணான செய்தி என்னவெனில், கடந்த பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளில் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டதன் விளைவே கடல் பொங்கி பல ஆயிரம் பேரைப் பலியெடுத்தது என்பதாகும். மக்களை தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து தூர விலக்கி வைக்க இச்சக்திகள் எவ்வளவு கேவலமான முறைகளையும் கையாளும் என்பதற்கு இது ஒன்றே போதும். அடிப்படையில் மக்களை எதுவும் தெரியாத பகுத்தறிவற்ற பிறப்புக்களாக கருதி செயற்படும் இந்த சக்திகளை, ஊடகங்களை யிட்டு எச்சரிக்கையாக இருக்கவேண்டும், நிராகரிக்க வேண்டும்.


இது போன்றுதான் எல்லா நிகழ்வுகள் குறித்தும் இத்தகைய சக்திகளும் அவற்றின் ஊடகங்களும் நடந்துகொள்கின்றன. இதனை யதார்த்தத்தை புரிந்தவர்கள் மறந்து விட மாட்டார்கள், மறுத்துவிடவும் மாட்டார்கள்.




# கடலின் ஆழம்

ஒரு உபகரணமும் இல்லாமல் மூச்சை மட்டும் அடக்கிக்கொண்டு கடலுக் கடியில் 285 அடி ஆழம் வரை போயிருக்கிறார் ஒருவர். உலக சாதனை. கூடப்போய் யார் பார்த்தார்கள் என்பீர்கள்? ஒரு கயிற்றில் ஒவ்வொரு அடிக்கும் ஒரு சிலேட்டுப் பலகையைக் கட்டிக் கடலுக்குள் இறக்கிவிட்டார்கள். ஒவ்வொரு சிலேட்டுப் பலகையிலும் கையெழுத்துப் போட்டுவிட்டு வரச்சொன்னார்கள். 285 ஆவது சிலேட்டு வரை கையெழுத்துப் போட்டுவிட்டு ஆசாமி அன்கான்ஷியஸ் ஆனதால் கிடுகிடுவென்று அவரை இழுத்துக் கரையில் போட்டார்கள்.

சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த பிக்கார்ட் என்பவர் நீர் மூழ்கிப் 'படகு' ஒன்றைத் தயாரித்தார். 'கடல் எவ்வளவு ஆழம்தான் இருக்கிறதென்று பார்த்துவிடுகிறேன்' என்று சொல்லி விட்டு 'ட்ரையஸ்ட்' என்னும் அந்தப்படகில் உட்கார்ந்து செங்குத்தாக (23 சனவரி 1960) கடலுக்குள் இறங்கினார். நாலு மணி நேரம் ஆயிற்று தரை வந்தபாடில்லை. "ஐந்து மைல் பயணம் செய்தாகிவிட்டது.




அது போய்க் கொண்டே இருக் கிறது.'' என்று மேலே தகவல் அனுப்பினார். இறங்கி ஐந்து மணி நேரம் கழித்து. 'தரையைத் தொட்டுவிட்டேன்' என்று வயர்லெஸ்ஸில் செய்தி வந்தது. பசுபிக் கடலுக்கடியில் அவர் இறங்கிய மரியான ஆழி என்ற படுகுழியின் ஆழம் மேலே கரையிலிருந்து 35,808 அடி (சுமார் ஆறேமுக்கால் மைல்) எவரெஸ்ட் 29,028 அடிதான் (சுமார் ஐந்தரை மைல்) பிக்கார்ட் கீழே இருபது நிமிடங்கள் இருந்தார். இதுவரை கண்டு பிடிக்கப்பட்டதிலேயே கடலில் மிக மிக ஆழமான இடம் இதுவே!

ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்றழைக்கப்படும் யு. எஸ் நாட்டில் வாழும் மக்களிடம் மிக அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகள் உடலில் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. இதில் குழந்தைகள் பெண்கள் மெக்ஷிக்கோ வம்சாவளியினர் ஆகியோரிடம் மற்ற மக்களிடம் இருப்பதை விட அதிக வீதத்தில் இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

கொல்லியை உடலில் கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த ஆர்கனோ குளோரின் எனப்படும் மூன்று வகைப் பூச்சிக் கொல்லிகள் குழந்தைகள் பிறக்கும் போது எடை குறைவாய்ப் பிறக்கக் காரணம். குழந்தைகளின் மூளை வளர்ச்சியை பாதிப்பவையாகவும் இருக்கின்றன என்றும் கூறுகிறார்.

மெக்ஸிகன் வம்சாவழியினர் மிக அதிக

# அதிர்ச்சி தரும் — பூச்சிக் கொல்லிகள்



பூச்சிக் கொல்லி தடுப்பு அமைப்பு என்ற Pesticide Action Network அமைப்பு பல அமெரிக்க மருத்து வமனைகளிடமிருந்து பெற்ற விவரங்களைக்கொண்டு சுமார் 2648 மக்களிடம் 34 வகை பூச்சிக் கொல்லிகளின் அளவை ஆராய்ந்து கண்டறிந்துள்ளது.

சான் பிரான்ஸிஸ்கோவை மையமாகக் கொண்ட இந்த அமைப்பு பூச்சிக் கொல்லிகளை நாம் எவ்வாறு உபயோகப்படுத்துகிறோம் என்பதையும், பூச்சிக் கொல்லி களுக்கு மாற்றாக இருக்கும் பல பொருட்களை பிரபலப் படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. இவர்கள் ஆராய்ச்சி செய்த 23 பூச்சிக் கொல்லி மருந்துகளில் ஒரு சராசரி ஆள் சுமார் 13 பூச்சிக் கொல்லி மருந்துகளை அளவுக்கு அதிகமாக உடலில் கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது. இந்த பூச்சிக் கொல்லிகளில் பல, மலட்டுத் தன்மை, பிறப்புக் கோளாறுகள், கான்ஸர் மற்றும் பல தீவிரமான ஆரோக்கியப் பிரச்சினைகளுக்குக் காரணம் என இந்த அமைப்பு தெளிவுபடுத்துகிறது.

6முதல் 11 வயதான குழந்தைகள் நரம்புகளைப் பாதிக்கும் குளோர்பைரி.'.போஸ் Chlorpyrifos என்ற பூச்சிக் கொல்லியை அமெரிக்க அரசாங்கம் வகுத்திருக்கும். அதிக பட்ச அளவைவிட 4 மடங்கு அதிகமாகக் கொண்டிருக்கின்றன என்பதும் இந்த ஆராய்ச்சி தெரிவிக்கும் விசயம். இந்த குளோர்பைரி.'.போஸ் Chlorpyrifos மருந்து பூச்சிகளின் நரம்பு மண்டலத்தைப் பாதித்து அவைகளை கொல்லும் வகையான பூச்சிக்கொல்லி.

டோ கெமிக்கல் கார்ப்பரேஷன் Doa Chemical 'CorP என்ற வேதி நிறுவனமே அமெரிக்காவில் இருக்கும் 80 சதவீத குளோர்பைரி.'.போஸ் உற்பத்திக்குக் காரணம். (இதுவே வால்ஸ்ட்ரீட் ஜர்னல் என்ற அமெரிக்க வியாபார பத்திரிக்கையை நடத்துகிறது. இந்த நிறுவனமே யூனியன் கார்பைட் நிறுவனத்தை வாங்கியது.)

பெண்கள் மிக அதிக அளவில் இந்த பூச்சிக் அளவில் லிண்டான் டிடிடி மற்றும் மெத்தில் பார்தியான் ஆகிய Lindane DDT and methyl Parthion பூச்சிக் கொல்லிகளை உடலில் கொண்டிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

ஏன் சில பிரிவினர் அதிக அளவில் இந்தப் பூச்சிக் கொல்லிகளை உடலில் கொண்டிருக்கிறார்கள் என்று ஆய்வு செய்யப்படவில்லை. இவர்கள் எங்கே வசித்தார்கள் என்பது பற்றி தகவல்கள் சேகரிக்கப் படவில்லை. தண்ணீர், உணவு மற்றும் சுவாசத்தினால் பூச்சிக் கொல்லிகள் உடலில் சேரலாம் என்று தெரிகிறது.

பூச்சிக் கொல்லிகள் தயாரிக்கும் கம்பெனிகள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று இந்த அமைப்புக் கோருகிறது. பூச்சிக் கொல்லிகள் பரவுதல் பற்றி ஆய்வு இன்னமும் தீவிரப்பட வேண்டும் என்றும் இந்த அமைப்புக் கோருகிறது. ஆபத்தான பூச்சிக் கொல்லிகளைத் தடை செய்ய வேண்டும். பூச்சிக் கொல்லிகள் தயாரிப்பாளர்கள் மனித ஆரோக்கியம் கெடாது என்று நிரூபிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் எனவும் இந்த அமைப்புக் கோருகிறது.




# தாய்ப்பாலும் குழந்தைகளும்

குழந்தை பிறந்தவுடன் தாயில் நிகழ்கின்ற ஓமோன்களின் மாற்றங்களால் தாய்ப்பால் சுரக்கின்றது. குழந்தை பிறந்து முதல் மூன்று நாட்களுக்கு மஞ்சள் நிறத்தில் தடிப்பான திரவம் சுரக்கும் (கொலஸ்ரம்) இதில்தான் குழந் தைக்கு வேண்டிய நோய் எதிர்ப்பு சக்தி அடங்கியுள்ளது. பெரும் பாலான பெண்கள் அவற்றை குழந்தைகளுக்குக் கொடுக்காமல் தவிர்ப்பதை கேள்விப்பட்டிருக் கின்றோம். ஆனால், அது முற்றிலும் தவறானது. நிச்சயமாக குழந்தைக்கு கொலஸ்ட்ரம் கொடுப்பது மிக மிக அவசியமே. மேலும் எவ்வளவு காலத் திற்குக் குழந்தைக்கு பால் கொடுப்பது? நீங்கள் ஆறு மாதகாலம் கொடுப்பதே சிறந்தது.இதைவிட மேலதிகமாக கொடுக்கலாம். பெரிதாக ஆபத்துக் கள் இல்லை. இருந்தாலும் சில பாதிப்புக்கள் உண்டு. என்னவென்று கேட்கின்றீர்களா? ஆறு மாதத்திற்கு பிறகு தாய்ப்பாலில் இருக்கும் இரும் புச்சத்து வெகுவாக குறைகின்றது.



தாய்ப்பாலில் உள்ள இரும்புச்சத் துதான் குருதியில் உள்ள சிவப்பு அணுக்களை உருவாக்கும் பிரதான கனிச்சத்து ஆகும். இச் சிவப்பு அணுக்கள் உடல் முழுவதும் ஒட்சிசனை கொண்டு செல்கின்றது. எனவே தாய்ப்பாலை மட்டும் கொடுத்து வருவதால் சில வேளைக ளில் குருதியிலுள்ள சிவப்பு அணுக் கள் குறையலாம். அதனால் உண வில் சிறிது மாற்றம் தேவை. குழந்தை திட உணவுப்பொருட்களை ஏற்க ஆரம்பித்ததும் பசுமையான இலைக் கறிகள், முட்டை மற்றும் இரும்புச் சத்து மிக்க உணவுப் பொருட்கள் என்பவற்றை கொடுக்க ஆரம்பிக் கலாம். அதற்கு மேல் குழந்தை களின் உணவில் மாற்றங்களை ஏற்படுத்துவது நல்லதே.

# தலைவலிக்கு மருந்தாகும்...

ஒரு கோப்பை கோப்பியில் உள்ள 200 மி கிரேம் அளவு கா.'. பின் தலைவலியை குறைக்க தரப் படும் 'இபுப்ரோ.'. பென் மருந்தைவிட 30 நிமிடம் விரைவாக வேலை செய்ய ஆரம்பிக்கிறதாம், இது கரண்ட் பெய்ன் அண்டு ஹெட்ஏக்ரி போர்ட்ஸ் என்ற அமெரிக்க மருத் துவ இதழில் வெளியான ஒரு ஆய்வு முடிவு.

கோபம் தலைவலிகள் வரக் காரணம் மண்டை ஓட்டை சுற்றி யுள்ள இரத்தக்குழாய்கள இளக்க மடைந்துதான் கோப்பியிலுள்ள கா.'. பின் என்ற பொருள் உள்ளே போனது இரத்தக்குழாய்கள் இறுக்க மடைந்து இரத்த ஓட்டம் சீராவதுடன் எண்டர்பின் என்ற உடலின் இயற்கை யான வலிக்கொல்லியையும் தூண்டு கிறது. தினமும் 4முதல் 5கப் வரை கோப்பி குடித்தால் பக்கவாதம் வரும் அபாயம் குறைகிறதாம் சொல்வது ஹார் வார்டு பல்கலைக்கழகத்தினர்.

ஒரு நாளைக்கு 7முதல்8 கப்வரை கோப்பி குடிப்பவர்களுக்கு இரண்டா வது ரக நீரழிவு நோய் வராது என்கிறார் கள் ஹாலந்து நாட்டு ஆய்வாளர்கள். இதற்கு காரணம் கோப்பியிலுள்ள கா.'.பின் குளோரோஜெனிக் அமிலம் போன்றவைகளேயாகும்.

# ஒவ்வாமை

ஒவ்வாமை இன்று பெரும் பாலானவர்களில் ஏற்படும் ஒரு நோய் எனலாம். எனது நண்பன் ஒருவனை கேட்டேன் "வா மச்சான் இன்றைக்கு ஆட்டிறைச்சிக் கறி ஒரு பிடி பிடிப்பம்" என்று. அப்போது அவன் கூறினான் எனக்கு வேண்டாம். ஏனென்றால் ஒத்துவராது. ஒவ்வாமையாக இருக்கும் இதுதான் இன்று பலருக்கு உள்ள பிரச்சினை, இந்த ஒவ்வாமை எல்லோ ருக்கும் ஒரே காரணத்தால் ஏற்பட மாட்டாது. சிலருக்கு சில சில உணவு வகைகளை உண்ணுவதால் ஏற்படும். வேறு சிலருக்கு தூசிகளால் ஏற்படும், மேலும் சிலருக்கு புகைகளால் ஏற் படும். இவ்வாறு ஒவ்வாமை ஏற்படு வது ஆளுக்காள் வேறுபட்டுக் காணப் படும்.

ஒவ்வாமை என்றால் என்ன? ஏனையவர்களுடைய உடலுக்கு பொதுவாக எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத ஒரு பொருள் மற்றொரு வருக்கு விரும்பத்தகாத விளைவு களை ஏற்படுத்துமாயின் அதனை ஒவ்வாமை என்று கூறுகின்றனர். ஆஸ்துமா,எக்ஸிமா போன்றன ஒவ்வாமையால் ஏற்படும் மிகப் பிரதான நோய்களாகும். ஆனால், உடலில் எந்தப்பகுதியும் ஒவ்வாமை யால் தாக்கப்படலாம். மூக்கில்:- மூக் கடைப்பு, தும்மல், அரிப்பு,நீர்வடிதல் போன்ற அறிகுறிகளையும் தோலில் எக்ஸிமா,சொறித்தடிப்பு போன்ற வற்றையும், வயிற்றோட்டம்,வயிற்று முறுக்கு, கண் எரிவு, கண்ணில் நீர்வடிதல் போன்ற பல்வேறு அறிகுறிகளும் தோன்றலாம். மேலும் சிலருக்கு ஸ்டிக்கர் பொட்டு, மற்றும் உள்ளாடைகளில் காணப்படும் பிளாஸ்ரிக் கொழுக்கிகள் போன்றவற்றாலும் தோல் ஒவ்வாமை ஏற்படவாய்ப்புண்டு. இவற்றை விட நோய்களை தீர்க்கும் சில வகை மருந்துகள் கூட ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. அவற்றில் முக்கியமானது பென்சிலின் (PENICILLN) பென்சிலின் ஒருவருக்கு சொறி,தடிப்பு, தலைச் சுற்று, அதிர்ச்சி போன்ற விளைவு களை ஏற்படுத்துகின்றன.மேலும் அஸ்பிறீன், இன்டோசிட், டெட்ரா சைக்கிளின்,சில தடுப்பு ஊசிகள், குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள், சில விட்டமின் மருந்துகள் போன் றனவும் ஒவ்வாமையை ஏற்படுத்து கிறது. அத்தோடு தலையிடி, கபால இடி , மனவிரக்தி, நெஞ்செரிவு, மனத்தளம்பல், வலிப்பு, படுக்கை யில் சிறு நீர் கழித்தல் போன்ற வற்றுக்குக்கூட ஒவ்வாமை காரண மாக இருக்கலாம்.

எனவே மேற்கூறப்பட்ட அறிகுறிகள் ஏதேனும் எமக்கு ஏற்படின் நாம் முதலில் எவற்றால் எமக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது. என்பதை அறிந்துகொண்டு அவற் றைத் தவிர்த்துக்கொள்வதே இதற்குச் சிறந்த சிகிச்சை முறை யாகும்.

# விடுதலை உணர்வு விருட்சமானது



ஓட்டமும், நடையுமாக எந்நேரமும் துடித்துத்திரியும் அந்தப் போராளியை எல்லோருக்கும் நன்றாகவே பிடித்திருந்தது. தனது கடமையை வெகு சிரத்தையாகச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டிருப்பதே அவனது வாழ்வாகி இருந்தது. எதையுமே துடிதுடித்து, வேகமாக கடமையுணர்வுடன் செய்வதே அவனது செயலாக இருந்தமையினால், அந்த போராளியின் விடுதலை உணர்வு என்றுமே விருட்சமாகவே அவதரித்திருந்தது.

மேஜர் சுரேந்திரன் (சேனாதிராசா மகாதேவன்) தாயக விடுதலைப் போராட்டத்தில் வித்தியாசமான விடுதலைவீரன் எடுத்துக்கொண்ட பணியினை உயிரை பணயம் வைத்துச் செய்வது மட்டுமல்ல அதனையே சாதித்துக்காட்டவேண்டும்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையிலேயே முதன்முதலாக மாவீரன் மேஜர் சுரேந்தரை போர்க்களத்தில் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. மிக மோசமான போர்க்காலமது. இயலாமையின் உருவாய் எதிரியவன் தன் ஈனத்தனத்தினைக் காட்டி எறிகணைகளை தூவி, யாழ் மண்ணை கபலீகரம் செய்ய வந்த நாட்களின் இடர் நிறைந்த போர்க்களமது. எதிரி கட்டம் கட்டமாக கோப்பாயை அண்மித்துவிட்டான். முதல்நாள் சண்டை முடிந்து ஒருவாறாகத் தப்பிப் பிழைத்த போராளிகள் அடுத்த நாள் நடக்கப்போகும் தாக்குதலை எதிர்பார்த்து காவலரண்கள் அமைப்பதிலும், திருத்துவதிலும், ஏனைய வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சதா எமக்கு இதேபோன்ற வேலைகளாகவே இருந்தமையினால் சோர்வும், களைப்பும் இருக்கவே செய்தது. என்றாலும் எதிரியை எதிர்கொள்ளவேண்டும் என்றே இடைவிடாது எமது வேலைகளை செய்து வந்தோம்.

மாலை 4.30.இற்கு எமக்குப் பக்கத்தில் தனது மருத்துவப்பையைக் கழற்றி வைத்துவிட்டு, தனக்கென ஓர் சிறந்த காப்பரணை அமைக்கத்தொடங்கிய மேஜர் சுரேந்தர் இரவு 07 மணியை தாண்டியும், தன்னந்தனியே இடைவிடாது தனது வேலைகளை செய்வதிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தான். ஒருவாறாகத் தனது வேலையைச்செய்து முடித்தவன் எமது காவலரணுக்கு வந்து அண்ணோய் நானும் உதவி செய்து தரவா? என தனக்கே உரிய அமைதியான குரலில் கேட்டான்.

அதைக்கேட்ட எமது அணித்தலைவர், வேண்டாம் தம்பி நீங்கள் தனியவே வேலை செய்தீர்கள். நாம்தான் உங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று சொன்னதும் மேஜர் சுரேந்தர் கேட்கவே இல்லை... எம்முடன் சேர்ந்து அவனும் வேலைசெய்யத் தொடங்கிவிட்டான். பின் எல்லோரும் இணைந்து இரண்டுகாவலரணையும் செய்துமுடிக்க நேரம் 09 மணியை கடந்துவிட்டது. எதிரி எறிகணைகளைப் பரவலாக அடித்துக்கொண்டே இருந்தான். எமக்கு மிக அருகில் வந்து வீழ்ந்துவெடித்த எறிகணைகளுக்காக நாம் சிலவேளைகளில் பாதுகாப்பு நிலை எடுத்தோம். அப்போதெல்லாம் மேஜர் சுரேந்தர் தனது மருத்துவப் பையையும், துப்பாக்கியையும் பாதுகாக்கவே முதலில் செயல்பட்டான். அடுத்த் நாளைய எதிரியின் நகர்வை எதிர்பார்த்தவாறே நாம் இரவுக்கடமைகளுடன் பக்கத்திலுள்ள பாதுகாப்பான இடத்தில் தங்கிவிட்டோம்.

மறுநாள் காலை, 05 மணிக்கெல்லாம் எதிரி தனது தாக்குதலைத் தொடங்கிவிட்டான். அதற்கு முன்பாகவே 4.30இற்கு மேஜர் சுரேந்தரே எம்மை வந்து விழிப்பாக்கினான். தூரத்தில் இராணுவ வாகனங்கள் சத்தம் கேட்பதாகவும், எழுந்து நிலைகளுக்குச்செல்வது நல்லது என்றும் சொல்லிவிட்டு வெளியில் சென்றவன் பக்கத்திலுள்ள இன்னுமொரு நிலைக்கும் சென்றுவந்துவிட்டு தன்னிடமிருந்த இன்னுமொரு போராளியைக்கூட்டிக்கொண்டு தனது நிலைக்குச்சென்றான். சென்றவன் திடீரென ஓடிவந்து முன்னுக்கு சத்தம்கேட்குது என்றும், வந்தால் விடக்கூடாது என்றும் சொல்லிவிட்டு திரும்பியவனை எறிகணை ஒன்று தூக்கி சுமார் 10 மீற்றரில் போட்டது. அடுத்த எறிகணை நாமிருந்த வீட்டின் ஒரு பகுதியை இல்லாது செய்தது. ஏனைய எறிகணைகள் பக்கத்தில் விழுந்துவெடித்து ஓய்ந்ததுமே நாம் சுரேந்தரை தேடினோம்.

சுரேந்தர்....சுரேந்தர் என்று கத்தியபடி நாம் ஓட எனக்கொன்றும் இல்லை என்று உடல்முழுதும் தூசிப்படலத்துடன் எம்முன் வந்தான். எறிகணையால் தூக்கி எறியப்பட்டு உடல் நோவுடன் வந்தவன். தனது நோவையும், பொருட்படுத்தாது, ஆறுமணிக்கு பெரும்பாலும்

**க.மிரேசு**

சண்டையை தொடக்குவான் கவனமாக இருங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றான். அவன் சொன்னது போலவே சண்டை தொடங்கிவிட்டது.

எறிகணைகளை தூவிக்கொண்டு ஆக்கிரமிப்பு எதிரிகள் நகரத்தொடங்கினர். ஆனால், முற்றிலும் எதிரி எதிர்பார்க்காதளவு எமது படையணிகளும் பக்கம் பக்கமாக நிலையெடுத்து தாக்கத்தொடங்கினர். சுரேந்தரின் நிலை எமக்கு அருகில் என்பதனால் 'அவனின் சண்டைக்காட்சி எமக்கு மேலும் உசாரைத் தந்தது.


மழை இருள் சூழ்ந்திருந்ததனால், கோப்பாய் வாழைத்தோட்டங்களினூடே உருமறைப்புடன் வந்த எதிரியை இனங்காண்பது கடினமாக இருந்தது. என்றாலும் எங்களது பார்வையிலிருந்து எ்திரி தப்பமுடியவில்லை. எதிரியை நோக்கி எல்லோரும் சுடத்தொடங்கியபோது மேஜர் சுரேந்தர் தனது மருத்துவப்பையை தோளில் போட்டபடி கையிலிருந்த துப்பாகியால் எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டே இருந்தான். வந்த எதிரிகள் திணறுமளவிற்கு சுரேந்திரனின் சண்டையின் வேகம் இருந்தது. எதிரியும் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருந்தான். அவன் முன்னேற முன்னேற எமக்கும் அவனை சுட்டுவீழ்த்துவது சுகமாகவே இருந்தது. சண்டைமுடிந்து பார்த்தபோது சுரேந்தரின் நிலைக்கு முன்னால் மூன்று எதிரிகளின் சடலங்கள் கிடந்தன. பெரும்பாலும் எதிரிகள் பலர் காயமடைந்திருக்கவே வேண்டும்.

சண்டை முடிந்தவுடன் சுரேந்தர் ஓய்வெடுக்க நினைக்கவில்லை. உடனேயே தனது மருத்துவ சேவையை தொடர்ந்துவிட்டான். காயமடைந்த போராளிகளை எடுத்துவரச்சொல்லி, உடனே மருத்துவ வேலைகளைச் செய்து காயக்காரரை மருந்தவ மனைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். அத்தோடு நின்றுவிடாது, அடுத்தநாள் சண்டைக்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டு, போராளிகளை சாப்பிடும்படியும், குளிக்கும்படியும் சொல்லி, தனது பரிவை வெளிக்காட்டினான். சுரேந்தர் எப்போதும் தன்னைவிட தனது போராளிகளில் அக்கறையுடனும், கடமையில் விசுவாசமாகவும் இருந்தான். முல்லைத்தீவு தாக்குதலுக்காக வேவு அணிகள் உள்நுழையும் போதெல்லாம், தனது மருத்துவப் பையுடன் வேவு அணியினருக்கு சேவை செய்ய காத்திருந்த நாட்களே அதிகம். கள மருத்துவனாக இருந்தாலும், உள்ச்செல்லும் வேவு அணிக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படும் என எதிர்பார்த்தவனாய் தனது துப்பாக்கியுடன் ஆயத்தமாக இருப்பான். அவன் எதிர்பார்த்து இருப்பதுபோலவே எதிரியின் பிரதேசத்திற்குள் உள்நுழையும் அணிக்கு திடீர்த்தாக்குதல்கள் நடைபெற்றபோது சுரேந்தர் முன்சென்று தனது சண்டைத் திறமைகள் எல்லாம் ஒன்றுதிரட்டி, எதிரியை எதிர்கொண்டு சாதித்த சாதனைகள் எத்தனையோ, இன்றும் மறைந்திடா காவியமாகவே இருக்கிறது.

இதேபோலவே ஆனையிறவு, பரந்தன் தாக்குதலுக்கான வேவுப் பணிகளை செய்வதற்கென நியமிக்கப்பட்டவர்களில் மேஜர் சுரேந்தரும் ஒருவன். அந்த நடவடிக்கையின்போது சுரேந்தரின் செயற்பாடுகள் முற்றிலும் வித்தியாசமானதாகவும், எதிரிக்கு பேரிடியைத் தருவதாகவும் இருந்தது. எவ்வேளையிலும் விழித்திருக்கும் எதிரியின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, சுரேந்தரின் அணிகள் எதிரியின் பாசறைக்குள் புகுந்து தரவுகளை எடுத்துவந்து சாதனைபடைத்தது. எத்தனைவேவுத்தரவுகள் வந்தாலும் தளபதி பால்ராஜ் மேஜர் சுரேந்தரின் நம்பிக்கை மிகுந்த தரவுகளுக்காகவே காத்திருப்பார். அந்தளவு சுரேந்தர் தனது கடமைகளை நேர்த்தியாகச் செய்வான்.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது, பரந்தன் பகுதியில் கடுமையான சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தச்சண்டையில் ஒரு போராளி காயமடைந்து விட்டான். மருத்துவப்போராளி வீரவேங்கை பூபாலும், மேஜர் சுரேந்தரும் அப்போராளிக்கு மருந்துகட்டி முதலுதவி செய்துகொண்டிருக்கையில், இதைபிடியென தன்னிடமிருந்த மருந்துக் குப்பி ஒன்றை வீரவேங்கை பூபாலிடம் கொடுத்துவிட்டு தனது துப்பாக்கியை எடுத்து கண்ணிமைக்கும் நேரத்தில், அவனிலிருந்து 50மீற்றர் தூரத்திலிருந்த வரம்பை நோக்கிச்சுட்டான். பின் தன்னிடமிருந்த கையெறி குண்டை கழற்றி எறிந்தான். அதன் பின் தனது மருத்துவத் சேவையைத் தொடர்ந்து, அந்தப் போராளியைக் காப்பாற்றி அனுப்பிவிட்டு, வீரவேங்கை பூபாலனை கூட்டிச்சென்று தான் சுட்ட எதிரி ஒருவனின் உடலை காட்டினான். எவ்வேளையில் எப்படி நடக்கவேண்டும் என்று நன்கு சிந்தித்து வெற்றியுடன் செயலாற்றிய அந்தவீரன் 30.08.97 அன்று வீரமறவனானான். மருத்துவப் போராளியானவன் உயரிய இலட்சியம் கொண்ட போராளிகளின் உயிரை எப்படிக் காப்பாற்றுவானோ அதேபோல் ஆபத்தான எதிரியின் உயிரையும் பறிக்கவேண்டுமென்பான். ●


# பிஞ்சுமனக்கனவு




அதிகாலை நான்கு மணி, கட்டிலில் கிடந்தபடி பார்க்கின்றேன் கவலை மனதை நிறைக்கின்றது. ஏன்தான் இந்த உலகத்தில பிறந்தோம் என்று எண்ணத்தோன்றுகின்றது.

அதிகாலை விடிகிறபோது கூட ஒரு ஆனந்தம். ஆனந்தமான ராகத்தோடுதான் விடிகின்றது. என்னதான் அந்தப் பூமியில் அப்படியொரு புண்ணியத் தன்மை, கோயில் மணியோசை ஒலிக்கும், கோழிகளின் குரலோசை கேட்கும்.

காலை விடிந்துகொண்டு வரும்போது புல்லினங்கள் கீச்சுக் கீச்சு என்று எழுந்துவிடும். கோழி கொக்கரிக்குது. அது மட்டுமா படுத்துக் கிடந்த தாத்தா முற்றத்துக்கு வந்து ஆ.... அந்த விடிவெள்ளி மேற்கே கிளம்பி விட்டது எழும்படா விசாகன் இப்ப போய்ப் பால் கறந்துகொண்டு வருவம் என்று எத்தனை ஆனந்தம் அந்தக்காலைப் பொழுதை வரவேற்று வேலைகளைத்தொடங்க.



நான் திரும்பவும் அம்மாடா இல்லை தமிழருடைய இல்லை என்ர தாத்தா ஏன் என்னுடைய தமிழ் மண்ணுக்குப் போகவேண்டும்.

எப்படி மீண்டும் போவது. என்ன சொல்லி இந்த சொர்க்க பூமியாக அம்மா சொல்லிக் கொள்ளும் இந்த அவுஸ்திரேலியாவில் இருந்து, இந்த நாட்டை விட்டுப்போவது.

எனக்குப் பதினைந்து வயதுதான் ஆகின்றது. தங்கை அபிஷாலினிக்கு ஏழு வயதுதான்.

எனக்குத் தங்கைச்சி மேல சரியான பாசம். அவளுக்கும் நான் எப்பவும் அவளோடையே இருக்க வேண்டும்.

அப்பா 18 மணித்தியாலம் வேலை, அம்மா எட்டு மணித்தியாலம் வேலை. தங்கைச்சிக்கு நான்தான் எல்லாமும். இந்த வட்டத்திற்குள் இருந்து எப்படி? எப்படி இந்த மண்ணைவிட்டுப்போவது.

அதிகாலை நாலு மணி தொடக்கம் நித்திரை வரவில்லை. கதவைத் திறந்துகொண்டு அப்பா வருகின்றார்.

நான் ஓடிப்போய் அவருடைய கையைப் பிடிக்கின்றேன். அவருக்கு நித்திரைக்களைப்பும் தூக்க அலுப்போடும் என்னை அணைக்கின்றார்.

என்ன.... விசாகன் நித்திரை கொள்ளாமல் என்ன...

அப்பா நானும் தங்கைச்சியும் அம்மம்மாவோட போகப் போகின்றோம்.

இதைக் கேட்ட அப்பா "what .. what .. are you talking" அப்பாவுக்குக் கோபம் வந்தால் மட்டும் தான் ஆங்கிலத்தில் பேசுவார். அதால தெரிந்து கொள்ளலாம் அவர் கோபமாக இருக்கின்றார் என்று. அம்மா எழும்பி பால் சுட வைத்துக் கோர்ன்பிளக்சையும் அதில் போட்டு எனக்கும் தங்கைக்கும் எடுத்து வைத்துக்கொண்டு அப்பாவுக்கும் கொடுக்கின்றார். நான் கோர்ன்பிளக்சையும் கையில் எடுத்துக்கொண்டு கதிரையில் இருக்கின்றேன்.

விசாகன் குட்டி என்ன தோசை நல்லா இருக்கிறதா? நல்லெண்ணைத் தோசை. இன்னொன்று சாப்பிடுங்கோ.

என்னடா விசாகன் அங்க அம்மாதோசை அப்பம் எல்லாம் செய்து தாறவாவா?

ஐயோ அம்மம்மா, தோசை என்று சொல்லி றொட்டி செய்வா அந்தந்தப் பெயரை சொல்லிச் சாப்பிடுவோம்.
அப்பாதான் இப்படித்தான் தோசை அப்பம் என்று சொல்லித்தருவார்., நாங்கள் சாப்பிடுவோம்.

நினைவுகள் நெஞ்சை அடைக்கின்றன. கோர்ன் பிளக்சை சாப்பிட முடியாமல் வைத்துவிட்டு எழும்புகின்றேன்.

விசாகன் ஏன் சாப்பிடவில்லை.

ஊருக்குப் போய் வந்ததிலிருந்து நீர் மிகவும் மோசம். அம்மா என் அருகில் வந்து என்னை ஏசுகின்றார். என்னை ஏன் அம்மா அங்க கூட்டிக் கொண்டு போனனீர்கள்.

இங்கபார் விசாகன் உமக்குப் பதினைந்து வயது. படிக்கிறதைப் பற்றி thing பண்ணும் ok.

காலையில் புத்தகங்களைச் சுமந்து கொண்டு அம்மாவின் காரில் போய் இறங்குகின்றேன்.

எனது நண்பர்கள் எல்லோரும் ஓடி வந்து என்னைச் சூழ்ந்து கொண்டு கேள்விகள் கேட்கின்றார்கள்.

எப்படி உனது holiday எங்கு போனாய், நான் பலதடவை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் பேச முடியவில்லை.

இது முரளி என்ற பெயர் கொண்ட தமிழே தெரியாத ஆங்கிலத் தமிழன்.

என்ன விசாகன் உன்னை எங்கேயும் காணமுடியவில்லை. நல்லா உடம்பு வைத்துக்கொழுத்து வந்திருக்கின்றாய்.

இது அபிராமி தமிழ் பாதி ஆங்கிலம் பாதி பேசத்தெரிந்த தமிழ்ப் பெண்.

என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை.

நான் தமிழீழத்தில் கண்ட காட்சிகளையும், அதிசயங்களையும் கதை கதையாகச் சொன்னேன்.
அவர்களும் ஆர்வமாகக் கேட்டார்கள்.

சிலர் என்ன விசாகன் சும்மா புழுகுகின்றாயா? எங்கட அம்மா அப்பா யாரும் இப்படியாகச் சொல்லவில்லையே. நீ சொல்வது உண்மையா?....
எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

தமிழீழத்தில் மைக்டோனல்ஸ் இருக்கிறதா?
தமிழீழத்தில் மைக்டோனல்ஸ் தேவையில்லை.

தமிழீழத்தில் நான் கண்ட காட்சிகளும், குளங்களையும், வாய்க்கால் கரைகளையும், விளையாடிய இடங்களையும் போட்டோ எடுத்திருந்தேன்.
அதில் சில போட்டோக்களைப் பார்த்தவர்களின் கண்கள் விரிந்தன.

சரி நீங்கள் எல்லோரும் சனிக்கிழமை வீட்டுக்கு வாருங்கள் இன்னும் படங்கள் காட்டுகின்றேன்.



என் வகுப்பு மாணவர்களில் ராஜீவன், வரதன், றிச்சி, அபிராமி, டேவிட், யூட், பாரதி எல்லோரும் என் அறையில் சங்கமமானார்கள்.

அன்று எனது அப்பா வேலைக்குப் போகவில்லை.

தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளையும் எனது வீடியோவிலும் கமராவிலும் நான் எடுத்துக்கொண்டு வந்த பகுதிகள் எல்லாவற்றையும் பார்த்தார்கள்.

இரவு எட்டு மணியாகும் போது எல்லோரும் வீட்டிலிருந்து வெளியேறும் போது
அபிராமி தான்,

என்ன அங்கிள் விசாகன் தமிழீழத்தில் போய்ப்படிக்கப் போகிறாராம் உண்மையா?

அப்பா அபிராமியின் கேள்விகளுக்கு எந்தப்பதிலும் சொல்லவில்லை.

ஏதோ மேலே பார்த்து தலையைத் திருப்பிக்கொண்டாரே தவிர எதையும் வாய்திறந்து சொல்லவில்லை.

எல்லோரும் வெளியேபோன பின் கை, கால், முகம், கழுவி சாமி கும்பிட்டு முடிய எனது அறைக்குள் வந்தார்.

என்ன அபிராமி சொன்ன மாதிரி தமிழீழம் போகப்போகின்றாய் என்று ஏன் சொல்லுகின்றாய். நாம் இனி அங்க போகப்போறதில்லை. ஏதோ மூன்று மாதம் லீவு கிடைத்தபடியால் நீயும் அம்மாவும் தங்கையும் அங்கு போனீர்கள்.

இனிமேல் அப்படிக்கிடைக்குமா என்பது சந்தேகம்.
என் தலையைத்தடவி எதையோ அவர் சொன்னாலும், மனதில் இருந்து வந்த ஆழமான பெருமூச்சில் அவருடைய ஆத்மா எதையோ இழந்துவிட்ட தவிப்பும் ஏதோ கிடைக்காமல் போன ஏமாற்றமும் என்னால் உணர முடிந்தது.

இல்லையப்பா அம்மாவும் தங்கைச்சியும் இங்கேயே இருக்கட்டும். நான் மட்டும் அங்க போய் படிக்கின்றேன்.

விசாகன் no....no... more

இல்லை அப்பா நான் போவன் கையை ஓங்கிக் கொண்டு வந்தவர் தாவாரம் இல்லை, தனக்கோர் வீடில்லை, தேவாரம் ஏதுக்கடா?....

இரண்டு பரப்புக்காணி வாங்கித்தர முன்வராத உறவுகள். என்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்தனான். அவர்கள் என்னை மதிக்கவில்லை. மருந்துக் குளிசையைக்கூட தன் சகோதரத்துக்குக் கொடுக்காமல் பேணிக்குள் போட்டுப்பாதுகாத்துத் தான் மட்டும் பாவித்துக்கொண்ட சகோதரங்களுக்கு மத்தியில ஏன் எத்தனை சகோதரங்கள் வெளிநாடு வந்தும் தங்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதையும், ஆடம்பரமாக வாழ்வதையும் பார்க்கிறன் தானே.

**ஆவூரான்**
**(மேல்போர்ண்)**

பதினெட்டு மணித்தியாலம் உழைத்து, வந்த கடனையும் கட்டி சகோதரங்கள் பிள்ளைகள் என்று நான் பார்க்கவில்லையா?

அப்படிச் செய்த எனக்கு ஒரு காணித் துண்டு வாங்கித்தந்திருக்கலாம்.

தங்கிட வளவுக்குப் பக்கத்தில விலைபோன காணியை வாங்கித் தருவதற்கு ஏன் மனம் வரவில்லை. இவர்களுக்குச் சொந்தம் என்ற உறவு பக்கத்தில் வந்திருந்தால் தங்களுக்குப் பிரச்சினை வரலாம் என்று தானே காணியை வாங்கித்தரவில்லை. இந்த உறவுகளா உன்னையும் உன் படிப்பையும் பார்ப்பார்கள் என்று நம்புகின்றாய்.

அப்பா தன் மனதில் வெந்து கொண்டிருந்த பாதி ரணங்களைக் கொட்டித் தீர்த்தார்.

ஏன் அப்பா நானும் அம்மாவும் போகும் போது வந்திருக்கலாம் தானே. வந்திருந்தால் நாங்களே காணி பார்த்து வாங்கியிருக்கலாம் தானே.

அப்பாவைப் பார்த்து நான் கேட்டேன்.

விசாகன் உனக்கு விளங்காது. நீ நல்லாப்படித்து ஒரு நிலைக்கு வா அப்போது நீ எங்கு வேண்டுமென்றாலும் போய் உன் இஷ்டப்படி வாழ்......

என் கேள்விக்கு அப்பா நல்ல பதில் தராமல் எதையோ தொண்டைக்குள் விழுங்கிக்கொண்டார்.

விடுமுறை விட்டு ஆண்டின் இரண்டாம் தவணைப் பரீட்சை ரிப்போர்ட் வந்தபோது என்னால் நம்ப முடியவில்லை. எல்லாப் பாடத்திலும் 30 புள்ளிகளுக்கு மேல் எடுக்கவில்லை.

அபிராமியும், அன்ரனிற்றாவும் துள்ளிக் குதித்தார்கள். டேவிற்றும் றேமனும் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். நான் ரிப்போட்டை வைத்துக்கொண்டு திருப்பித்திருப்பிப்பார்க்கின்றேன். என் மனக்கண்ணின் முன்னால் தமிழீழத்தின் அன்பு இல்லத்தின் மாணவர்களும், கொட்டில் பள்ளிக்கூடத்தின் சிறார்களும் கண்முன்னே வந்து கொண்டிருக்கும்போது......

என் தோளில் கையை வைத்து ரீச்சர் கத்தறின் என்ன விசாகன் என்ன நடந்தது. உமக்கு ஏன் படிக்கவில்லை. ஏன் எக்ஸாம் வடிவாக எழுதவில்லை. ரீச்சர் கத்தறின் எதையும் மனம் விட்டுப்பேசுவார்.
அவரோடு உண்மையைச் சொன்னேன். என்னால் படிக்கமுடியவில்லை.

இப்படி நினைவையும் எண்ணங்களையும் அங்கே அலைய விட்டு விட்டு எப்படிப்படிக்கமுடியும்.

அப்பா, அம்மா ரிப்போர்ட்டைப் பார்த் தார்கள் என்மீது கோபித்தார்கள் கொதித்தார்கள்.

பின் குறிப்பாக எழுதப்பட்டிருந்தது. தானும் படிக்காமல் படிக்கின்றவர்களையும் படிக்கவிடாமல் தனது holiday நாட்களில் நடந்த சம்பவங்களை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்.

அப்பாவும், அம்மாவும் மாறி மாறி இரண்டு அடி அடித்தார்கள்.
அப்பாதான் சிறிது. நேரத்தில் என் அருகில் வந்து,

'என்ன விசாகன் என்ன நடந்தது. வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருகின்ற நீ இப்போது ஐந்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றாய். இனி என்ன செய்யப்போகின்றாய்.'

நான் அம்மம்மாவோடு ஊருக்குப் போகப்போகின்றேன், உனக்கென்னடா விசரே பிடித்திருக்குது.

அங்க என்னடா இருக்கு. சண்டை தொடங்கிவிட்டால் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் செத்துப்போய் விடுவாய்.
அம்மா ஆக்கிரோஷமாகக் கத்தினாள்.

என்ன, அங்க சாப்பாட்டுக்கோ... எத்தனை வெளி நாட்டுக்காரர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டு எப்படிப்புகழ்கின்றார்கள். நீங்கள் புரிந்துகொண்டது அவ்வளவுதான்.

நீ எனக்குப் புத்தி சொல்கின்றாயா? அங்க என்னடா இருக்கின்றது. அங்க அப்பா என்ன இல்லை.

சொந்தம் என்று எல்லோரும் என்மீது அன்பாயும் பாசமாகவும் இருக்கின்றார்கள். காரம்மா ஆச்சியினுடைய கூழும் சின்னம்மா அன்ரியின்ர கஞ்சியும், பெரியம்மாவின் அப்பம் பிட்டு குமரேசன் மாமாவும் ராஜன் மச்சானும் கடலுக்குக் கூட்டிக் கொண்டு போவார்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க..)

# கார்த்திகைப் பூ

பூமித்தாயின் இதயம் பிளந்து
புதைக்கப்பட்ட மனிதவிதையின்
விருட்சம் நான்
காலத்தை எழுத "காலம்" ஆனவரின்
கல்லறை கழுவ பொழியும் மழையில்
துளிர்த்தவள் நான்
பூமகள் பொன்மேனி மிதித்த பேய்களின்
வீடெரிக்க நெருப்பாய் எழுந்தவரின் வடிவில்
சிரிப்பவள் நான்
பொன்னுடலைப் புதைக்கையில் போர்த்திய
புலிக்கொடியின் நிறத்தில்
பூப்பவள் நான்
வெங்களமாடிய புலி நெஞ்சிலாடிய
நஞ்சையும் நானணியக் காண்பாய்
முற்றிலும் நீ என்னைப் போர்க்களப் புலியின்
உடையில் காண்பாய்
வடிவில் காண்பாய்.
கல்லறைக் குழந்தைகள் கண்விழிக்கும்
கார்த்திகையில் பிறந்ததால் நான்
கார்த்திகைப் பூவானேன்

தேசக்குழந்தைகளை, தேசியக் கொடியை
என்னில் தாங்கியதால்
தேசியப் பூவானேன்.

அன்பு

# மெல்ல மேலெழும் வெறி அல்லது மறதி

மீண்டுமொரு முறை கேட்டதந்த முழக்கம்
இம்முறை முன்பைப்போல்
அதிர்வு அவ்வளவாக இல்லாவிடினும்
புருவங்கள் உயர உதடுகள் மலர்ந்தன
முழங்கியோனை எண்ணி.
அரசிலை சூழ்ந்து நெருங்கிக் கலந்து
இயல்பினைச் சப்பிய
ஆற்றங்கரையில்
தயார் நிலைபற்றி முழக்கமிடப்பட்டபோது
இரண்டு தசாப்தங்களின் தழும்புகளைத் தடவிச்
சிலிர்த்தன நினைவுகள்.
காலக்கழிவின் முதிர்ச்சி
காணாமற் போனவையின் பட்டியலிற் சேர
மீளவும் எழுந்தது முழக்கம்
உடலுறை பேழைகள் விற்பனை வீழ
உல்லாசம் நுகரும் பயணியர் வந்து
விடுதிகள் நிறைந்து பணத்தின் ஓட்டம்
பெருகிடப் பெருகிட
மனிதரைச் சூழ்ந்தது மறதி
மெல்லப் புதிதாய் சோம்பல் முறித்து
எழுகிறது உன்மத்தர் இயல்பு.

பு.சத்தியமூர்த்தி

# ஞாபகத்துகள்கள்

விழிகள் உதிர்ந்த பின்னும் -என்
வீதிகள்....
தெளிவாகத் தெரிந்தது -உன்
வருகையின் பின் தோழி!
உனது
அன்பைப் பெறுவதற்கு
நம்
பாட்டிகள் சொன்ன
கதைகளில் வரும் - அந்த
"இராஜ குமாரனைப் போல"
ஏழுகடல்கள், மலைகள் கடந்து
நான்
எதையும் எடுத்து வரவில்லை உனக்காய்...
உனது சுவாசம்
என்மீதுபட்ட ஒரு கணத்தில்
எனது
தாயின் அணைப்பு
மீண்டுமொரு முறை கிடைத்ததாய்
தோன்றியதெனக்கு!
எனது
வறுமையின் சாலைக்குள்
காலடி எடுத்து வைத்த
ஆடம்பரத்தின்
அழகிய எளிமையே!
நம்மை
மனிதர்களாக(ப்) படைத்த
இறைவனுக்கு
ஒரு முறை
நன்றி சொல்வோம் வா!
உனது
இழப்புக்கள் எனக்காகவும்...
எனது துயரங்கள் உனக்காகவும்...
உன்னை என்னாலும்,
என்னை உன்னாலும்,
நிரப்பிக் கொண்டு...
இந்த மனிதர்களையெல்லாம்
வென்று விடுவோமா?
யாருடைய மடியில்
தலைவைத்து அழுவாய் என
யாரோ கேட்டபோது...
'அன்னையுடையது' என்று
கூறிய ஞாபகம்
இப்போது அதை -என்
அன்னையே கேட்டால்
மறைக்காமல்
உண்மையைச் சொல்லிவிடுவேன்
உன்னுடையதென்று!
முடிந்தால்...
உனது கணவனிடம்
சொல்லியழு...
நம்
பிரிவின் துயரை!

த.நிரஞ்சலன்

# புதிய பிறவிக்காக

காற்றின் கண்கள்
வட்டமிட்டுக் கொண்டன
ஒரு கணம் கண்ணீர்
துளியுடன்.

காற்றும் நானும்
கலந்த போது
மதுரமான- இசை
மழலை - பிறந்தது.

அம் மழலையின்
ஆழ்ந்த துயிலுக்கு
தாலாட்டுப்பாடிய
அந்த மனிதனின்

விரல்கள் எப்போதோ
முறிக்கப்பட்டு முடமாகிப்
போனதாம்.

அவனும் எங்கோ
என்னை மறந்து
மறைந்து போனான்.

என்னை- நீ தின்று
தன் பசியாறிய போது
நான் சாம்பரானேன்
இந்த மண்ணில்
இயற்கையின் கரங்களுக்கு
வலுவுண்டு
மீண்டும் - நீயும் நானும்
கலந்து
புதிய பூபாளம்
இசைப்போம்
விடியல் என்னும்
புதிய பிறவிக்காக

ரமணன்

# வரம்

உதிர்கையிலும்
புன்னகை
சிந்தினர்....
பூத்திருக்கும் செடிகளில்
எருவாய்
புதைந்ததற்காய்....

விழுகையிலும்
விழிகள்
ஒளிர்ந்தன...
விழுதுகளின்...
தடையகன்ற...
வீரதலுக்காய்....

மடிகையிலும்
இதயம்
இறுகவில்லை...
இதமாய்த்தான் ஓய்ந்தது
விதை பரந்த
வயல்களின்
உழுதலிற்காய்....

சாய்கையிலும்
சமாதியின்
சுகம் கண்டே
உடலும் சாய்ந்தது
விளை நிலங்களின்
விளைச்சலிற்காய்.....

தேசத்தின்
எல்லைகளை
வாழ்வதற்குரியதாய்...
தரமாய்....
தகுதியாய்....
பண்படுத்திட...
தம்மை இழந்ததால்

இறப்பு
இவர்க்கோ
இனிய இதழ்
இதமான வரம்

க.சந்திரா

# விடியல்


ஏனோ.....
எனக்கு இப்போதெல்லாம்
மனசே சரியில்லை...


விடியல்கூட
இருளாகவே
எனக்குத் தெரிகிறது.

இன்னுமேன்
விடியவில்லையென கேட்டால்
உனக்கு பைத்தியமா
என்கிறார்கள்.

ஓ...
எனக்கு புரிகிறது
விடியல் என்பது
அவர்களுக்கு
புரியவில்லை.

வேழினி



# காட்டுக் கோழி

நாம் வீடுகளில் வளர்க்கும் ஊர்க் கோழிகள் போன்று எமது காட்டிலும் கோழிகள் உண்டு. இதனை காட்டுக் கோழி என்று அழைக்கிறோம். இந்தக் காட்டுக் கோழி இலங்கையில் யால, சிங்கராஜவனம் போன்ற காடுகளில் காணப்பட்டாலும் தமிழர் தாயகப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இக் காட்டுக் கோழி இந்தியாவிலும் இலங்கை, தமிழீழம் ஆகிய நாடுகளில் தான் அதிகமாகக் காணப்படுகின்றது.

பறவையினத்தை சேர்ந்த இந்த காட்டுக் கோழி சிவப்பு மற்றும் கறுப்பு நிறம் கலந்த பல வர்ணங்களில் காணப்படுகின்றது. இவை தமது கூடுகளில் 2-4 முட்டைகளை இடுகின்றன இவை தனித்தனி குடும்பங்களாகவே வாழ்கின்றன.

எமது காட்டுக் கோழிகள் ஆணினம் 66 தொடக்கம் 73 சென்ரிமீற்றர்வரை வளர்ந்து காணப்படும்.

இதன் உடல் கட்டமைப்பு சிவப்பு நிற இறக்கை தொகுதிகளும் நீண்ட வால்களும் தங்கநிறத்திலான கழுத்துகளும் பார்ப்போரை கவரும் வகையில் அமைந்திருக்கும். இதனுடைய கொண்டை சிவப்பு கலந்த மஞ்சள் நிறத்தில் அமைந்திருக்கும்.

பெண்ணினம் 35 சென்ரிமீற்றர்வரையே வளர்ந்து காணப்படும். இவைகளும் பலவர்ணங்களில் உண்டு.



இவற்றுக்கு காட்டுப் பூனை, கீரி, நரி, மரநாய், என்பனவே எதிரிகள். இக்காட்டுக் கோழிகள், பூச்சி, புழுக்கள், கறையான், தானியங்கள் என்பவற்றை உணவாகக்கொள்கின்றன.

எமது வேட்டைக்காரர்கள் இவற்றுக்கு விசேடமாக வலை தயாரித்து பிடிக்கின்றார்கள். இவற்றின் இறைச்சி ஊர் கோழிகளின் இறைச்சியைப் போல் சுவையாக இருக்கும்.

இக்காட்டுக்கோழி இலங்கையின் தேசியப்பறவையாகவும் உள்ளது. இதனுடைய உயிரியல் பெயர் கலஸ் லெபயட்டி (Gllus lafayetii) இது பெவுனைடே இனக் குழுவை சேர்ந்த ஒரு பறவை இனமாகும்.

## நகைச்சுவை

**ஆசிரியர்:-** தண்ணீரில் வாழும் மூன்று உயிரினங்கள் சொல்லு.
**மாணவன்:-** மீன், முதலை, எங்க அப்பா.
**ஆசிரியர்:-** ??? !!!

**முட்டாள் ராஜா:-** குளத்தில் நிறைய மீன்கள் உள்ளனவே திடீரென்று தீப்பிடித்து விட்டால் மீன்கள் கருகிவிடுமே?
**முட்டாள் மந்திரி:-** நாம்தான் குளத்தைச்சுற்றி மரங்கள் வளர்த்திருக்கிறோமே மீன்கள் மரத்தில் ஏறிக்கொள்ளும் மகாராஜா.

**விஞ்ஞான ஆசிரியர்:-** ஒரு மெழுகுவர்த்தியை கொளுத்திவிட்டு இதிலிருந்து ஒளி எப்படி வந்தது என்று மாணவர்களிடம் கேட்டார்.
**மாணவன்:-** அதனை ஊதி அணைத்துவிட்டு இப்பொழுது ஒளி எங்கு சென்றதோ அங்கிருந்துதான் ஒளி வந்தது என்றான்.

## சொற்சிலம்பம் - 72

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | வு | ம | தி | ல் | ட்டா | தீ |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| ன | யா | ச் | சோ | ன் | ணி | கா |
| லை | அ | க் | ய | சு | ங் | கொ |
| சோ | ட் | த | ஷ் | ரா | மா | த் |
| சு | வ | கா | சா | ய் | யெ | ளி |
| சி | லை | ய் | ஓ | கி | லி | கு |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -70 இன் விடைகள்

01. கொபிஅனான்

02. தொலமி

**சொற்சிலம்பம் - 70 இன் பரிசுக்குரியவர்**

கு.நிதர்ஷன், தரம்-8, கிளி/கனகாம்பிகைக்குளம், அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி.

**சொற்சிலம்பம் - 70 இன் பாராட்டுக்குரியவர்கள்**

01. தே.றஜனி, இல:-214/01, விசுவமடு.
02. தே.தர்ஷிகா, 2ஆம் கட்டை, பரந்தன்.
03. சி.கட்சன், புனிதபூமி,முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.
04. கு.அருண், விசுவமடு ம.வி, முல்லைத்தீவு.
05. கு.பதிசாந்தன், தோணிக்கல், வவுனியா.
06. செ.நிஷாந், இல.39, செல்வபுரம், வவுனிக்குளம்.
07. அ.றோஜிதா, தரம் -7, அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல்.
08. பூ.பவளேஸ்வரன், கச்சார் வெளி, பளை.

01. கிழக்கின் இராணுவப் படுகொலை ஒன்று.
01) ..................................


02. அண்மையில் சுனாமி தாக்கிய ஆபிரிக்க நாடு.
01) ..................................

சொற்சிலம்பம்-72
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ..................................
முகவரி :-..................................
..................................

# மிருகங்களின் பல் வைத்தியம்

பகுதி-03



# வீடு


# ஆணும் பெண்ணும் இணைந்ததே ஆரோக்கியமான சமுதாயம்

முன்பொருகாலத்தில் இளவயதுத் திருமணங்கள் சமூகத்தில் பெரும் பிரச்சினையாக இருந்தது. பெண்கள் மீதான ஒடுக்குமுறை வடிவங்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. இன்று இவ்வாறு இல்லாவிடினும் அண்மையில் பதின்மூன்று வயதுச் சிறுமி ஒருவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டதாகவும் இத்தகவல் கிடைத்ததை அடுத்து காவல்துறையினர் அப்பெண்ணின் தாய் உறவினரை கைதுசெய்ததாகவும், பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் பத்திரிகைச்செய்தியில் அறியக் கூடியதாக இருந்தது.

இளவயதுத்திருமணம் என்பது பெண்ணை உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கின்ற விடயம் என மருத்துவர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள் இதேபோன்று பருவம் தப்பிய திருமணங்களும் கூட பெண்களை உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படைய செய்வனதான். காலங்கடந்த திருமணங்களினால் பிரசவங்களில் பெண் பல சிரமங்களைஎதிர்நோக்குகின்றாள்.

உரிய காலத்தில் பெண்கள் பலர் திருமணவாழ்வில் நுழைய முடியாமலுள்ளனர். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக ஒரு கால நம்பிக்கையில் மூழ்கியிருந்தனர் மக்கள். ஆனால் திருமணங்களை நிச்சயிப்பதற்கு குறிப்பாக தமிழ்ச் சமூகத்துக்கு பல காரணிகள் இருக்கின்றன. திருமணவாழ்வை எதிர்நோக்கி இருக்கும் பெண்களை உரைத்துப்பார்ப்பதற்கு பல உரைகற்கள் இருக்கின்றன.

படிக்காத பெண்ணைப் "பட்டிக்காடு" என்று ஒதுக்குபவர்கள், படித்து ஆற்றலும் அறிவும் ஆளுமையும் நிறைந்த பெண்களை 'அடங்காதவள்' என்கிறார்கள். காலம் காலமாய் பெண் ஆணுக்குக் கீழ்ப்படிந்தவள் என்கின்ற கருத்துருவாக்கம், தன்னைவிட ஆளுமை கூடிய பெண்ணை வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கொண்டு வாழக்கூடிய மன விசாலத்தை கொடுக்க மறுக்கிறது.



உயர்நிர்வாகப் பணி ஒன்றில் இருக்கும் பெண்- மணவாழ்க்கைக்கு மனங்களின் பொருத்தமே போதும் என்கின்ற பெருந்தன்மையோடு தன்னைவிட படிப்பில் குறைந்த, ஊதியம் குறைந்த ஒருவரை திருமணம் செய்யச்சம்மதித்தார். ஆனால் அந்த மனிதன் அப்பெண்ணை முதலில் சந்தித்தபோது முதலில் கூறிய வார்த்தையே "நீ என்னைவிடக்கூடப் படிச்சவள் பெரிய உத்தியோகம் பார்க்கிறாய் உனக்கு அலுவலகத்தில் மற்றவர்களை "நடத்தும்" திமிர் இருக்கும் அந்த மாதிரி வீட்டில் நீ என்னை 'நடத்த' நினைக்கக் கூடாது" என்று கூறியிருக்கிறார்.

இதைக்கேட்ட அந்தப் பெண மனமுடைந்துபோய் அந்த மனிதரை திருமணம் செய்ய மறுத்துவிட்டார்.

ஆளுமை நிறைந்த பெண்களை சமூகம் எப்படி நோக்குகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே.

சீதனம் அடுத்த பெரும் பிரச்சினையாய் அமைகிறது. இதை யார் கொடுக்கிறார்கள்? யார் வாங்குகிறார்கள்? எனப்பட்டிமன்றம் நடத்துவதைவிட இதை எமது சமூகப் பயன்பாட்டிலிருந்து இல்லாது ஒழிக்க வேண்டும் என்பதே முக்கியமானது. சீதனம் என்கின்ற புரையோடிப்போன புண்ணால் பெண்களும், ஆண்களும் பெருந்துன்பங்களை அனுபவிக்கிறார்கள். குடும்பங்கள் சீரழிகின்றன. பெற்றவர்கள் வேதனைப்படுகிறார்கள்.

சாதாரண மனித வாழ்க்கையின் தேவைகளுக்கும் அப்பால் பொருமிப்போயிருக்கிறது சீதனப்பேய். இது தவிர பெண்களை களங்கம் கூறுபவர்களாலும் பெண்கள் திருமண வாழ்வில் பாதிப்படைகின்றனர்.

ஒரு பெண் உறவினருடனோ அல்லது நண்பருடனோ வீதியில் நின்று கதைத்தால் "நடத்தை கெட்டவள்" எனப் பட்டமளிக்கப் படுவது இன்னமும் இருக்கத்தான் செய்கிறது.

ஆணையும் பெண்ணையும் உருவ அடிப்படையில் நோக்குபவர்கள் இப்படியான கதைகளை உருவாக்கின்றார்கள். 'ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது என்பதை இவர்கள் உணர்ந்துகொள்வதில்லை. ஆணும் பெண்ணும் நல்ல நண்பர்களாக இருப்பதை எமது சமூக அமைப்பு விடுவதில்லை. சிறுபராயத்திலிருந்தே ஆணையும் பெண்ணையும் பேதங் காட்டி உருவாக்கும் சமூக அடித்தளத்தின் பாரிய விளைவே இத்தகைய சிந்தனை வெளிப்பாடாக இருக்கிறது.

சில ஆண்கள் (இளைஞர்கள்) தம்மைவிட மிகமிக வயது குறைந்த பெண்களையே திருமணம் செய்யவிரும்புவதாகவும் அறியமுடிகிறது. எனக்கு தெரிந்த ஒருவர் ஒருநாள் தனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதாக மனவருத்தப்படுவது மாதிரி கூறினார். "நல்லவிடயம் ஏன் இப்படி சோகமாகச் சொல்கிறீகள்? என்று கேட்டேன். 'அந்தப் பிள்ளைக்கு கொஞ்சம் வயது கூட..... அது தான்" என்றார்.

'உங்களை விடக் கூடவா?... எத்தனை வயது? என்று கேட்டேன். 'எனக்கும் அவவுக்கும் ஓரேவயது தான். முப்பத்திரண்டு' என்றார். இப்படியான செய்திகள் எமக்கு பல விடயங்களை முன் வைக்கின்றன. பெண்கள் பற்றிய தவறான கருத்தூட்டல்கள், கருத்து உருவாக்கங்கள் இப்படியான சிந்தனைகளை உருவாக்குகின்றன.

ஆணா? பெண்ணா? என்கின்ற கயிறிழுத்தலை விட்டு விட்டு ஆண்களும் பெண்களும் சேர்ந்து எமது சமூகத்தை, தேசத்தை உயர்த்த ஆரோக்கியமாக இயங்கவேண்டும். வாழ்க்கை பற்றிய உண்மையான சிந்தனைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

புதியதலைமுறைகளை யாவது எதிர்கால சிந்தனையோடும் தெளிவோடும் ஆரோக்கியத்தோடும் நெறிப்படுத்தவேண்டும்.

**ஆதிலட்சுமி சிவகுமார்**

# வேலைப்பழுவால் பதட்டப்படாதீர்கள்

பதட்டப்படுதல் என்பது உள்ளத்தையும் உடலையும் சோரவைத்துவிடும். பொதுவாக வேலைப்பழு அதிகரிக்கும் போதோ, முரண்பாடுகள் ஏற்படும்போதோ பதட்டம் ஏற்படலாம். இப்பதட்டம் சிலவேளைகளில் கோபத்திற்கும் வித்திடுவதுண்டு. இவ்வாறு ஏற்படும் பதட்டமானது உங்களது முன்னேற்றப் பாதையில் தடைக்கல்லாக அமைந்துவிடக்கூடும். எனவே பதட்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை மற்றும் அதிகரித்த வேலைகளைத் தவிர்த்து அவ்வாறான வேளைகளில் சிறிது ஓய்வெடுத்து அமைதிகாண்பது அவசியமானது.

வாழ்வின் முன்னேற்றம் என்பதை எல்லோருமே விரும்புகின்றனர். இம் முன்னேற்றத்தை அடைய மனநம்பிக்கையும் உழைப்பும் அவசியம். முயற்சியும் தன்நம்பிக்கையும் இல்லாவிடில் வாழ்வின் முன்னேற்றம் என்பது பகற்கனவாகிவிடும். எனவே எவரும் உழைப்பின்றி முன்னேறமுடியாது தான். ஆனால், வேலைப்பழுவால் மனமுடைந்துபோகும் இயல்பை மாற்றிக்கொள்ளவேண்டும்.

பெரும்பாலும் எமது மனக்குறைகளே பதட்டத்திற்கு வித்திடுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் எப்போதாவது உங்களிடமிருக்கும் குறைபாடுகள் என்னவென்று யோசித்துப்பார்த்ததுண்டா? ஆறுதலாக இருக்கும் வேளைகளில் உங்கள் குறைகளை இனம் காணுங்கள். பின்னர் அக்குறைகளை எவ்வாறு திருத்தலாம் என்று ஆலோசியுங்கள். இனம்காணப்பட்ட குறைகளைத் திருத்துவதன்மூலம் உங்களைப் பற்றிய நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் மீதுள்ள குறைகளையும், செயலூக்கமின்மையையும் சலிப்பையும் உணர்வதுடன், அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால்தான் குறைகளை நிவர்த்திசெய்ய முடியும்.

கடந்துபோன காலங்களை எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதை விட்டு, அதை ஒரு பாடமாகக்கொள்ளுங்கள். உங்களை ஒரு பூரணமான மனிதன் என எண்ணி நிகழ்காலத்தில் செயற்படுங்கள். அத்தோடு எதிர்காலத்தைப் பற்றியும் சிந்தியுங்கள். கூடுமானவரை எந்த விடயத்தையும் பிறகுசெய்யலாம் என்று பின் போடாதீர்கள். உடலிலும் மனதிலும் வலுவை ஏற்படுத்தி உழையுங்கள். சலிப்பு, பதட்டம் என்னபவை ஏற்படும்போது சிறிது ஓய்வு பெறலாம். எனினும் எடுத்த காரியத்தை அத்துடன் ஆறப்போட்டுவிடக் கூடாது. நாளை என்பது இன்னொரு நாள் அதற்கான பணிகள் காத்திருக்கின்றன.

பதட்டம் வரும்போது சீற்றத்தை தவிர்த்து சிந்தனைப் போக்கை மாற்றி இயல்பாக மாறுங்கள். உங்களுக்கு எவ்வளவு தான் வேலைப்பழு இருந்தாலும் முகத்தில் கடுமையைத் தவழவிடாதீர்கள். மற்றவர்களிடம் பேசும்போது இன்முகத்துடன் சிரித்துக் கதையுங்கள். வேலைப்பழு என்று மனமுடைந்து போய்ப்பதட்டத்துடன் செயற்பட்டால் எடுத்த காரியத்திலும் பின்னடைவே ஏற்படும்.

நிதானத்தைக் கடைப்பிடித்து நீங்களும் வாழ்வில் முன்னேறலாம். வள்ளுவன் வாக்கிற்கு அமைய "அழுக்காறு அவா, வெகுளி இன்னாச்சொல் நான்கையும் இழுக்காய்" எண்ணி இன்முகத்துடனும் நல்மனத்துடனும் முயன்றால் உங்கள் முன்னேற்றம் உங்கள் வசமாகிவிடும்.

**ச.முருகானந்தன்**

## தக்காளி மசாலா




**தேவையான. பொருட்கள்**

| | |
|---|---|
| தக்காளி | - 1/4கிலோ |
| தேங்காய் | - 1மூடி துருவியது |
| பெரிய வெங்காயம் | - 200 |
| பூண்டு | - சிறிதளவு |
| இஞ்சி | - சிறுதுண்டு |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| கருவாப் பட்டை | - சிறு துண்டு |
| ஏலக்காய் | - 1 |
| கராம்பு | - 1 |
| செத்தல் மிளகாய் | - 3 |
| சோம்பு | - 1கரண்டி |
| மஞ்சள் தூள் | - 1/2 கரண்டி |
| மல்லித் தூள் | - 1கரண்டி |
| எண்ணெய் | - ஒரு கரண்டி அளவு |

துருவிய தேங்காய், மிளகாய், மல்லித்தூள், சோம்பு (1 கரண்டியில் பாதி) மஞ்சள்தூள் இவற்றை லேசாக அரைத்துக்கொள்ளவும், இஞ்சி பூண்டை விழுதாக தனியாக அரைத்து வைத்துக்கொள்ளவும், வெங்காயம் தக்காளி இவற்றைப் பொடியாக அரிந்து வைத்துக்கொள்ளவும், எண்ணெய் சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு கறுவாப்பட்டை, ஏலக்காய், பொடி செய்த சோம்பு, கராம்பு எல்லாம் போட்டு வெடித்தவுடன் இஞ்சி பூண்டு விழுது மற்றும் அரிந்த வெங்காயத்தில் பாதி, தக்காளியில் பாதி போட்டு வதக்கிக்கொள்ளவும், பின்னர் தனியாக ஒரு பாத்திரத்தில் மீதி தக்காளி, வெங்காயம், அரைத்த மசாலா இவற்றைப்போட்டு கையால் பிசைந்துவிட்டு தாளித்ததில் கொட்டி, கொஞ்சம் தண்ணீர் விட்டு, நன்றாக கொதித்து சுண்டியவுடன் கொஞ்சம் தளதளப்பாக இறக்கவும். இட்லி, தோசை, பூரி, ரொட்டிக்கு தொட்டுக் கொள்ளலாம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளீநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

### குமரகுரு பரிசுத்திட்டம்–33

பெயர்:..................................................

முகவரி:..................................................

..................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




அமெரிக்காவிலிருந்து வருகிற கோதுமையின் விலையை விட எங்களூர் அரிசியின்விலை அதிகம். இப்போது ஒரு கிலோ கோதுமை மாவின் விலை ரூபா இருபத்தி மூன்று. ஒரு கிலோ அரிசி மாவின் விலை ஐம்பத்தைந்து. ஒரு கிலோ அரிசியின் விலை முப்பத்தியெட்டு தொடக்கம் நாற்பது ரூபா வரையில்.

ஏன் இந்த வேறுபாடு?

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகிற கோதுமை எப்படி இவ்வளவு குறைந்த விலையில் இங்கே விற்கக்கூடியதாக இருக்கிறது?

எங்களூரில் விளைவிக்கப்படுகிற அரிசியின் விலை ஏன் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு உயர்கிறது?

இதற்குள் கோதுமை மாவின் விலை கூடிவிட்டது என்ற கூக்குரல்கள்வேறு. மாவின் விலை கூடினால் கண்டனக் குரலெழுப்புகிற நாங்கள் அரிசிவிலை கூடும்போது மௌனமாகி விடுகிறோம்.

இப்படியெல்லாம் எழுதும்போது பலருக்கு குழப்பங்கள் நேரலாம். சிலருக்குக் கோபங்கள் கூட எழலாம்.

கோதுமையை உயர்த்தி அரிசியை மதிப்பிறக்கும் எழுத்தா இது எனச் சிலர் சந்தேகிக்கவும் கூடும். எல்லாக் கற்பிதங்களுக்குமப்பால் சில விடயங்களை எந்தத் தயக்கமும் இல்லாமல், எந்தச் சங்கடமுமில்லாமல் பார்க்க வேண்டும். உண்மை நிலைகளைப் புரிந்துகொள்ளவேணும்.

வளர்ச்சியை நோக்கி விதியில் இது அவசியமானது. தவிர்க்க முடியாததும்கூட.

முதலில், கோதுமை மாவின் விலை உயரும்போது நாம் கண்டிக்கிறோம். விலையேற்றத்தை வரவேற்க முடியாது; ஆதரிக்கவும் முடியாது. அது அரசாங்கத்தின் பொருளாதாரத்திட்டமிடலுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. தேவையற்ற செலவீனங்களை ஈடுகட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்துவது ஒருவகை உத்தி. அதனால் அதனை அனுமதிக்கமுடியாது.

அதேவேளையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை எங்கள் பணத்தில் ரூபா இருபத்தி மூன்று இது சில்லறைவிலை.

அப்படியென்றால் அமெரிக்காவில் அது உற்பத்தி செய்யப்படுகிற நாட்டில், அதன் உற்பத்தியாளனுக்குக் கிடைக்கும் பெறுமதியென்ன? அங்கே விளைவிக்கப்படுகிற கோதுமை ஏற்றுமதி செய்யப்படுகிறது. எப்போது ஏற்றுமதிச் செலவு, ஏற்றுமதித்தீர்வை, பிறகு இறக்குமதிச் செலவு, இறக்குமதித்தீர்வை, ஏற்றுமதியாளரின் இலாபம், இறக்குமதியாளரின், இலாபம், கோதுமையை அரைக்கும் செலவு, பொதிசெய்தற்கூலி, அதற்கான செலவு, உள்ளூர்க்கொள்வனவாளர் இலாபம், விநியோகச்செலவு, சில்லறை விற்பனையாளர் இலாபம் எனச் சகலதுக்கும் பின்புதான் அதன்விலை இருபத்தி மூன்று.

நாங்கள் கோதுமைமாவின் விலையைக் குறைக்கும்படி கூறும்போது உற்பத்தியாளனின் மடியை அது பாதிக்குமா? இல்லையா என்று யோசித்திருக்கிறோமா?

அப்படி நேரடியாக யோசிக்கவும் முடியாது. பொருளாதார மொழியின் விளக்கத்தின்படி இது அரசியல் சார்ந்தது. உற்பத்தியாளனுக்கும் நுகர்வோனுக்குமிடையில் இருப்பது அரசியலும் அரசுகளும் அவற்றின் நலன்களும்.

ஆனாலும், அங்கே உற்பத்தியாளனுக்கு இலாபம் இல்லாமல் தொடர்ந்து ஒருகாரியத்தில் ஈடுபட முடியாது. எங்களுடைய பணத்தின் பெறுமதியிலேயே இவ்வளவு குறைவாக ஒரு கிலோமாவின் பெறுமதியிருக்கு தென்றால் அவர்களுடைய பணத்தில் ஒரு கிலோ கோதுமை மாவின் மதிப்பு மிக மிகக் குறைவே. பத்தில் ஒரு பங்குக்குக் கிட்டவாக வரலாம். அவர்கள் உற்பத்தியை பிரமாண்டமான அளவில் விஸ்தாரப்படுத்திச் செய்கிறார்கள். அதை அறிவியல் பூர்வமாக நவீனப்படுத்திச் செய்கிறார்கள். உழைப்புச் செலவு, மூலதனச்செலவு எல்லாவற்றையும் குறைத்து விளைச்சலை அதிகரிக்கிறார்கள். இதற்கு அவர்களுடைய ஆராய்ச்சி மையங்களும் ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சிகளும் உதவுகின்றன.

உற்பத்திசார்ந்த ஆராய்ச்சி, விநியோகம் சார்ந்த ஆராய்ச்சி, வளம் சார்ந்த ஆராய்ச்சி என ஒரு வகையாக கூட்டிணைவு ஒத்திசைவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் செய்யும்போது அவர்களுடைய உற்பத்தி இலகுவாகவும் விரைவாகவும் இலாபமானதாகவும் ஆகிவிடுகிறது.

அதனால் குறைந்த விலையில் தமது பண்டங்களை விற்கமுடிகிறது.

இங்கே அரிசியின் விலை குறையும்போது அது நேரடியாக விவசாயிகளைப் பாதிக்கிறது. அரிசியின் விலை உயரும் போது கூடுதலாக பாதிக்கப்படுவது பாவனையாளர்கள். நெல் உற்பத்தியாளர்களின் தொகையைவிட 67 வீதமானவர்கள் நுகர்ச்சியாளர்கள்.

அரிசி விலையேறும்போது கூடுதலான தொகையினராகிய நுகர்ச்சியாளர்களே அதிகமும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆக பெருந்தொகையானவர்கள் அரிசிவிலையுயர்வால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகிறார்கள். அரிசிவிலையைக் குறைக்கவேண்டுமனால் நெல்லின் விலை குறையவேண்டும். நெல்லின் விலையைக் குறைக்கும்போது விவசாயிகளை அது பாதிக்கும். தங்களுக்கு நட்டம் ஏற்படுகிறது என்றவர்கள் குரலெழுப்பத் தொடங்கி விடுகிறார்கள்.

இந்த நிலையில் எதுவும் செய்ய முடியாது. ஒருவாறு நிலைமையைப் பல்லைக்கடித்துக்கொண்டு சமாளிக் வேண்டியதுதான். அதுதான் தொடர்ந்து நடக்கிறது. விலையை குறைத்தாலும் கூட்டினாலும் உடனே இருதரப்பும் பாதிப்புக்குள்ளாகும் என்ற இறுக்கநிலை. இதனைச் ர் செய்ய முடியாதா என்றால் முடியுமென்கிறார்கள் இதுபற்றிச் சிந்திக்கும் தரப்பினர்.

நெல் உற்பத்தியை நவீனப்படுத்தினால் அறிவியல் பூர்வமாக உற்பத்தி முறையை மாற்றிக்கொண்டால்- விளைச்சல் கூடுதலாகும். அது விவசாயிகளைப் பாதிக்காத முறையில் விலைக்குறைப்பைச் செய்வதற்கு உதவும். நுகர்ச்சியாளருக்குச் சிரமம் ஏற்படாது.

எங்களுடைய உணவு முறையில் அரிசி முக்கியமானது. ஒரு காலத்தில் மூன்றுவேளையும் அரிசியைப் பயன்படுத்திய நாம் இப்போது ஒருவேளைக்கு மட்டும் அரிசி என்ற நிலைக்கு வந்துவிட்டோம். மிகுதி இரண்டு வேளையுணவுகளும் கோதுமையைப் பிரதானமாகக் கொண்டவை. எங்களுடைய உற்பத்தியை பாவிப்பதைவிட வெளியேயிருந்து இறக்கு மதிசெய்யப்படும் பொருளை நோக்கித் தாவிவிட்டோம்.

கோதுமை மாவின் விலை குறைந்திருப்பதே இதில் முக்கிய காரணமாகும். அரிசியின் விலை குறைந்தேயாகவேணும். ஆனால், அது விவசாயிகளை எந்தவகையிலும் பாதிக்கக்கூடாது என்பது பிரதானமானது.

அப்படியென்றால் உற்பத்தி முறையைக் கட்டாயம் மாற்றியாகவே வேண்டும். அது சிரமத்தைக் குறைத்து விளைச்சலைப் பெருக்கும் வழிமுறையாகும்.

இங்கே வந்து இங்குள்ள விவசாய முறைகளை அவதானித்த உதவியளிக்கும் நிறுவனமொன்றைச் சேர்ந்த யப்பானியர் ஒருவர் கூறினாராம். இவ்வளவு நீரைப்பிரயோகித்து இப்படிச்செய்யும் நெல்லுற்பத்தியை விடவும் நன்னீர் மீனுற்பத்தியில் ஈடுபட்டால் அதிகம் இலாபமேற்படும் என்று நாங்கள் செலவழிக்கிற நீரின் அளவுக்கும் எங்களுடைய உடலுழைப்புக்கும் நேரச் செலவுக்கும் ஏற்றமாதிரி விளைச்சலைப்பெறுவதில்லை என்பதே அவருடைய கணிப்பும்.

இதனால்தான் தவிர்க்க முடியாமல் நெல்லின் விலையைக் குறைக்க முடியாமலிருக்கிறது.

புதிய முறையில் விவசாயத்தை மாற்ற முயற்சியெடுக்கும் வரையிலும் விவசாயிகளுக்கு பாதிப்பில்லாமலும் நுகர்வோருக்குத் தாக்கம் ஏற்படாமலும் உள்ள ஒரு நிலைமை உருவாக வேண்டும்.

விவசாயிகளுக்கு உதவி ... நம் மானியமும் உள்ளீட்டுப் பொருட்களுக்கான தீர்வை விலக்கும் செய்யப்படவேணும். உணவுற்பத்திக்கு உலகம் முழுவதிலும் கூடுதல் உதவிகளும் சலுகைகளும் மானியங்களும் இழப்பீடுகளும் வழங்கப்படுகின்றன.

மனிதனின் உடல் ஆரோக்கியத்துக்கும் சிந்தனை உறுதிப்பாட்டுக்கும் மனவிருத்திக்கும் உணவு ஆதாரமானது. இவை குறித்த சிந்தனை எமக்கு இன்று அவசியமானவை.

எமது உற்பத்திகள் எல்லாமே கூடுதலான விலைக்குப்போவதற்கான காரணம் நாம் அவற்றை மாறிவரும் உலகுக்கு ஏற்றமாதிரியும் விஞ்ஞானபூர்வமான வளர்ச்சி நோக்கியும் அவற்றை முன்னகர்த்துவதில்லை.

அதனால், எமது உற்பத்திகள் பின்தங்கிவிடுகின்றன. விலை கூடுதல் என்பதால் மக்களின் பாவனையிலிருந்து விடுபட்டுவிடுகின்றன.


எங்களுடைய பனை உற்பத்தி, கடல் உணவுவகைகள், கைவினைப் பொருட்கள் எனச் சகலதுமே இன்று கூடுதல் விலையில்தான் உள்ளன. பதிலாக அதேமாதிரிப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இங்கே இறக்குமதி செய்யப்பட்டு வரும்போதும் அவை மலிவாகக்கிடைக்கின்றன.

மலிவு என்று வரும்போது தவிர்க்கமுடியாமல் பெரும்பான்மையானவர்கள் அதைநோக்கி நகர்வதுஇயல்பு. அது தவிர்க்க முடியாத தும்கூட.

இப்போது எங்களுக்கு முன்னெப்போதையும்விடக் கூடுதல் சவால் ஏற்பட்டுள்ளது.

இதை வெற்றிகொள்வது தவிர்க்கமுடியாத அவசியம். இதற்கே எமது கல்வியும் புதிய அணுகுமுறைகளும் செயற்றிட்டங்களும் தேவை.

**கருணாகரன்**



# எதிரியும் இயற்கையும் பறித்தெடுத்த எங்கள் உறவுகளின்

## எமது தலைநிமிர்வுக்கான தன்னிறைவுக்காக கூட்டுறவுப்பொருளாதாரம் !

கிளிநொச்சி-முல்லைத்தீவு வீதியில். வள்ளிபுனத்திற்குட்பட்ட பகுதியில் ஒரு சிறிய கடை. 5,6 வயது மதிக்கத்தக்க சிறுவன் முழுப் போத்தல் ஒன்றுடன் வந்து, 'ஐயா ! கால்போத்தல் மண்ணெண்ணெய் தாங்கோ !'. அந்தப்போத்தலை அளவுகோலாகக் கொண்டால் அவன் அதன் மூன்று மடங்கு உயரமே இருந்திருப்பான். அவன் கைகள் இறுகப்பொத்திப்பிடித்திருந்த சில்லறைகள் அவன் கேட்ட அளவிற்கு எள்ளளவேனும் அதிகமாக இருக்கவில்லை என்பது, அவற்றை அவன் கடைக்காரரிடம் கொடுத்தபோது தெரிந்தது. இதை அவதானித்த கடைக்கு முன்னால் காத்திருந்த நடுத்தர வயது மதிக்கத்தக்க தாய் ஒருவர், கடைக்காரருடன் கதைத்துக் கொண்டிருந்த கணவனை ஜாடையாகப் பார்த்தார். அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட கணவன்'அண்ணை! கன்டோஸ் ஒண்டும் குடுத்திட்டு, என்ரை கணக்கில போடுங்கோ !' என்று மெதுவாகச் சொன்னார். அப்படியே கடைக்காரர் கையில் கொடுத்ததைத் தொட்டுக்கொள்ளவே தயங்கியவனாய் 'மண்ணெண்ணெய் மட்டும் தான் அம்மா வாங்கிக்கொண்டு வரச்சொன்னவா' சொன்னான். 'தம்பி! இண்டைக்கு மண்ணெண்ணெய் வாங்கிற ஆக்களுக்கு கன்டோஸ் ஒண்டு இலவசம். வாங்குங்கோ !', கூட இருந்தவர் சொன்னார். அறியாதவர்களிடம் எதையும் பெற்றுக்கொள்ளும் பழக்கம் சிறியோர்களிடம் வழக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்ததினால், இப்படியொன்றை அவர் அவிழ்த்துவிட்டது அத்தருணத்திற்கு மிகவும் உசிதமானதாகவே பட்டது. எதிர்பாராமல் கிடைத்த அந்த அசாதாரணப்பரிசை கையில் வாங்கிய அவனது கண்களில், சொக்லேற்களுக்கு பெயர்போன சுவிஸ் நாட்டு 'மில்க்கா' நிறுவனத்தையே சொந்தம் கொண்டுவிட்ட சந்தோசம் துள்ளியது. புவியீர்ப்பை மறந்த கால்களோடு வீட்டை நோக்கி ஓடினான்...

கெட்டியாகப்பிடிக்கப்பட்டதால் கைகளுக்குள் மூச்சுத்திணறிய 75 கிராம் கன்டோஸ் வீட்டிற்குச் சென்றதும் இரண்டாக, மூன்றாக பங்கு பிரியக்கூடும். அந்தப் பெண்மணியும், கணவனும் அவனது சந்தோசம் நிறைந்த முகத்தினால், பூரிப்படைந்து காணப்பட்டனர்.

முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டனோடு மோனிக்கா லெவின்ஷ்கி சம்பந்தப்பட்ட விவகாரம் வெளியுலகத்திற்குத் அம்பலப்பட்டுப் போயிருந்த காலகட்டத்தில், பன்னாட்டு ஊடகங்களெல்லாம் அல்வாத்தீனி கிடைத்த சந்தோசத்தில் அதைஅலசிக்கொண்டிருந்த வேளை. ஒஸ்திரிய நாட்டுத் தொழிலதிபர் ஒருவர் பற்றிய செய்தியும் அதனிடையே வெளிவந்தது. மோனிக்கா லெவின்ஷ்கியின் சாயலை உடைய யாரோ ஒரு பெண்ணிடம் இன்பம் நுகர, அவர் ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை செலவழிக்க முன்வந்திருந்தார் என்பதுதான் அது. மனிதனின் பல முகங்களிலும் காலாகாலமாக அவனை வரையறைக்குள் தலைமுறைகளை உருவாக்கவும், வரைகளுக்கு அப்பாலே களங்கப்படுத்தவும் காரணமாயிருந்து வருவதுதான் இந்தக் காமுகம். இருந்தாலும் குறித்த தொழிலதிபரின் விடயத்தில் அதைத் தாண்டியதாய், வெறுமனே புறநுகர்ச்சி மட்டும் சார்ந்ததாக அவரின் விருப்பு அமைந்திருக்கவில்லை. அதற்குமப்பால் பிரபல்யத்துவங்களினால் சபலப்பட்ட மனத்தின் வக்கிர இச்சையாகவே அதை நாம் அடையாளம் காணமுடியும்.

ஆக மேற்கண்ட இரு உதாரணங்களிலும் முற்றிலும் ஒன்றுக்கொன்று எதிர்மாறான மனோநிலைகளை எம்மால் காணமுடிகிறது. ஆக வெறும் ஐந்து ரூபாயினால் ஒரு சிறுவனை சந்தோசப்படுத்தி பேரின்பம் காணும் ஒரு தம்பதியினர் ஒரு பக்கம். மறுபக்கத்தில் ஒரு கோடி இலங்கை ரூபாவுக்கு சிற்றின்பம் தேடும் தொழிலதிபர். இந்த இருநிலைகளுக்கும் இடையில் பலமாதிரிகள் இருக்கலாம்.

மோசமான எடுத்துக்காட்டில் முன்வைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் எத்தனை முகங்களைச் சந்தோசிக்கச் செய்து பார்க்கலாம் ! கூடவே தனிய சொக்லேற் மட்டுமே சந்தோசத்துக்கான மூலாதாரம் என்றல்ல ! ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு ஆளுமை உள்ளடங்கிக் கிடக்கின்றது. அதை அவன் உருப்படியான வகையில் வெளிப்படுத்திப்பயன் விதைக்கவேண்டும். அதிலும் சுனாமி கடற்கோளிற்குப் பிற்பட்ட இச் சூழலில் எங்களுடைய தேடல்கள் தேவைகளைக் கருத்தில் கொண்டனவையாக இருப்பது அவசியமாக இருக்கிறது.

கண்ணீரும், புன்னகையும் வெறுமனே இரு வெளிப்பாடுகளல்ல இரு வெவ்வேறு வகையான கனதிகளைக் கொண்டவை. தமிழரின் வரலாறு காணாத 1995ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் அடுத்தடுத்த காலப் பகுதியில் வெளிவந்த ஒளிவீச்சில் முழங்காவில் மகாவித்தியாலயம் பற்றிப்பேசப்பட்டிருந்தது. அதிலொரு சிறிய மாணவி தந்தையைக் குண்டு வீச்சில் இழந்த பிற்பாடு, தன் தாய் கூலிவேலை செய்தும், கச்சான் விற்றும் தங்களைக் காப்பாற்றக் கஷ்ரப்படுவதைத் தனது மொழியில் சொல்லியிருந்தாள். தங்களைக் காப்பாற்றுவதற்காய் தாய் படும் பாட்டைக் கூற முயலும் அவளின் விழிகள் பொலபொலவென வடிந்தோடின. விம்மிவிம்மி அழுதாள். தாயின் கஷ்டத்தைப் பார்க்க அந்தப்பிஞ்சு விழிகளுக்குப்பொறுக்கவில்லை. அவள் இப்போது குருகுலத்தில் தங்கியிருந்து படித்து வருகிறாள். எல்லாமே எல்லாவற்றையும் ஒரேயடியாக மாற்றிவிடுவதில்லைத்தான். இருந்தாலும் இயல்பான வாழ்க்கையினையே விதியென அழைக்க முடியுமென்றால், எங்கேயோ அறிமுகமில்லாமலிருந்தவர்களின் விதியையே மாற்றியமைக்கும் சக்தி அந்த விழிநீருக்கு இருந்திருக்கிறது. அதனாலேயே இந்தக் கட்டுரை, இன்று, இங்கே, ஈழநாதத்தில் எழுதப்படும் நிலை உருவாகியிருக்கிறது.

மற்றவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துச் சந்தோசம் காணுவதற்கு நாம் ஒன்றும் பாரிகளாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தேர் கொடுத்த பாரி கூட இன்னுமொரு கொடியைக் கண்டிருந்தால் அப்போது என்ன செய்திருப்பான் ? ....இயலாமையைக் காட்டி வருத்தத்துடன் கையை விரித்திருப்பானா? ஆக பொதுவான சமூகப்பார்வைகளும், கருத்துருவாக்கங்களும் நடைமுறைகளைத் தமக்குள் உள்வாங்கி, பரவலான விடுதலைக்கான நகர்வினை மேற்கொள்ளும் வகையில் புதிதாக மரபுறவேண்டும். காரணங்களுக்கான காரியங்களையும், விளைவுகளுக்கான விதைகளையும் புலன்களுக்கு புலன்களுக்கு உட்பட்ட அறிவியல் தளத்தில் நின்றே நோக்க வேண்டும்.

...கனவுகளை நோக்கிய
கற்கைகளில் ஈடுபடுவோம்
வரலாறு காணாத அழிவு நம்
வாழ்வழித்த அனர்த்தத்தின்
ஆழங்கள் அறிவோம்
மாண்ட எம்
ஒவ்வொரு உறவையும்
மனந்திருத்தி இதற்காய்
உறுதி பூணுவோம்;
எங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட
கண்ணீர்களுக்குப் பலியாகிவிடாமல்
புன்னகைகளோடு ஒரு
புதுவாழ்வு செய்வோம் !

'இது அமானுஷ்யமானது நம் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டது', என்று யாராவது சொல்வார்களாக இருந்தால், அடுத்த சந்ததியையும் ஆழவே அடியில் போட்டுப் புதைக்கின்றார்கள் என்றே அர்த்தம். நமது ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டது என்று நாம் கருதுவது, நமது தற்போதைய



அறிவுநிலை சார்ந்து கருதப்படுவது மட்டுமே ! பிரபஞ்சத்தோற்றத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருந்து வரும் அணுவின் ஆற்றலை மானிட

**சு.ஞாலவன்**

சமுதாயம் உணர்ந்தது 1945ஆம் ஆண்டில் தானே! விலங்குகளைவிட மோசமான வாழ்முறைகளிலிருந்து பரிணாமப்பட்ட மனித குலத்திடம் தானே அன்பும், காதலும் அதிகமாக உணரப்படுகிறது. ஆக முடியாதென்று எண்ணி முனையாமல், முயற்சிக்காமல் நாம் இருந்துவிட்டால் முடிவிலே இழிந்தழிந்து போவதும், முடியுமென்று எண்ணி முயற்சித்தால் முடிசூடுவதுமே உலகியல் யதார்த்தமும், உண்மையும் கூட ! கடந்தவாரக்கட்டுரைகளில் உலகின் வெவ்வேறு மூலைகளில் சாத்தியமாக்கப்பட்ட அசாத்தியங்களைப் பற்றிப்பார்த்தோம் அல்லவா ! அந்த முயற்சிகளுக்கு மூலாதாரமாக விளங்கும் பொருளாதாரத்தைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்பாக இன்னொரு விடயம். அவைகளில் குறிப்பிடப்படும் அப்படியானதொரு மாற்றத்தினால் எட்டப்படும் பலன்களின் மீதான விருப்பு மட்டுமே எல்லாவற்றிற்கும் போதுமானதாகி விடாது, அந்த மாற்றத்துக்கான மனமாற்றமும் மிகவும் அவசியமே! வலிகளாலே வலிமை பெற்ற இனம் நம் ஈழத் தமிழினம். மீண்டும் அளவில் மிகமிக அதிக மூர்க்கத்தனமான வலியை டிசம்பர் 26 இல் நாம் முகம் கொடுத்திருந்தோம், இன்னும் ஆறவில்லை. இவ்வாறானதொரு வலியின் வேதனையிலிருந்து விடுபடாதபோதிலும் ஒட்டுமொத்தமான புதியதொரு பயணத்திற்கு நாம் அனைவரும் தயாராகி விட்டோமா?

*இழப்புக்களால்*
*இதயம் காணும் வலிகளே*
*ஓர்மமாகி உறுதி கொள்ளட்டும்*
*விரியும் எங்கள் விழிகள்,*
*வேதனையின் வேர்களறிந்தினி*
*வினை செய்யும் !*

எஞ்சிய சில நெல்மணிகளையும் தனக்கென எடுத்து வைக்காது குருவிகளுக்காய் சிந்தி மகிழும் மனம் படைத்த பாரதி கடவுளிடம் என்ன வேண்டுகிறார் ? . . . 'அசைவறு மதி'யைத் தானே ! (சோர்வற்ற அறிவு). ஆனாலும், சமுதாயத்தில் பொறுப்பு வாய்ந்தவர்களாக உலவி வரும் சிலர் துண்டறப் பொறுப்பற்ற விதத்தில் வியாக்கியானங்கள் கொடுத்து வருவது வேதனைக் குரியது. நொந்துபோனவர்களிற்கான உளவளத்துணைக்காய் பற்றாக் குறைகளுக்கு மத்தியிலும் அவரவர் ஆங்காங்கே ஆலாய்ப்பறந்து பணி செய்து கொண்டிருக்க, ஏதோ தாம் மட்டும் தான் ஜீவிப்பதாகக் கூறிக் கொள்ளும் சில புல்லுருவிகள் அவலங்களை வைத்து தங்களுக்கு ஆள்பிடித்த செய்தி அண்மையில் வெளிவந்திருந்தது. இன்னுமொரு இடத்தில் குரங்கொன்று சிறுவனைக் காப்பாற்றிய செய்தி, அவதார ஆதாரங்களுடன் (?) வெளியாகியிருந்தது. முற்காலத்தில் பதினெண் சித்தர்களாக அடையாளப் படுத்தப்பட்டவர்கள் மக்களை ஆழமாக நேசித்தார்கள். சமூகத்தின் உலகாயுத ஓட்டத்திலிருந்து அவர்கள் ஒதுங்கியிருந்தாலும், ஒதுக்கி வாழவில்லை ஐம்பூதங்களின் அடிப்படைகளை ஆராய்ந்தார்கள். ஆரம்பத்தில் பெரும்பாலும் சித்தாந்தம் சார்ந்ததாக இருந்துவந்த கல்வி இவர்கள் காலத்தில்தான் ஆய்வுகளுக்குட்பட்டு, வினை ஞானத்தின் பயனான விஞ்ஞானம் பிறந்தது. 'சுட்ட கல்லும் பேசுமோ' என வினாவெழுப்பி மருத்துவம், பௌதீகம், ரசாயனம் எனப் பல்துறையும் இவர்களால் அதிகமாக ஆராயப்பட்டன. பட்டினத்தாரின் பாடல்களிலே 'கருக்கொண்ட உயிரின் படிநிலை வளர்ச்சி' விபரிக்கப்படும் துல்லியம் எவ்வளவு ஆதாரபூர்வமானதும், நிபுணத்துவமானதும் கூட ! அதை விடுத்து வெறுமனே நவீனத்தின் சுகபோக நுகர்வாளராக இருந்து கொண்டு வியாக்கியானம் பேசுபவர்கள் 'சண் டீவீ' சித்தர்களைத் தான் பிரதிபலிக்கிறார்களோ! ஏனென்றால் அதில் வரும் தொடர்களில் தான், இதுபற்றி எந்தவித பிரக்ஞையுமற்ற 'நல்ல நடிகை' ராதிகாவின் பொருளீட்டல் உத்தியாக சில பித்தர்கள் வந்து போகின்றனர். மொழி, இன, மதபேதங்களுக்கப்பால் இறைவன் என்பவன் அன்பின் வெளிப்பாடானவன் என்பதே ஏற்றுக்கொள்ளத்தக்கது. அதை விடுத்து எங்கள் தலைகளில் விழும் இடிக்கு அந்த வானம் தான் காரணமென்றால், அந்த வானைத் தரை இறக்குவது தான் நம் பணியாகஇருக்கவேண்டும். தாயின் அரவணைப்பில் இறுகிய நிலையில் சிதைவுகளுக்கிடையில் சில நாட்களுக்கு முன்னும் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

'... ஐம்பூத வழிபாடுகள் எம்மை வாழ வைப்பன. கடல் அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்கள் இப்பொழுது தான் நம்புகிறார்கள் நாங்கள் கடலை வணங்காது விட்டு விட்டோம் என்று. பஞ்சபூத வணக்கத்தை நாங்கள் புறந்தள்ளி விட்டோம். இப்போது அல்

# புன்னகைகளின் மீது சத்தியம் செய்து...

லல் படுகின்றோம்.' இது இன்னுமொருவரின் திருவாக்கு. 'வழிபடுதல்' என்னும் சொல்லுக்கு 'வளங்களைப் பாதுகாத்தல்' என்று அர்த்தம் கொண்டோமேயானால், அவர் செப்பியதை பெறுமதி வாய்த்ததாக அனைவரும் உள்வாங்கிக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் அவரது வெளிப்பாடுகளில் அப்பொருள் குறித்ததாக ஏதும் வெளிப்பட்டு நிற்கவில்லை. சின்னப்பிள்ளைகளைத் தொகையாகக் காவு கொள்ளுவதற்கு அபத்தமான காரணங்களைக் கூறும் இப்படியானவர்கள், தாம் மட்டும் 80, 90 என நீண்ட வாழ்வினைக் கொண்டிருப்பதற்கு 'அமைச்சரவை'யின் ஆதரவு தான் காரணமென ஏதும் திருவாய் அருளுவார்களா ? இரண்டாம் வகுப்புப் புத்தகத்தில் தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தருளிய இறைவனைப் பற்றிய பாடம் படங்களுடன் உண்டு, படித்ததில்லையா ? அண்மையில் சம்பவித்தது உண்மையிலேயே 'முழுக்க முழுக்க இயற்கையான' அனர்த்தமா என்பதே கேள்விக்குள்ளாகி விட்ட வேளையில், இவர்கள் எந்த யுகத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் ? ? மரணவீட்டில் போய் நின்று கொண்டு 'ஆகா . . அப்போதே சொன்னேன் இப்படி நடக்குமென்று. நீதான் நம்பவில்லை. இப்போதாவது என் ஆற்றலை உணர்கிறாயா !' எனச் சொல்லி நிற்கும் இவர்களின் மனிதாபிமானத்தை என்னவென்று சொல்ல ? போயும் போயும் ஒரு சின்னப்பொடியனால் விமர்சிக்கப்படும் அளவிற்கு ஏன்தான் மலிந்து போகிறார்களோ புரியவில்லை ! தயவு செய்து கண்ணீரின் கனதியை உணருங்கள! 'வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினால் பொறுப்பவனேயராப் பூண்பவனே ! ...' ஒருவாசகத்துக்கும் உருகாதவர்களுக்கான திருவாசகத்தில் மணிவாசகர் மனதெழுந்த அடியொன்று. இங்கு 'ஒருவாசகத்துக்கும்' என்று நான் குறிப்பிடுவது எங்கள் அன்புக் குரிய உறவுகளின் ஓலங்களையும், ஒப்பாரிகளையுமே! தயவுசெய்து வரண்ட உங்கள் இதயங்களில் கொஞ்சமாவது ஈரத்தைத் தருவிப்பதிலும் ஈடுபடுங்கள் !

எங்களிடம் இருப்பதை வைத்து என்ன ஆக்கலாம் என்பதைப் பார்க்க இறங்கி, சில எதிர்மாறானவைகளை அடையாளம் காண்பதிலே பக்கங்களைப் போக்கி விட்டோம், பரவாயில்லை ! இனம் காண்பதும் இனநலன்களுக்கு அவசியமானதே ! தீர்க்கமான வழியில் ஆய்ந்தறிந்து எல்லாவற்றிற்கும் விடை காண முடியும் என்பதில் ஆழமாக நம்பிக்கை கொள்வதற்குத் தயாராகிவிட்ட நாம், நம்முடைய பொருளாதார நிலையை ஏலவே பார்த்த வழிகளில் உயர்த்திக்கொள்வதற்கு, தேவையான பணத்தேவைகளை ஈடுசெய்வதற்கான பலம் நம்மிடம் உள்ளதா என்பது குறித்துப் பார்ப்போம். இதற்காக முதலில் பணத்தின் பிறப்பையும், அதன் வளர்ச்சியைப் பற்றியும் சுருக்கமாகப் பார்த்தால் போதுமானதாக இருக்கும்.

பண்டமாற்றின் அடுத்த கட்டத்தில் பொருள் மற்றும் சேவைகளின் கொடுக்கல்-வாங்கல்களுக்கான பெறுமதியை நிலைப் படுத்துவதில் 'நா-நயம்' சிக்கல்களை எதிர் கொண்ட போது, அந்த இடத்தை நாணயம் எளிதாகவே ஈடுசெய்தது. ஆரம்பத்தில் சில மரங்களின் விதைகள், கூழாங்கற்கள், சிப்பிகள் எனத் தொடங்கிய இதன் வடிவம் காலநகர்வில் முத்து, மாணிக்கம், வைரம் போன்ற பெறுமதியான கற்கள், தங்கம் என்று மாற்றம் பெற்று வருகையில், காய்ச்சி உருவாக்கப்பட்ட காசும் அறிமுகமானது. நாடுகள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அரசியல் எல்லைகள் அறியப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில் தான் அந்தந்த நாட்டு மன்னர்களின் சின்னங்களைத் தாங்கிய காசுகளும் புழக்கத்திற்கு வந்திருந்தன. இந்த நிலை 15ஆம் நூற்றாண்டிலிருந்து கூடுதலான அளவு சர்வதேசிய மயப்படும் கட்டத்தை அடைந்திருந்தது. பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பலருக்கும் உறுதியான நாணயங்கள் (சில்லறைக்காசு என்று அர்த்தமாகாது) அவசியமானவையாக இருந்தன. இதை அக்காலத்து உலகியல் நடப்புகளே நிர்ணயித்தன. அமெரிக்கக்கண்டத்தில் குடியேறியவர்களின் பொதுவான நாணயமாக பிரிட்டிஷ் பவுண்ட் இருந்த போதிலும், பெரியளவிலான வர்த்தகத்தின் போது ஸ்பானிய நாணயத்தையே அவர்கள் பயன்படுத்தினார்கள். ஏனென்றால் அக்கால கட்டத்தில் ஸ்பானியக் கப்பல்களே உலகளாவிய வாணிபத்தில் அதிகளவில் ஈடுபட்டிருந்தன. 20ஆம் நூற்றாண்டை டொலரும், 21ஆம் நூற்றாண்டை யூரோவும், டொலரும் ஆக்கிரமித்திருப்பதையும் இந்த வகையிலே உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறெழுந்த நாணயம் இன்று புலன்களால் தொட்டுணர முடியாத electronic cash என்ற இலத்திரனியல் நாணயமாக வடிவெடுத்து விட்டது. தனிப்பட்டவர்களைப்பொறுத்த வரையில் வங்கிகளில் வைப்பாகவும், வங்கிகள் மற்றும் நாணய நிறுவனங்களைப்பொறுத்த வரையில் முதலிட்டுப்பொருளீட்டுவதற்கான மூலமாகவும் வழங்கி வரும் பணம் தனது இதுவரையான வடிவினை விட்டு, புதியதொரு பிறப்பை எடுத்து விட்டதென்றே சொல்லவேண்டும். உசனநனவை உயசன என்பதை தமிழில் கடனட்டை என்று அழைப்பதே ஒரு குறைப்பிரசவம் என்றே கருத வேண்டும். அப்படியான மொழி பெயர்ப்பின் காரணமாக, விரும்பிய போதெல்லாம் கடனுக்குப் பொருட்களை வாங்கிவிட்டு, விரும்பாத போது

கட்டச்சொல்லி நிர்ப்பந்திக்கும் ஒன்றாக அதற்கு நாம் அர்த்தம் போதிக்கிறோம். அதை விடுத்து பாவனையாளர்களின் பணப்பரிமாற்றங்களை எளிதாக்குவதற்கான ஒரு நடைமுறையென்றே crdit card ஐ அர்த்தம் கொள்ளுதல் பொருத்தமானது. இதனாலேயே ஒவ்வொருவரின் பணப்பரி மாற்றத்தையும் வைப்பகத்தினூடாகவே மேற்கொள்ள நிர்ப்பந்திக்கும் நடைமுறை மேலைத்தேசங்களில் கைக்கொள்ளப்படுகின்றது. இந்த நடைமுறையை சற்றே பார்ப்போம் !



அங்கு ஒருவரின் மாதாந்த சம்பளம் அவரின் வைப்பகக்கணக்கில் குறித்த திகதியில் இடப்படுகின்றது. பெற்றுக் கொண்டவர் தனது வருமானத்தினை அப்படியே கையகப்படுத்திக் கொண்டு வீட்டில் வைத்து விட்டு, தூக்கமிழந்து தவிப்பாரா ? அப்படி இல்லை. தான் செலுத்த வேண்டிய தொகைகளை வங்கியூடாகவே உரியவர்களுக்கு அனுப்பிவிட்டு, கைச்செலவுக்குத் தேவைப்படக்கூடிய சிறியதொரு தொகையை மட்டும் எடுத்துக்கொண்டு வந்து நிம்மதியாகப் படுத்துறங்குவார். இதனால் எட்டப்படும் அனுகூலங்களாவன : உத்தியோகபூர்வமான பண நடைமுறைகள், திருட்டு அச்சம் இல்லாமை, தற்செயலான இழப்புகள் மட்டுப்படுத்தப்படல் என்பன சிலவாகும். இவற்றிற்கும் மேலாக இத்தகைய நடைமுறையினால் வைப்பகங்களில் இருப்பிலிடப்படும் பணம் பல்வேறு வகையிலும் முதலீடு செய்யப்படுகிறது. பலரினது வைப்பும் உள்வாங்கப்படுவதாலும், வைப்பகத்தில் இட்டுச் சேமிக்கும் வழக்கத்தினாலும் பெருந்தொகையான பணப்புழக்கத்தைக் கொண்டிருக்கும் இவ் வங்கிகள் தேசிய பொருளாதாரத்தில் மட்டுமன்றி, சர்வதேசிய அளவிலும் முதலீடுகளை மேற்கொண்டு தத்தம் ஆதிக்கங்களைப் பரவி வருகின்றன. இப்படியான பண நடைமுறையினைச் சூட்சுமமாக நெறிப்படுத்தி வருவதனால் தான் பன்னாட்டு நாணய நிதியமும் (IMF), உலகவங்கியும் கிட்டத்தட்ட மூன்றாமுலக நாடுகள் அனைத்துமே தம் நிழலுக்குள் ஒதுங்க நிர்ப்பந்திக்கும் ஆற்றலைப் பெற்று நிற்கின்றன. மேனாடுகளிலேயே பல ஆட்சி மாற்றங்கள் வங்கிகளால் தீர்மானிக்கப்படும் அளவிற்கு, பணத்தின் நிர்வாகம் வலிமை வாய்ந்திருக்கிறது. என்ன தான் இருந்தாலும் இப்பணத்திற்குரியவர்கள் பெரும்பாலும் தனி நபர்களே தமிழ் மக்களாகிய நாமும் சேமிப்பில் கூடுதல் அக்கறை உடையவர்களாக இருக்கிறோம். சில அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடைமுறைகளாக சீட்டுப் பிடித்தல், வட்டிக்கு எடுத்தல் என்பன இருந்து வந்தாலும், காலத்திற்கு ஏற்ற மாற்றத்தை அவை கொண்டிருக்கவில்லை. வெறுமனே தனிப்பட்ட நம்பிக்கைகளையே அடிப்படையாக வைத்து, சட்டப் பாதுகாப்புக்களை புறந்தள்ளிய வடிவத்தை இன்னும் கொண்டு விளங்குவதினால்தான், அண்மையில் கூட வாள்வெட்டிக் கொலை செய்யப்படும் அளவிற்கு, தனிமனித பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தது. மற்றையபடி நம்முடைய பொருளாதாரம் எல்லாம் வளவின் கோடிகளிலே ஆழப்புதைக்கப்பட்டு, அவ்வப்போது 'நல்ல நாள்களிலே' மட்டும் வெளியே தலை காட்டிவிட்டு, மீண்டும் பூமிக்குள் சென்றுவிடும் நகைகளாகவே இருக்கின்றது. வங்கிகளின் அறிமுகமில்லாத காலத்தில் தங்கமாக சேமிக்கப்பட்டிருந்த சொத்து ஏன் இன்னும் தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளவில்லை? சாற்றுப்படிகளையே இன்னும் அழகியலாகக்கருதி அணியும் வழக்கம், உண்மையில் அழகியலிற்கே முரணானது. நகைச் சுமைகளைத் தாங்கும் பெண்களையும், அவை தவிர்த்து 'சிம்பிள்' ஆகவும் இருக்கும் பெண்களையும் நிறுத்தி, கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டால் தெற்காசிய பொருளாதாரமே புதுமாற்றம் காணலாம். இருந்தும் இதன் சாத்தியமற்ற தன்மையே அம்மாற்றத்தை மறுதலித்து நிற்கின்றது.

இன்று ஒவ்வொரு நாட்டினதும் மத்திய வங்கியினால் அந்தந்த நாட்டின் பொருளாதார உறுதி, வர்த்தகம், உற்பத்தி ஆகிய காரணிகளைக் கருத்தில் கொண்டு நாணயம் அச்சிடப்படுகின்றது. இவ்வகையில் பெறுமதி நிர்ணயத்துக்காக தங்கத்தைப் பயன்படுத்தும் வழக்கம் கைத்தொழில் புரட்சியின் விளைவாக 1816இலே பிரிட்டனும், 1873இலே ஐக்கிய அமெரிக்காவும், அதைத் தொடர்ந்து 1900களிலே ஏனைய நாடுகள் பலதுமென 19ஆம்நூற்றாண்டிலே ஏற்பட்ட ஒன்று. இருந்த போதிலும் உலகளாவிய நெருக்கடிகளைத் தொடர்ந்து 1931-1934 காலப் பகுதியில் நாணயப் பெறுமதியை செயற்கையாக ஏற்றி-இறக்கி வர்த்தகத்தை முடுக்கி விடுவதற்கு, தங்க நாணயங்களைப் பின்பற்றி நிற்கும் நடைமுறைதடையாய் உள்ளதென உணரப்பட்டு, பல நாடுகளாலும் அவ்வழமை ஒழிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உலக நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடைமுறைகளை எளிதாக்குவதற்காக, தங்கத்திற்கு செயற்கையாக குறித்ததொரு பெறுமதியை அளிக்கும் வழக்கம் கொண்டுவரப்பட்டது. ஆக தங்கத்தின் பெறுமதி நிலையானது அல்ல ! இந்த இடத்தில் தங்கம் அல்லது பொன் என்பதை மதிப்பதற்குப் பயனபடும் அலகாக நம்மிடையே வழங்கி வரும் 'பவுண்' என்பது பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் போது புழக்கத்திலிருந்த தங்கத்தினாலான 'பவுண்-நாணயங்கள்' இனால் வந்தவையே ! இன்று அக்கினி, அருந்ததி சாட்சியோடு தாலியோடு மேன்மை தங்கிய பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தும் சாட்சியாக வந்துவிட்டாரா!

எப்படியோ பொருளாதார வளம் என்பது, தீர்க்கமான குறிக் கோள்களைத் தகுந்த முறையில் செயற்படுத்துவதற்கான உழைப்பிலேயே தங்கியுள்ளது. இருக்கும் வளங்களை ஏற்ற வகையில் கூட்டுணர்வோடு பயன்படுத்தினால் தனிநபர் உட்பட அனைவருமே நன்மை பெறலாம். அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்திலிருந்து ஒரு லட்சம் தொழிலாளர்களுடன் EXXON Mobil என்ற நிறுவனம் இயங்கி வருகிறது. Esso எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட இதன் 2002ஆம் ஆண்டின் சொத்துப்பெறுமதி 195 பில்லியன் $ (195 000 000 000 $). 2002ஆம் ஆண்டில் இது ஈட்டிய வருட லாபம் மட்டும் 11 பில்லியன் $ (11 000 000 000 $). யாரோ ஒரு கொடுத்து வைத்த கனவானின் தனிச்சொத்து என்று பெருமூச்சு விடுகிறீர்களா ? அது தான் இல்லை. 1.2 பில்லியன் (1 200 000 000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்த எக்சன் மொபைலின் முழுச் சொத்தும் 6 லட்சம் பேருக்குச் சொந்தமானது. முதலீடுகளுக்கு ஏற்பலாபம் பங்கிடப்படும் இந்த முறையினால் ஒரு லட்சம் பேர் தொழில் வாய்ப்பு வேறு பெற்றிருக்கிறார்கள். (நமது சீட்டுப்பிடித்தல் போல, ஆனாலும் நன்மை பயப்பது) அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 4 லட்சம் பேர் வரை நன்மை பெறு கிறார்கள். அவர்களின் மாதாந்த வருமானத்தின் மூலம் பூர்த்தி செய்யப் படும் அத்தியாவசியத்தேவைகளால் கடைகள், பாடசாலைகள், மருத்து வசாலைகள் என பலதும் இயங்கக் கூடியதாய், இன்னும் பலரின் வாழ்வாதாரம் நிலை நிறுத்தப்பட்டு, ஒரு தேசத்தின் கட்டுமானம் பலம் பெறுகின்றது.

இனிய உறவுகளே ! நம்மாலும் முடியும். இரவல்கைகளை நம்பி வாளா திருந்து நம் வாழ்வினைத் தொலைக்காமல், உங்கள் ஒவ்வொருவரினதும் நிலைக்கேற்ப உற்பத்தித்தித்துறையில் முதலிடுங்கள் ! ஆங்காங்கே அங்கங்களில் பளபளத்தது போதும் ! கூட்டுப்பொருளாதாரத்துக்கான வகைகளை ஆராய்ந்து உங்களினதும், இனிவரும் உங்கள் சந்ததியினரும் சுபீட்சமான பொருளாதார வசதியை உள்நாட்டிலேயே அனுபவிக்க வகைசெய்யத் தயாராகுவோம் ! எதிரியும், இயற்கையும் பறித்தெடுத்த எங்கள் உறவுகளின் புன்னகைகளின் மீது சத்தியம் செய்து, எஞ்சியவர்களின் ஏற்றத்திற்காய் எழுவோம் !

# தத்தெடுக்கப் போகின்றாயா...? அதற்கு... தாயுள்ளம் அல்லவா வேண்டும்



## ஏ9-ஏரம்பு

எல்லாருக்கும் வணக்கம்! வணக்கம்! எப்பிடி இருக்கிறீயள் எல்லாரும் ? நாட்டு நடப்புகளும் ஏதோ நடந்து கொண்டிருக்கு. எனக்கும் கையில ஒரு அலுவல். ஆனா என்ன மாதிரிச் செய்யிறதெண்டு மனசொத்து ஒரு முடிவெடுக்கேலாமக் கிடக்கிது. ஒண்டுமில்லைப்பாருங்கோ ! கிட்டடியில அப்பாவின்ர திவசம் வருகிது. உவ்வளவு காலமும் செய்து வந்த மாதிரி இந்த வருசமும் செய்ய மனம் ஏதோ ஒத்துவரேல்லை. நாங்களெல்லாரும் செத்த ஆட்களின்ர அஸ்தியைக் கடலிலை கொண்டுபோய்க் கலக்கிறதை காலங்காலமாய் வழக்கமா வைச்சிருக்கிறம். ஆனால், அப்பிடி கீரிமலைக்குப் போன ஆக்களையுமெல்லே அடிச்சுக்கொண்டு போட்டிது கடல். ஏதோ காலாகாலமா இருந்து வாற வழக்கம் . . தொடர்ந்து செய்தா என்ன குறைஞ்சே போகப்போறன் எண்டிட்டு சும்மா ஏதோ செய்வோமெண்டு இருக்கிறன். எங்கட அயல், உறவுகள் தான் என்ன சொல்லுதுகளோ தெரியேல்லை. உப்பிடித்தான் அண்டைக்கு யாழ்ப்பாணத்திலை தெரிஞ்ச பக்கத்தாலை ஒரு மனுசன் அதுவும் 26ஆம் திகதி அண்டைக்கெண்டு செத்துப்போச்சு. அது கால,அகால எல்லாத்தையும் தாண்டின இயற்கை மரணம். சாகேக்கிள்ளை 105 வயசு மனுசனுக்கு. ஆரோ ஒரு பேரப்பொடி சொன்னானாம், ‘அது அப்புவின்ர கடைசி மூச்சுத்தான் சுனாமியா வந்திருக்கிதெண்டு’. ஏதோ பெரிய விசுவாமித்திர முனிவர் . . அவற்றை மூச்சுக்கு இருப்புக் கொள்ளேல்லை. எட ! பெரிய விஞ்ஞான விளக்கம் சொல்லிறார் அவர். விசர்க்கதைக்கும் ஒரு அளவு, காலநேரம் வேணுமெல்லே. எல்லாம் முடிஞ்சாப்பிறகு சிலர் குடுக்கிற விசராட்ட விளக்கங்களை சில பெரிய பெரிய பத்திரிகையளும் போட்டு நிரப்பி, பக்கங்களை வீணடிக்கினம். என்னவோ எனக்கு பெரிசா மனம் சரியில்லாமல் கிடந்திச்சு. அப்பதான் வித்தியாசமா ஒரு ஐடியா வந்திச்சு. என்ர அப்பாவுக்கும் கட்டாயம் அந்த ஐடியா நல்லாப் பிடிக்கும். வீடு,வாசல்களை இழந்து போய் அங்கங்கே எங்கட ஆக்கள் தங்கியிருக்கினமெல்லோ. அவையளுக்கு ஒரு இரண்டு நல்ல படமா என்ர செலவில போட்டுக்காட்டுவம் எண்டது தான் ஐடியா. பொறுங்கோ ! பொறுங்கோ ! நீங்கள் நினைக்கிற மாதிரி தமிழ்ப்படமில்லை. ஏதாவது நல்ல இங்லிஷ் நகைச்சுவைப்படங்கள், எல்லாருக்கும் விளங்கக்கூடியது. அவையளுக்கும் கொஞ்சம் ஆறுதலா பம்பலா இருக்குமெல்லே ! எங்கட நாட்டு நகைச்சுவை நடிகர் ஒராளின்ர குடும்பத் திலையும் சிலரை முல்லைத்தீவிலை அலை கொண்டு போட்டிதெண்டு கேள்விப்பட்டனான். கிளிநொச்சியிலை அந்த ஆளின்ர நகைச்சுவைக்காட்சி படத்திலை போகேக்கிள்ளை காதும், மனமும் நிரம்பி வழியக் கேட்ட சிரிப் பொலியள்,..., இண்டைக்கு...சே! ஆ. . அதை விடுங்கோ ! அப்ப ஏதாவது சார்ளி சப்ளின்ர Modern times அல்லாட்டி The great Dictator, Home alone, Baby’s trip (குழந்தையின் சுற்றுலா) எண்டு நல்லதா ஏதாவது தெரிவு செய்வோம் எண்டிட்டு ஏ9 பக்கம் போனன்.

உங்களுக்குத் தெரியும் தானே, உந்த விசயத்தில எனக்கு சரியா விளக்கம் குறைவெண்டு. அப்பதான் ஏற்கெனவே போய்ப்பழக்கப்பட்ட (முந்தியொருக்கால் நான் செருப்பு, குட்டி படங்கள் விசாரிச்ச கடை தெரியுமெல்லே உங்களுக்கு) அந்தக் கடைக்காரத்தம்பியிட்டை விசாரிப்போம் எண்டு அங்க போனன். ‘ஆ . .அப்பு ! வாங்கோ, வாங்கோ ! என்ன ஒரு அதிசயமான வரவு. கனநாளுக்குப் பிறகு வந்திருக்கிறீயள், சந்தோசம்’. ‘தம்பி ! என்னை மறக்கேல்லைப் போல ?’. ‘என்ன அப்பு, அண்டைய எப்பிடி மறக்க முடியும் ! சொல்லுங்கோ, உங்களுக்கு இந்தக் கடையில இல்லாததே !’. அந்தத் தம்பியின்ர வரவேற்பில நானும் குளிர்ந்திட்டன். பக்கத்தில ஒரு இளவட்டத்தம்பி அவசரமா துடிச்சுக்கொண்டு நிண்டிச்சு. ‘தம்பி ! இவரை முதல்லை கவனியும் ! அவசரம் போல கிடக்கு, பாவம்’. ‘சரி அப்பு. கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கோ ! தம்பி உமக்கென்ன வேணும் ?’. ‘ஏய் . . !’. எனக்குப் ‘பக்’ எண்டிச்சிது. எட பாவம் கெதியா எடுத்துக்கொண்டு போகட்டும் எண்டு விட்டால், இப்பிடி வயசுக்கு மரியாதை இல்லாமல் கடைக்காரனைப் பார்த்து ஏய் எண்டிறான். ‘தம்பி ! பார்க்க சின்ன வயசு, நல்ல பொடியன் மாதிரிக் கிடக்கு. ஏன் உப்பிடி அவரை மரியாதை இல்லாமல் கதைக்கிறீயள் ? கொஞ்சம் வாய்ய அளந்து பேசும் !’, நான் பொரிஞ்சு தள்ளினன். அந்தப் பொடி மிரண்டு மிரண்டு பாத்திச்சிது. ‘ஐயோ அப்பு ! அது புதிசா வந்த படத்தின்ர பேர்’ ஏய் . .! ’ எனக்கு வெட்கமாய் போச்சிது. பேந்து அந்தத் தம்பியோட கதைச்சு கன விசயத்தை அறிஞ்சு கொண்டன். நான் விசாரிச்ச படங்கள் ஒண்டும் அங்கை இல்லை. ‘குழந்தையின் சுற்றுலா’ மட்டும் தெரிஞ்ச ஒரு இடத்தில இருக்கிது. சாதாரணமா வெளியிடிற புதுப்படம் மாதிரியெல்லே சொல்லினம். என்னவோ போங்கோ !

ஆ . . உந்த இந்தியாப்படங்களைப் பற்றி கதைக்கேக்கைதான் ஞாபகம் வருகிது. ஒரு எம்.ஜி.ஆர் இரட்டை வேடத்தில நடிச்ச படம். பேர் மறந்து போனன். இரண்டு எம்.ஜி.ஆர்மாரும் கைக்குழந்தையளா இருந்த நேரம் கொள்ளைக்காரன் நம்பியாரை எம்.ஜி. ஆரின்ர தகப்பன் கைதுசெய்து ஜெயிலுக்கு அனுப்பிறார். ஆனா நம்பியார் தப்பி வந்து அவரைக் கொலை செய்து போட்டு, அவரை இன்னும் வஞ்சம் தீர்க்கோணும் எண்டு கெட்ட புத்தியில, தன்ர கையில கிடைச்ச ஒரு எம்.ஜி.ஆரை தானே கொண்டு போய் பொல்லாத கொள்ளைக்காரனா வளர்க்கிறார். பாருங்கோ ஒரேயடியாச் செத்தால் தன்ர வஞ்சம் தீராதெண்டு, தனக்குப்பிடிக்காத ஆக்களின்ரை குழந்தையை தானே வளர்த்து, அதின்ர வாழ்க்கையை நாசமாக்கிற புத்தி எப்பிடியெல்லாம் போகுதெண்டு ! ஆனால் கிடையாதெண்டாலும் எனக்காக எடுப்பிச்சுத் தாறதாச் சொன்னார். எட நாலு பேர் சிரிச்சுச் சந்தோசமா இருக்கிறதுக்கு ஒரு படைப்பு உதவுதெண்டால் அதை எல்லாரும் எல்லாருக்கும் குடுக்க முன்வரோணும். நீங்கள் நினைப்பியள். என்னடா ஏரம்பர் ஆங்கில மோகம் பிடிச்சுப்போய் இங்லிஷ் படத்துக்காக அலையிறார் எண்டு. அப்பிடியில்லைப் பாருங்கோ, நான் சொன்னதுகள், நான் சொன்ன தேவைக்குத் தரமான ஆரோக்கியமான படங்கள், தெரிஞ்சிதோ ! ஆ . .! என்னால எல்லா இடத்துக்கும் ரீவீ, டெக் எல்லாத்தையும் தூக்கிக்கொண்டு திரியேலாது, வயசு போன என்ரை நாரி விடாது. உங்களுக்கும் இப்பிடிச் செய்யிறது பிடிச்சிருந்தால், அந்தந்த நலன்புரி நிலையங்களுக்குப் பொறுப்பான ஆக்களோட கதைச்சிட்டு, ஒரு பள்ளிக்கூடம் லீவான பின்னேரத்தில இப்பிடிச்செய்யலாமெல்லோ ! தலைவர் போனகிழமை என்னண்டு சொன்னவர் .... ‘குழந்தைகளை விரைவாக மகிழ்ச்சிகரமான எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய புறச்சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியுள்ளது. விளையாட்டு மைதானங்கள், மகிழ்ச்சிகரமான பாடசாலைச்சூழல் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் அவர்கள் அடைந்த அதிர்ச்சி அனுபவத்திலிருந்து அவர்களை விடுவிக்க முடியும்’. என்ர குஞ்சுகள் நான் சொன்ன கசற் கிடைக்கேல்லை எண்டிட்டு இந்தியப்படங்களைப் போட நினைச்சுப்போடாதேங்கோ ! சுனாமி நிலைவரம் அறிய எண்டிட்டு, குறளோவியம் தந்த கலைஞரின்ர ‘சண் டிவி’ ரமில் ரொலைக்காட்சியிலை செய்தி பார்த்தன் பாருங்கோ. ‘தாய்லாந்திலுள்ள நட்சத்திர ஹொட்டல் ஒன்றை சுனாமி தாக்கும் தத்ரூபமான காட்சிகள் இதோ சிறிய விளம்பர இடைவேளைக்குப் பின்னர் . .காணத்தவறாதீர்கள் !’ எண்டிச்சினம். என்னடா கறுமம் இது ? பொங்கலுக்கு அது படம். நம்பியார் பாவம், குடுத்த காசுக்கு சும்மா வந்து வில்லன் மாதிரி நடிச்சுவிட்டுப்போனவர். ஆனா நிஜவாழ்க்கையிலையும் உப்பிடிப்பட்ட ஈனப்புத்தியோட சில ஜென்மங்கள் இருக்கத்தான் செய்யிது ! ஆரெண்டு நான் சொல்லமாட்டன்.


*தத்தெடுக்கப் போகின்றாயா ? ?*
*அதற்குத்தாயுள்ளம் அல்லவா வேண்டும் !*
*பித்துப்பிடித்த பேயுனக்கு*
*எங்கள் பிஞ்சொன்றைத் தருவோமோ !*
*நாகர்கோவிலில் நீ எடுத்துக்கிழித்த*
*லட்சணம்*
*இன்னும் அகலவில்லை நெஞ்சை விட்டு*
*பற்றி எரிகிறதடி- பாவியுன் அறிக்கைகளைக்*
*கேட்க !குரல்வளையை நசித்துக்கொண்டு*
*யிற்றெக்ஸ் பூசப்போகின்றாயா*
*எங்களுக்கு ?*
*உயிரிழந்து போன எம் உறவுகளின்*
*உடல்களைக் காட்டி*
*உலகநாடுகளின் முன்*
*பிச்சையெடுத்துப் பிழைப்பவளே !*
*இப்போது உயிரோடும் உனக்கு*
*வேணுமோடி ?*
*உன் புத்தி வேறெப்படிப் போகும் !*
*பிஞ்சுடல்களை வைத்துப் பிழைப்பதிலே*
*உலகளாவிய ரீதியிலே*
*உனக்குத்தானே இரண்டாம் இடம் !*
*தெற்கின் கரைகளிலே*
*உல்லாசிகளிடம் சோரம் போகும்*
*எம் சிங்களச் சோதரங்களிடம்*
*உன் நல்லெண்ணத்தைக் காட்டு !*
*ஒட்டுமொத்தமாய் நம்மை*
*ஒழித்துக்கட்ட நினைப்பவளே*
*உன் நல்லுறவுக்கான சமிக்கையின்*
*நயவஞ்சகம் நாம் அறிந்ததுதான் !*
*நாம் கடந்து வந்த தடங்களெல்லாம்*
*பின்னிப்பிணைந்திருப்பவள் நீதானே !*
*தேவனின் மடியிலும், பள்ளிக்கூட நிழலிலும்*
*பலியெடுத்தெம்மைத் தொலைத்ததும்*
*ஜெயசுக்குறுவில் முடக்கி அட்டகாசித்ததும்*
*எரிகிறதடி எங்கள் வயிறு !*
*நொந்து போயிருக்கும் எம்மவர்*
*நெஞ்சத்தீ பருக்கொண்டொரு நாள்*
*பறந்து வரும்- அன்றுன்*
*கண்ணோடு உடலெங்கும்*
*புண்ணாகிப் புழுக்கும் !*
*எம்மனம் அப்போது களிக்கும் ! !*

நாள் முழுக்க ஒரே அலைச்சல். இண்டைக்கு வேளைக்கு நித்திரைக்குப் போகோணும் எண்டிட்டு, வேளைக்கே சாப்பிட்டிட்டு போய் கண் அயர்ந்தன். என்ன சோக்கான தூக்கம் ! பொறுங்கோ ! பொறுங்கோ ! உதென்ன உங்கை நடக்கிது? ஆரோ ஒரு பொம்பிளைப்பிள்ளை கண் கூசிற மாதிரி ஆடுது, சுத்தி வர ஏழெட்டு தெரியாத அந்நியமான மூஞ்சையள். ஏதோ பழைய கால அரேபிய கொடியிடை நடனம் மாதிரி. அவா ஆடிறா . . இவங்கள் சாய்வா படுத்திருந்தவடி காசுக்கட்டுகளை எடுத்து அவாவை நோக்கி எறியிறாங்கள். ஐயோ ! ஐயோ . . என்னடா கண்ராவி. போர்த்திக்கொண்டிருந்த பொம்பிளை ஒவ்வொண்டா அவிழ்த்து அவிழ்த்து எறியிது. அவங்களும் காசை வீசிறாங்கள். என்ர கடவுளே ! நாசமாய்ப்போன உலகம், எக்கேடு கெட்டுப்போச்சிது ! உதுக்கு மேலை என்ர கண்ணுக்கு முன்னால உப்பிடி ஒரு அநியாயம் நடக்க விடப்பிடாது எண்டிட்டு கிட்ட ஓடிப்போனன். ‘என்ன இருந்தாலும் இந்த அளவுக்கு கழற்றி வீசிறியள். ஏன் ? என்ன பிரச்சினை ? சொல்லும் !’. ‘எனக்கு காசுக்கஷ்ரம். அது தான் இப்பிடிப் பிழைக்கிறன்’. ‘ஐயோ ! முன்னாலையே எனக்கொரு சொல்லு சொல்லியிருக்கலாம் தானே. விழுந்து கிடக்கிற துணியளை எடுத்து உடுத்துக்கொண்டு என்ர வீட்டை வாரும். நீர் ஆர், எந்த ஊர் எண்டு ஒண்டும் எனக்குத் தெரியாது. ஆனா உமக்கு ஏற்பட்ட கஷ்ரம் உலகத்தில ஒரு பொம்பிளைக்கும் ஏற்படக்கூடாது. சாகும் வரைக்கும் நான் வேளாவேளைக்கு சாப்பாடும், தங்க இடமும் தந்து என்ர குடும்பத்தில ஒருத்தியா காப்பாத்திறன்’. ‘ஐயோ அப்பு ! எனக்கு சாப்பாட்டுக்கு கஷ்ரம் ஒண்டும் இல்லை. புதுசு புதுசா நல்ல நல்ல மொடல் உடுப்புகள் வந்திருக்கு. அதுகள் வாங்கத்தான் பணம் இல்லை’. அட கடவுளே ! மொடல் உடுப்பு வாங்கிறதுக்காக எவனாவது மானம் காக்கிற உடுப்பைக் கழற்றிப்போடுவானே ! என்னவோ நான் அவையின்ர ஷோவைக் குழப்பிப்போட்டன் போல கிடக்கு. அந்தப் பொம்பிளை ‘யாரங்கே, பிடித்துச்செல்லுங்கள் இவனை !’ எண்டு கையைத்தட்டி ஓடர் குடுத்தா. இரண்டு தடியன்கள் வந்து என்னை இரும்புப்பிடி பிடிச்சு, சரசரவெண்டு நிலத்தில அரைய அரைய இழுத்துக்கொண்டு போனாங்கள். ‘என்னை விடுங்கோ ! என்னை விடுங்கோ ! உன்னைப்போய் பாவம் பார்த்தேனே ! என்னை விடு !!’, பலம் கொண்ட அளவுக்குக் கத்தினன்.

நினைவு வந்து முழிச்சுப்பார்த்தா எல்லாம் கனவு. ‘யாரை பாவம் பார்த்த னீயள் ? உப்பிடிக் கத்திற அளவுக்கு ஆர் உங்களை பிடிச்சிழுத்தது ? ? ’. வீட்டில் சந்தேக சுனாமி அடிக்கத்தொடங்கியது. கட்டையில போற வயசில இப்பிடி ஒரு கஷ்ரம் எனக்குத் தேவையா? ? ஆனாலும் அந்த முகத்தை எங்கையோ பார்த்த மாதிரிக் கிடந்திச்சிது. நித்திரை குழம்பிட்டிது, கூடவே நிம்மதியும் தான். பக்கத்திலை கிடந்த பத்திரிகையை எடுத்துப்புரட்டினன். ‘5 ஆண்டுகளுக்கு தேர்தல் இல்லை’ படத்துடன் செய்தி போட்டிருந்திச்சு. எட...எட...ஓகோ . . எண்டானாம் ! இப்ப தானே விளங்கிது ! சரி பிள்ளையள் நான் படுக்கப்போறன், வாறகிழமை சந்திப்போம் !




# நாசரின் முகம்



செல்லுபடியாகும் முகம், செல வாக்கில்லாத முகம் என முகத்திற்கிருக்கும் மதிப்பை முகம் பெறுகின்ற மதிப்பை விசா ரணை செய்கிறது நாசரின் 'முகம்' என்ற சினிமா.

மறுவளத்தில் முகத்துக்கு நாங்கள் கொடுக்கிற மதிப்பு எதனடிப்படையில் என்பதை அதிர்ச்சியளிக்கும் தோற்றமாகக் கேட்கிறது முகம்.

முகம் எங்களின் மனதைக்கேள்விக் குள்ளாக்குகிறது. எங்களின் மனப்பாங்கையும் எங்களின் நடத்தைகளையும் பகிரங்கப்படுத்து கிறது.

சாதாரணமானவர்களை பெரிதாக யாரும் பொருட்படுத்துவதில்லை. ஏன் மனிதர் களாகக்கூட அவர்களை பல சந்தர்ப்பங்களிலும் பலரும் மதிப்பதில்லை, மதித்து நடப்பது மில்லை.

பதிவாகக் கொஞ்சம் வசதி, அதிகாரம், புகழ், அழகு இப்படி ஏதாவது அம்சங்கள் இருந்துவிட்டால் எந்தக்கேள்வியுமில்லாமல் மதிப்பு உருவாகிவிடுகிறது. அவர் சிகரங்களில் ஏற்றப்படுகிறார். வழிபாட்டுக்கும் ஆராதனைக்கு முரிய பொருளாக்கப்படுகிறார்.

இங்கே அறிவு குருடாகிவிடுகிறது. கண்மூடித்தனமான இவ்வாறான மதிப்பளித்தல் மூலமாக உண்மையில் மதிப்பளிப்பவரின் மதிப்பே கீழிறங்குகிறது. ஒருவருடைய செய லால் விளைகின்ற நன்மைகளே அவருடைய மதிப்பை உயர்த்துகின்றது. அதுவே அச் செயலையும் அவரையும் முக்கியத்துவப் படுத்துகிறது. செயல் விளைவிக்கும் நன்மை களால், பெறுபேறுகளின் வழியாக உருவாகும் மதிப்பு நியாயமானது அது சரியானதும்கூட.

ஆனால், போலிமதிப்பு, பொய் மரியாதை போன்றவை எப்படி இன்று வளர்ந் திருக்கின்றன என்பதை முகத்தின் வழியாக நாசர் காட்டுகிறார், விமர்சிக்கிறார், அம்பலப் படுத்துகிறார்.

செயலுக்குக்கொடுக்கப்படுகிற மதிப்பு உயர்வானது என்பதைப் புரிந்துகொள்ளாமல், வெறும் போலித்தனத்துக்கும் பகட்டுக்கும் புனைவுக்கும், பொய்யுக்கும் கொடுக்கப்படுகிற மதிப்பின் அசிங்கத்தனத்தைப்பேசுகிறது முகம்.

இவ்வாறான அனுபவம் நமக்கு ஏற்படும்போது நாமும் கூசிக்கொள்கிறோ மல்லவா.

அதை, அந்த அனுபவத்தை அந்த விவகாரத்தையே முகம் தனது மையமாகக் கொண்டுள்ளது.

எல்லோராலும் வெறுக்கப்படுகிற புறக்கணிக்கப்படுகிற ஒருவன் இன்னொரு விதத்தில் இன்னொரு சந்தர்ப் பத்தில் அனைவராலும் விரும் பப்படுகின்றான், மதிக்கப்படு கிறான். நல்ல மனதும் கம்பீரமும் உள்ளவனின் முகம் மட்டும் அழகற்றதாக இருக் கிறது. அது அவனுக்கு இயற் கையானது. தோற்றக் கவர்ச் சியற்றவனை சகலரும் வெறுக் கிறார்கள்.

அவன் ஏழையும்கூட ஒருபெண் ஒருகட்டத்தில் அவன் மீது பரிவுகாட்டுகிறாள். அவளுடைய பரிவை இவன் தன் மீதான அன்பாக, காதலாக எடுத்துக்கொள்கிறான். தனது விருப்பத்தையும் தனது எண் ணத்தையும் இவன் அவ ளிடம் சொல்ல அவள் அவனைத்திட்டிவிட்டுப் போகிறாள்.

தன்னுடைய துயரைப்பகிர எவரும்மில்லாத தனிமையில் இருக்கிறான் அவன். மனிதர்கள் போகிறார்கள், வருகிறார்கள், பேசுகிறார்கள், சிரிக்கிறார்கள் எதையெதையோ எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அவன் தனித்திருக்கிறான் தனித்திக்கிறான் என்பதை விடத் தனித்துவிடப்படுகிறான்.

மனிதர்களால் நிரம்பியுள்ள உலகில் ஒரு மனிதரில்லை அவனைப் புரிந்துகொள் வதற்கும் நட்பாயிருப்பதற்கும் அன்புகொள் வதற்கும் இப்படி அன்புக்காக, ஆதரவுக்காக, நட்புக்காக ஏங்கிக்கொண்டிருப்போர் எத் தனையோ பேர் இருக்கிறார்களே. நாமெல்லாம் இவர்களுடன் எப்படி நடந்துகொள்கிறோம்? என்று கேள்வியை எழுப்புகிறார் நாசர்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவனுக்கு ஒருவர் ஆதரவாகிறார். அவர் ஒரு சினிமா ஒப்பனை யாளர். அவர் அவனுக்கு ஒரு படத்தில் சான்ஸ் பெற்றுக்கொடுக்கிறார். அந்தப்பாத்திரத்தில் நம்பிக்கையோடும் திறமையோடும் அவன் நடிக் கிறான். ஆனால், படத்தில் அவனுடைய முகத்தை கண்டவுடன் பார்வையாளர்களுக்கு வெறுப்புவருகிறது. படத்தை நிறுத்துகிறார்கள். அழகானவர்களே கதாபாத்திரமாக இருக்க வேண்டும் என்ற விதியை வைத்திருக்கும் உலகமல்லவா இது? அவருடைய ஒப்பனை பொருளொன்றை சந்தர்ப்பவசமாக முகத்துக்குப் போட்டுப்பார்க்கிறான். எதிர்பாராதவிதமாக அது அவனுக்குப் பொருந்திவிடுகிறது. அவனுடைய முகத்தை மாற்றி அழகாக்கிவிடுகிறது.

அதன் பிறகு கேட்கவாவேணும்?

எல்லாமே மாறிவிடுகின்றன. யாரெல் லாம் அவனை வெறுத்தனரோ அவர்க ளெல்லாம் அவனை ஆராதிக்கிறார்கள்.

ஆனால், மற்றவர்களுக்கு உண்மை தெரியாது. மற்றவர்களின் முன்னே போர்த் தப்பட்ட முகத்தோலுடன் காட்சிதரும் அவன் தனிமையில் மேலுறையைக் கழற்றிவிட்டு விம்முகிறான். மேலுறையுடனிருக்கும் ஒவ் வொரு கணமும் அவனுக்கு பெரும் வேதனை யாக இருக்கிறது. முகத்தை அது அரித்தெடுக் கிறது. அந்த வெறுப்பூட்டும் வலியை அவன் தாங்கமுடியாமல் தவிக்கிறான். ஆனால், வெளியே காட்டமுடியாது. தனிமையில் இந்த உலகத்தையும் தனது நடிப்பையும் எண்ணி அழுகிறான்.

வெளியே அவனுடைய புதிய அழகிய தோற்றத்தின் கவர்ச்சியும் அதற்கான மதிப்பும் உயர்ந்துகொண்டேபோகிறது. உள்ளே அவன் நிம்மதியற்றுத்தவிக்கிறான்.

இறுதியில் அவன் தன்னை வெளிப்படுத்துகிறான். அவனை ஏற்றவர்கள் அவனுடைய உண்மை முகத்தைக்கண்டவுடன் அவனை வெறுக்கிறார்கள்.

குற்றவாளியாற்ற அவனை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். அழகில்லாத முகத்தை ஒருவராலு ஏற்கமுடியவில்லை. மீண்டும் அவன் முகமூடியைப் போட்டுக் கொள்கிறான். முகமூடியுள்ள உலகத்துக்கு அவன் திரும்பி விடுகிறான். அதுதான் அவனுக்குப்பாதுகாப்பாக இருக்கிறது. எல்லோரும் அவனை மீண்டும் வரவேற்கிறார்கள்.

ஒருவருக்கும் உண்மை பிடிக்கு தில்லை. உண்மையை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது.

இது தான் நாசர் நம்முன்வைத்துள்ள விரிப்பு.

கொஞ்சம் மிகைப்படுத்தல்- புனைவு கூடித்தானுள்ளது. படத்தில் ஆனால், படம் பேசுகிறவிடயம் முக்கியமானது. அது செய்கிற விசாரணையும் அதிகம்.

முகம் தீவிர சினிமாவிற்குரிய குறியை நோக்கியது. ஆனால் பார்வையாளருக்கு சில சேதிகளை வலிமையாக- இடித்துச் சொல்ல முனைந்து பிர சாரத்தொனி ஏறிவிட்டது. அது படத்தைப் பலவீனப்படுத்திவிட்டது.

படத்தில் நிறையமுக்கியமான ஆளு மைகள் பங்காற்றியிருக்கிறார்கள். ஓவியத்திலும் அனிமேஷனிலும் கெட்டிக்காரரான ட்ரொஸ்க்கி மருது முகத்தை மாற்றுவது முதல் அரங்கம் வரை மிகத்திறமையாக வேலை செய்கிறார்கள். ஒரு முகத்தை சாதாரணமாக எப்படியெல்லாம் மாற்றிவிடுகிறார் மருது. இளையராஜாவின் இசை தனியான சிறப்பு. அதேபோல B.லெனின் எடிட்டில் தங்கர்பச்சானின் கமெரா எல்லாமே மாறுதலான சினிமாவுக்கான ஒரு முயற்சியின் கூட்டிணைவு. நடிப்பும் கதை மற்றும் இயக்கமும் நாசர். நாசரின் அக்கறைகள் எப்போதும் தமிழ்ச்சினிமாவைத் தரமுயர்த்துவது. மற்றது அதன் கதை அவருடைய உழைப்பே முகம். இதில் நமது முகம் எது.


**ஆரதி**

---

உலக கிரிக்கெட்டில் வேகப்பந்து வீச்சாளர் வரிசையில் அவுஸ்திரேலியாவின் கிளன் மெக்ராத் குறிப்பிடத்தக்கவராவார். அவரது பவுன்சர் பந்துகள் கொடுமையான சுனாமி அலை போன்று அச்சுறுத் தலானது. இலக்கு நோக்கி வரும் பந்து மின்னல் வேகத்தில் வில்லில் இருந்து புறப்படும் அம்பைப் போன்று வேகமாக வரும்.

தற்போது அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் பிரபலமாக விளங்கும் வீரராவார். இதுவரை 104 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 472 விக் கட்டுக்களை அவர் வீழ்த்தியுள்ளார். அவரின் சராசரி 21.43 ஆகும்.

## சுனாமிக்கு நிகரானவர்



மொத்தம் 4053 ஓவர்கள் பந்து வீசியுள்ள அவரின் ஓட்டமற்ற ஓவர் 1221 ஆகும். கொடுத்த ஓட்டங்கள் 10,117 ஆகும். அண்மையில் அவரின் சாதனையாவது பாகிஸ்தானுக்கெதிரான போட்டியில் 24 ஓட்டங்களை கொடுத்து 8விக்கட்டுக்களை வீழ்த்தியமையாகும். இதனைவிட இங்கி லாந்துக்கெதிராக லோர்ட்சில் 38 ஓட்டங் களைக் கொடுத்து 8 விக்கட்டுக்களை வீழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. ஒரு இன்னிங் சில்10விக்கட்டுக்களை வீழ்த்திய சந்தர்ப்பம் 3 என்றிருக்க 5 விக்கட்டுக்கள் வீழ்த்திய சந்தர்ப்பம் 25 ஆகும்.

உலகில் இதுவரை மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கொட்னிவோல்ஷே அதிக விக்கட்டுக்களைப்பெற்ற (519) வேகப்பந்து வீச்சாளராகக் கருதப்படுகிறார். அந்த வரிசையில் மெக்ராத் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மெக்ராத்தின் பந்துவீச்சு கத்திமுனைக்கு சமமானது எனவும் துடுப்பாட்ட வீரர்களை தடுமாறவைப்பதாகவும் வர்ணனையாளர் ஒருவர் விவரித்துள்ளார். அவர் துடுப்பாட்ட வீரரின் பலம் பலமின்மையை கருத்தில்கொண்டு அதற்கேற்றவாறு செயற்படுவார். மிக மிக நிதானத் துடன் ஆடும் துடுபாட்டவீரர் கூட இவரின் யோக்கர் பந்து வீச்சு சவாலாகவே அமைந்துவிடுகிறது.

1970 ஆம் ஆண்டு பிறந்த இவர் நியு சவுத் வேல்ஸ் பிராந்திய அணியில் இணைந்து தனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தார். இடது கை வேகப்பந்து வீச்சாளரான இவர் 1993/94 ஆம் ஆண்டுகளில் தேசிய டெஸ் அணியில் இடம்பிடித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் மட்டுமன்றி ஒருநாள் போட்டிகளிலும் அணிக்கு இவர் இன்றியமையாத வீரராக திகழ்கின்றார்.

---

இப்போதுதான் 2004 ஒலிம்பிக் முடிந்திருக்கிறது. அதற்குள் 2008, 2012 போட்டிகள் பற்றி பரபரப்பாகப் பேசுகிறார்கள். 2008 ஆம் ஆண்டு போட்டிகளை பீஜிங் (சீனா) நடத்துகிறது.

2012 போட்டி எங்கு நடக்கும் என்ற விபரத்தை ஜுலை மாதம் அறிவிக்கிறது. சர்வதேச ஒலிம்பிக் சபை 2012 நான்தான் நடத்துவேன் என்று பாரிஸ் நியூயோர்க், லண்டன் மாட்ரிட் மற்றும் மாஸ்கோ நகரங்கள் முண்டி அடிக்கின்றன.

ஒலிம்பிக் போட்டிகள் நடத்த வாய்ப்புக் கோருபவை பெரும் பாலும் மேற்கத்தய நகரங்களாகத்தான் இருக்கின்றன. இந்தியா கூட இப்போதுதான் செருமிக்கொண்டு குரல் எழுப்புகிறது. ஆபிரிக்க நாடுகள் இருக்கும் திசையில் இருந்து மூச்சுவிடும் சத்தம் கூட காணோம். சர்வதேச ஒலிம்பிக் சபையை இந்த விடயம் சங்கடப்படுத்தியுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர் ஜாக்ஸ்ரோக் தெரிவிக்கையில்,

ஒலிம்பிக் போட்டிகள் என்றாலே மேற்கத்திய நாடுகள்தான் நடத்த வேண்டுமா? ஏன் ஆபிரிக்க நாடுகள் நடத்தக்கூடாதா? நீங்களும் கையை உயர்த்தி ஒலிம்பிக் உரிமை கேளுங்கள் என்று மனந்திறந் துள்ளார்.

பொதுவாக ஒலிம்பிக் நடத்துவது என்றால் சம்பந்தப்பட்ட

## தூர நிற்கும் ஆபிரிக்கர்



நகரம் போக்குவரத்து வசதி நிறைந்த தாக, உலகில் எந்த இடத்தில் இருந்தும் எளிதில் வந்துபோக வசதியாக இருக்க வேண்டுமே தவிர குறைந்தது 30 ஆயிரம் ஹோட்டல் அறைகளாவது அந்த நகரில் இருந்தாக வேண்டும். பாது காப்புப் பற்றிச்சொல்லவே வேண்டாம். உச்சக்கட்ட கெடுபிடி அவசியம். இப்படி நிறைய வசதிகள் தேவைப்படும்.

இதுக்கெல்லாம் நிறையச் செலவாகுமே என்று ஆபிரிக்க நாடுகள் பாவம் ஒதுங்கி விடுகின்றன. அப்படியெல்லாம் ஒதுங்கியிருக்கக் கூடாது. 2016 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஆபிரிக்கா முன்வர வேண்டும். ஆபிரிக்கா கண்டத்துக்குள் ஒலிம்பிக் போட்டிகள் முதல் முறையாக காலடி வைக்கவேண்டும். ஒருமுறை ஒலிம்பிக் நடத்தினால் நடத்தும் நாட்டின் பொருளாதார நிலைமை எங்கேயோ போய்விடும் என்றெல்லாம் அவர் தெரிவித்துள்ளார்.


மேற்படி கோரிக்கையை தென்னாபிரிக்க அரசு மட்டும் கொஞ்சம் பரிசீலிக்கிறதாம். ஏற்கனவே, உலகக் கோப்பை கிரிக்கெட் நடத்தியிருக் கிறது 2010 இல் உலககோப்பை கால்பந்து போட்டி நடத்தப்போகிறது. சரி ஒலிம்பிக் நடத்தவும் ஒரு கல் வீசிப்பார்க்கலாம் என்று தென்னாபிரிக்கா முடிவு செய்கிறதாம்.

---

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி கூட்டத்தை கூட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக பல தீர்மானங்களையும் எடுத்துள்ள னர். இவர்கள் போகின்ற போக்கை பார்த்தால் கூட்ட ணியில் இருந்து விலகலாம். ஜே.வி.பியின் ஓர் நிரந்தர கொள்கை அற்ற இனவாத அரசியல் கட்சி தற்போது அவர்களின் நோக்கம் நாட்டின் உச்சபதவியை பிடிப் பது அதற்காக பத்தாயிரம் குளங்களை அமைக்கும் திட்டம் தொடங்கி வெளிநாட்டு சுனாமி நிவாரணம் வரை தங்கள் அரசியல் விளம்பரங்களை மேற்கொண்ட வர்கள். எனவே சனாதிபதியின் முடிவில் மாற்றம் ஏற்படாத விடத்து. ஜே.வி.பி கூட்டணியிலிருந்து விலகலாம் விமல்வீரவன்சவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவு இருக்கிறது. அதற்கு ஜே.வி.பியின் தற்போதைய நாடாளுமன்ற ஆசனங்கள் ஓர் சான்று. நாட்டில் எந்தக்கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என தீர்மானிக்கும் சக்தியாக அவர்கள் இன்று காணப்படுகின்றனர்.

அடுத்ததாக சந்திரிகாவின் அறிவிப்பால் பாதிக்கப்பட்டவர் ரணில் மக்கள் மத்தியில் அதிகச் செல்வாக்கு உடையவராக காணப்படுபவர்களில் முதன்மையானவர். சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்தால் பெரும்பாலும் அடுத்து நாட்டின் சனாதிபதி இவராகலாம். ஆனால் சந்திரிகா தனது பதவிக்காக அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஒரு போதும் பின் நிற்பது இல்லை. எனவே அவர் அடுத்தகட்ட நடவடிக்கையாக 'அரசியலமைப்பை மாற்றியமைக்க முற்படலாம். ஆனால்அதற்குஜே.வி.பி மற்றும் ஐ.தே.கட்சியினர் கடும் எதிர்ப்பைக்காட்ட சில நேரம் அதுவும் சாத்திய மாகாமல் போகலாம். சில சமயம் அதற்கு முன்னாகவே ஜே. வி.பி கூட்டணி யிலிருந்து விலகினாலும் விலகலாம். எது எவ்வாறோ பண்டார நாயக்க ஆட்சி இவ்வருடத்துடன் முடிவுக் குக் கொண்டு வருவதில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் முனைப்புடன் நிற்கின்றன. இதனால் பண்டார நாயக்க அரசியல் முடிவுக்கு வரும் என்பதில் அனை வருக்கும் நம்பிக்கையும் உள்ளது. ஆனால், தமிழர் களை பொறுத்தவரை கொழும்பில் எப்படித்தான் ஆட்சி மாறினாலும் பிரதிபலிப்பு ஒன்றாகத்தான் இருக்கும். காரணம் எல்லோரும் சிங்களம் எனும் குட்டையில் ஊறின மட்டைகளாகத்தான் இருப்பார்கள்.



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 06**

**பகுதி -33**

"நான் தீந்தையில் விரலை தோய்ப் பேன். மணலில விளையாடுவேன். பின் தேநீர் விருந்து வைப்பேன்" என்றான் அவன்.

"எங்கட ஒரு மணித்தியாலத்தில் மிஞ்சியிருக்கிற நேரத்தில என்ன செய்யிறது எண்டு திட்டம் போட்டனீங்களோ?" என்று கேட் டேன்.

"ஓமோம்" என்றவனின் முகத்தில் புன்னகை முன்பைவிட அதிகமாக விரிந்திருந் தது.

"அநேகமான வேளைகளில நீங்கள் சொல்லுறதெல்லாம் சரியாத்தான் இருக்குது."


"நல்லது. அது மனதுக்கு உற்சாகம் தருகிறது" என்றேன். அவன் வாய்விட்டுச் சிரித்தான். குறுகிய நேரம் நீடித்த ஒன்றாக அது இருந்தது. ஆனால், அவன் சிரித்ததை நான் கேட்டது அதுதான் முதல் தடவை. தேனீர் கோப்பைகளின் தொகுதியை றாக் கையிலிருந்து எடுத்தவன், "நான் எல்லா வற்றையும் ஆயத்தப்படுத்துகிறேன்" என்று அறிவித்தான்.

"முதல்ல தேநீ விருந்தோ வைக் கப் போறீங்கள்?" நான் கேட்டேன்.

"ஓம். அப்பிடித்தான் செய்ய வேணுமெண்டு நான் நினைக்கிறன்" என்று அவன் பதில் சொன்னான். சூப்பிப் போத்தலை எடுத்து நீரை நிரப்பிக்கொண்டான். போத்தலில் மாட்டாமலே சூப்பியை மட்டும் சப்பினான். தண் ணீரை முழுவேகத்தில் திறந்துவிட்டான். நீர்த் தொட்டியை உள்ளடக்கி அலுமாரி போல் அமைக்கப்பட்டிருந்த பெட்டியின் கதவைப் பூட்டி விட்டான். பிறகு என்னைப் பார்த்தான். எனது பதில் வினையை எதிர்பார்த்து அவன் காத்திருப் பது வெளிப்படையாகத் தெரிந்தது. நான் எதுவும் சொல்லவில்லை. அறைக்குக் குறுக்காக நடந்து சென்ற அவன் ஜன்னல் பீடத்தில் முழங்கையை ஊன்றிக்கொண்டான். ஒரு கையில் போத்தலை பிடித்துக்கொண்டும் சூப்பியைச் சப்பிக்கொண்டும் என்னையே தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு வாய் விட்டுச் சிரித்துவிட்டு, மூடியிருந்த தண்ணீர் குழாய் அலுமாரியை நோக்கி அறைக் குக் குறுக்காக ஓடினான். கதவைத் திறந்து நீர் ஓடுவதை நிறுத்திவிட்டான். சூப்பிப் போத்தலில் இருந்தவற்றை தொட்டிக்குள் ஊற்றிவிட்டு புதிதாக நீரை நிரப்பிக் கொண் டான். சூப்பியைச் சப்பிக்கொண்டும் சூப்பிக் கொண்டுமிருந்தான். பின்பு அங்கிருந்த அலுமாரியின் கதவுகளைத் திறந்து அதன் தட்டுகளில் அடுக்கியிருந்த வழங்கல் பொருட் களைப் பார்த்தான். பிறகு என்னைப் பார்த்தான்.

மென்பனியில் அணியும் கால் காப் புறைகளை அன்றைக்கு முதல் முறையாக அணிந்து வந்திருந்தான். ஆனால், அவற்றை கழற்றியிருக்கவில்லை. இப்போது அவற்றைச் சுட்டிக் காட்டியபடி "இதுகளை இப்ப கழற்றப் போறன்" என்றான்.

"அதுகள இப்ப கழட்டி விடலா மெண்டு நினைக்கிறீங்களோ?" நான் கேட்டேன். "ஓமோம்" என்று அவன் சொன்னாலும் அவற் றைக் கழற்றவில்லை. அதற்குப் பதிலாக அலு மாரியில் இருந்த பொருட்களை பார்வையிடத் தொடங்கினான். களிமண் இருந்த பெட்டிகளை வெளியே எடுத்தான். மேசையில் சாடிக்குள் களிமண் இருப்பதை அவனுக்கு தெரிவித்த நான், அங்கு இருந்தவை முடிந்து போனால்தான் புதிதாக பெட்டியை திறந்து எடுக்க வேண்டும் என்பதை அவனுக்குத் தெரிவித்தேன். தேவைப்படும்போது எடுக்கவே அலு மாரியில் வழங்கல்



பொருட்கள் இருக்கின்றன என்பதையும் அவ னுக்கு விளக்கினேன்.

"அப்பிடியோ?" என்று கேட்டவன் அப்ப இதுதான் உங்கட வழங்கல் அலுமாரி!" என்றான்.

"ஓம்" என்றேன் நான். தனது கால் காப்புறைகளை இழுத்துக்காட்டினான். "இந்த கால் காப்புறைகள்..." என்று இழுத்தான்.

"ஏன்.... அதுகளுக்கு என்ன?" கேட்டேன். "வெளியில இண்டைக்கு சரியான குளிர் காற்று வீசுது". "ஓம். வெளியில சரியான குளிராய்த்தான் இருக்குது" அவன் சொன்னதை நான் ஆமோதித்தேன்.

"விளையாட்டு அறையிலும் இண் டைக்குச் சரியான குளிராயிருக்கு" டிப்ஸ் சொன் னான். "ஓம் அப்பிடித்தான் இருக்குது" என்றேன் நான்.

அப்ப...கால்காப்புறைகள கழட்ட வேணுமோ?" டிப்ஸ் என்னைக் கேட்டான்.

"அது உங்கட விருப்பம்" என்ற நான், தொடர்ந்து, "நீங்கள் அதுகளை கழட்ட விரும் பினா, கழட்டி விடுங்கோ. இண்டைக்கு கழட்ட விருப்பமில்லையெண்டா, கழட்டத்தேவை யில்லை. இண்டைக்கு உள்ளையும் நல்ல குளிரா இருக்கிறதால கழட்டாட்டி




பிரச்சினையில்லை." என்றேன்.

" ஓமோம்....சரியான .... சரியான குளிராயிருக்கு" என்றான் டிப்ஸ்.

மணிக்கூடு நான்கு தரம் ஒலித்து ஓய்ந்தது. அவன் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மணல் இருக்குமிடத்தை நோக் கிச்சென்று மணல் இருந்த பெட்டிக்குள் ஏறிக் கொண்டான். அங்கிருந்த விமானப் பொம்மை களுடனும் படைவீரர் பொம்மைகளுடனும் விளையாடினான். நீண்ட பெருமூச்சொன்று அவனிடமிருந்து கிளம்பியது.

"எங்கயும் உள்ளுக்க போன உடன பூட்சுகள கழட்டவேணும். இழுத்து... தள்ளி.... பிடுங்கி எடுக்க வேணும். பெரிய கரைச்சல்... ஆனா இண்டைக்கு உள்ளுக்குச் சரியான குளிரா இருக்கிறதால கால் காப்புறைகளை கழட்டாம விடுவம்."

"எப்பவாவது உள்ளுக்கு போனதும் கட்டாயம் கழட்ட வேண்டியதெண்டு கொஞ் சம்..... சிலவேளைகளில கழட்டத் தேவை யில்லாதது எண்டு கொஞ்சம் இருக்குது போலத் தான் தோன்றுது" என்று என் கருத்தை அவனுக் குச் சொன்னேன்.

"ஓமோம்...அது ஆக்கள குழப்பி விடுகுது" என்று டிப்ஸ் சொன்னான்.

"அது குழப்பிவிடுகிற சங்கதிதான்" என்றேன். "சரியாக் குழப்பிப்போடும்" என்று சொல்லியவன் அதை வலியுறுத்துவதைப் போல் தலையையும் பலமாக ஆட்டினான்.

மணல் இருந்த பெட்டியிலே சிறிய ஒற்றை அறை பொம்மை வீடு இருந்தது. அதனுடைய ஜன்னலில் ஒரு பாத்திரம் உடைந் திருந்தது. அமைதியாகவும் திறமையாகவும் டிப்ஸ் அதனை திருத்தியமைத்தான். பின் மட்டைகளில் வெட்டப்பட்ட, கனமான பண்ணை மிருகங்கள் கொண்ட பெட்டியை வெளியே எடுத்தான். அந்த மிருகங்களை மணலில் நடுவதற்கென மரத்தாலான இணைப்புகள் இருந்தன.

"டிப்ஸ்! இதுகளை நட்டு விடுவதற்கு மிஸ் ஏ உனக்கு உதவுவார்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்ட அவன் என்னைப் பார்த்து, "இதுகள நடுறதுக்கு எனக்கு உதவு வீங்களா மிஸ் ஏ?" என்றான். "நான் என்ன செய்வன் எண்டு நீங்கள் நினைக்கிறீங்கள்?" நான் கேட்டேன். "நீங்கள் கட்டாயம் உதவு வீங்க" என்றவன் உதவியு மின்றி தானே மிருகங்களை மணலில் நட்டு விடத் தொடங்கினான். வேலை செய்யும் போதே அவன் பாடவும் தொடங்கினான். பொம்மை வீட்டை மணல் பெட்டியின் நடுவில் வைத்த வன், அதனைச் சூழ வெவ்வேறு இடங்களில் பண்ணை மிருகங்களை நாட்டி விட்டான். தன்னுடைய செயற்பாட்டில் முழுமையாக மூழ்கிப் போய்விட்டவனாக அவன் தோன்றி னான். "பூனைகள் இந்த வீட்டில இருக்குதுகள்" என்றவன். தொடர்ந்து, "சண்டைக்கு போற வீட்டுக்காரன் ஒரு பூனையை..... உண்மையான பூனையை வளர்க்கிறான். இந்தா.... வாத்து. ஒன்று இருக்கு. வாத்துக்கு குளிக்க குளம் இல்ல. அதுக்கு ஒரு குளம் வேணுமாம். இங்க பாருங்கோ.... இரண்டு வாத்துகள் இருக்குதுகள். இது சின்ன பெரிய வாத்து அது துணிஞ்சது. இது சின்ன வாத்து. ஆனா துணிவு குறைவு. பெரிய வாத்துக்கு எங்கையாவது சொந்தமா குளம் இருக்கும். இந்த சின்ன வாத்துக்கு சொந்தமா குளம் இல்லை. ஆனா அதுக்கு சொந்தமா குளம் இருக்கவேணுமெண்டு விரும்புது. ஆனா... இப்ப இந்த இரண்டு வாத்து களும் சந்தித்துவிட்டன. இங்க நின்றபடி ஜன்னலுக்கு வெளியே ட்ரக் வந்து நிக்கிறதை பாத்துக்கொண்டிருக்குதுகள்." சொல்லிக் கொண்டே போனான்.

அவனுடைய வாய்மொழி தட்டுத்தடங் கலின்றியும் பயன்விளைவோடும் பெருக்கெடுத் துகொண்டிருந்தது. நான் அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே விளையாட்டு அறை யின் ஜன்னலுக்கு வெளியே பெரிய ட்ரக் ஒன்று வந்து நிற்பதை கவனித்திருந்தேன்.

"அப்ப....சின்ன வாத்து சொந்தமா ஒரு குளம் தனக்கு வேணும் எண்டு விரும்புது. பெரிய வாத்துக்கு இருக்குது எண்டு அது நினைக்கிற மாதிரியான குளமோ வேணுமெண்டு விரும்புது?" நான் கேள்வியெழுப்பினேன்.

(தொடரும்....)

---

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படிப்பு, வேலை, நீண்டநேர ஓய்வு, கோயில், குளம், கொண்டாட் டம், பசு மாடுகள், வாழைத் தோட்டம்.

சுத்திவரவும் எங்கட ஆட் கள். எவ்வளவு சந்தோசம் சந்தோச மான அந்த மூன்று மாதமும் நான் சொர்க்க பூமியில் வாழ்ந்தேன் அம்மா. நீங்கள் வந்ததன் பிற்பாடு மிகவும் கட்டுப்பாடு இருந்தாலும் அவர்கள் என்னை ஒரு ராசகுமாரனைப் போல் தான் நடாத்தினார்கள்.

நான் மூச்சு விடாமல் எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றேன்.

அடடே விசாகன் நீ இங்க இங்கிலிசில படிக்கின்றாய். உலக மொழி இங்கிலிஸ். அது உனக்குத் தெரியுமா?.

அம்மா இங்கிலிஸ் ஒரு மொழி. அது அறிவில்லை. இன்றைக் குத் தமிழீழத்தில எல்லோரும் இங்கி லிஸ் படிக்கின்றார்கள். அறிவுத் தேடலுக்குப் பயன்படுத்துகின்றார்கள். தமிழீழம் உலக நாடுகளோடு ஒப்பிடும் போது அது தன்னிறைவுகளாலும் தன் பாதையை நாடி நிற்கின்றதாம்.

உனக்கு யாரோ நல்லாக் குழையடிச்சிருக்கினம். அதுதான் நீ இங்க வந்ததும் ஆடுகின்றாய்......

இல்லை அம்மா எனக்கு மூன்று மாதமும் காந்திப் பெரியம்மா தமிழ் படிப்பித்தவா. அவர் தந்த விளக்கமும் நான் பார்த்த புலிமாமா வின் திட்டமிடலும் ஈழத்தில் நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்று எனக்கு விளங்குகின்றது.

நான் அம்மாவுக்குச் சொல்லி முடித்ததும் அம்மா எழுந்து போய்விட்டார். அப்பா என் முகத் தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மா அறையை விட்டுப் போனதும் அப்பாவின் மடியில் ஓடிப் போய் படுத்துக்கொள்கின்றேன்.

ஏன் அப்பா நீங்கள் போய்ப் பாருங்கள். போனீங்கள் என்றால் திரும்பி வரமாட்டீர்கள். இருபது வருடத்துக்கு முன் இருந்ததை விட எல்லாத் துறையிலும் முன்னேறி யிருக்கிறது.

ஏன் அப்பா நீங்கள் போக மாட்டம் என்று சொல்கின்றீர்கள். இங்க எல்லாமே தனிமையாக இருக்கின் றது.

பள்ளிக்கூடத்துக்கு போனால் மட்டுமே தனி உலகம். வீட்டுக்கு வந்தால் எல்லாமே வெறுமை, தனிமை, எதையோ இழந்து விட்ட மனப்பாரம்.

ஆனால், அங்க யாழ்ப் பாணத்தில் பக்கத்து வீட்டுக்காரர் கூட சொந்தக்காரர் மாதிரி, கிணத்தடியில் குளிக்கப் போனால் கூட்டம், கோயி லுக்குப் போனால் கூட்டம், சங்கக் கடைக்குப் போனால் எங்கிட ஆட்கள். ஐயோ அப்பா அங்கத்தை வாழ்க்கை யோடு இந்த ஊரை ஒப்பிட முடியாது.

ஏன் அப்பா 18 மணித்தி யாலமாக நீங்கள் வேலை செய்து யாருக்காக இந்த வேதனையைச் சுமக்கின்றீர்கள்.

நீங்கள் என்ன சந்தோசத் தைக் காண்கின்றீர்கள். சொல்லுங் கள். அப்பா ஏன் நாங்கள் எல்லோரும் நிரந்தரமாக ஊருக்குப் போகக் கூடாது?

விசாகன் 16 வருடங் களுக்கு முன் நானும் ஒரு போராளி தான். இந்திய இராணுவம் எமது மண்ணை அமைதிப்படை என்ற போர்வையோடு ஆக்கிரமித்து எமது மக்களையும் போராளிகளையும் பலி யாக்கிய போதும் தலைவர் மிகவும் கவனமாக நடந்துகொண்டார். அதுவே எல்லை மீறி இயக்கத்தை அழிக்க முற்பட்டபோது போராட் டத்தை தனது தீர்க்கதரிசனப்பார்வை யுடனும் தொடங்கினார்.

அப்போதுதான் ......

சொல்லுங்க அப்போது என்ன நடந்தது...... சொல்லுங்கள் சொல்லுங்கள் அப்பா....

இந்திய வல்லரசுடன் மோதுவது எம்மையே நாம் அழித்துக் கொள்ளும் தவறான முடிவை தலை வர் எடுக்கின்றார் என்று தப்புக் கணக்குப் போட்டு, நாங்கள் சிலர் இயக்கத்தை விட்டு விலத்திக் கொண்டு வெளிநாடு வந்துவிட்டோம்.

அதனால் என்னப்பா, நீங்கள் தானே இங்க இயக்கத்துக்கு காசு சேர்க்கின்றீர்கள், எல்லா வேலை களையும் தொடர்ந்து செய்கின்றீர் களே.

இல்லை விசாகன் அந்தப் புனித மண்ணை விட்டு இந்திய இராணுவத்தை வெளியேற்றியதோடு இலங்கை இராணுவத்தையும் ஓட, ஓடத் துரத்தி இன்று ஒரு மரபு வழி இராணுவமாக வளர்ந்து நிற்கும் அந்த மாபெரும் தலைவனையும், போராளி களின் தியாகத்தையும் அன்று விட்டு விட்டு ஓடி வந்த என்னால் எப்படி முகம் கொடுப்பேன்.

அப்பா நீங்கள் காசும் கொடுக்கின்றீர்கள் காசும் சேர்க்கப் போகின்றீர்கள். அதனால் ஊருக்குப் போகலாம் தானே.

வெள்ளமாகப் பகை கொண்டு வரும்போது, வரம்பாகத் தடுத்து நிறுத்தும் அந்தப் போராளி களுடன் சில வெள்ளிக் காசுகளை கொடுப்பதன் மூலம் மட்டும் பங்காளி கள் என்று மார் தட்டிக்கொள்ள என்னால் முடியவில்லையே.

அப்பா புலி மாமா நல்லவர். அவருக்குத் தெரியும் தன்னை விட்டுப் போனவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் தனக்கும் தமிழீழத் திற்கும் விசுவாசமாக இருக்கின் றார்கள், செயற்படுகின்றார்கள் என்று. நான் அப்பாவிற்குச் சொல்லி முடிக் கின்றேன்.

ஒற்றைக் காலை சுவரில் ஊன்றிக் கொண்டு, எதிரே தொங்கிக் கொண்டிருக்கும் தலைவர் பிரபாகரனின் படத்தை பார்க்கின்றார். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த் தங்கள் எனக்கு விளங்குகின்றன.

என் மனக்கனங்களும் கவலைகளும் தூசு தட்டிய புதிய பொருளாக நிலை குத்துகின்றது.


அப்பா தொலைபேசியை எடுத்து யாழ்ப்பாணத்து இலக்கத்தைச் சுழற்றுகின்றார்.

எனது மனம் சந்தோசத்தின் சுவடுகளையும் தமிழீழத்தில் தினமும் கோயிலும், கடற்கரையும், பச்சை வயல் வெளிகளும், பெரியாச்சியின் கூழும், அம்மம்மாவின் அப்பமும் தோசையும், எள்ளுத்துவையலும், ஆட்டுப் பால் கறந்த கையும், பெரியம் மாவின் மாடுகளும், கடைசியாக நம் சாந்தி மாமியின் அகல்யாவின் முகம் மிகவும் கிட்டத்தில், மிகக் கிட்டத்தில் தெளிவாகத் தெரிகின்றது.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலா!*

*ஆழிப் பேரலையில் தேசியத் தலைவர் அவர்கள் இறந்துவிட்டார் என்று கூறிய ஊடகங்கள் இப்போது என்ன சொல்கின்றன?*

*ந.ரேணு.*
*நெடுங்கேணி,*

என்றென்றும் பொய்யுரைப் பதைத்தவிர வேறொன்றறியோம் பராபரமே என்று பாடிக்கொண்டிருக்கின்றன.

*பாவலா!*

*சூடான் நாட்டில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிக் கூறுங்களேன்?*

*ச.கவிதா,*
*யாழ்ப்பாணம்,*

தற்போதைக்கு சூடான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

*பாவலா!*

*'கதி இழக்கினும் கட்டுரை இழக்கேன்' என்று கூறிய அரிச்சந்திரன் இன்று வாழ்ந்தால் எவ்வாறு கூறுவார்?*

*கெ.திவ்வியன்,*
*புதுக்குடியிருப்பு,*

கடவுள் மீது ஆணையாக நான் சொல்வதெல்லாம் உண்மை உண்மையைத்தவிர வேறொன்றுமில்லை என ஏதாவதொரு நீதிமன்றில் சத்தியம் செய்துகொண்டிருப்பார்.

*பாவலா!*

*ரணில் இப்போது நிம்மதி கிடைக்க என்ன செய்யப்போகிறார்?*

*ந.அப்பன்,*
*வள்ளிபுனம்.*

சனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்குமிடையேயான முறுகல் இறுகலாக வேண்டும் என்று பிரார்த்திக்கப்போகிறார்.

*பாவலா!*

*தாங்கள் ஐ.நா.செயலராக வந்தால் தமிழர்களுக்கு என்ன செய்வீர்கள்?*

*க.ஞானா,*
*புதுக்குடியிருப்பு.*

அப்படி ஒரு வாய்ப்பு எனக்கு வரும்போது நான் தமிழர்களுக்கு எதுவுமே விசேடமாகச் செய்யவேண்டிய தேவை இருக்காது.

*பாவலா!*

*இப்போது குரங்குகள் மனிதர்களைத் தாக்குவதாக அறியமுடிகிறது இது ஏன் பாவலா?*

*கு.சிந்து,*
*தண்ணீர்ஊற்று.*

மனிதர்கள் தங்களைத் தமது மூதாதையர் என்று சொல்லி அவமானப்படுத்துகிறார்கள் என்ற சீற்றம் காரணமாக இருக்கலாம்...!

*பாவலா!*

*உலகிலேயே மிகப் பயங்கரமான நோயை உண்டு பண்ணும் கிருமி எது?*

*இ.விது,*
*முள்ளியவளை,*

நீங்கள் உங்களுக்கு பிடிக்காத நபரை 'அவன் ஒரு கெட்ட கிருமி' என்றல்லவா கூறுகிறீர்கள் அப்படியானால்....

*பாவலா!*

*சந்திரனுக்கு இப்போதெல்லாம் மனிதன் அடிக்கடி போய்வருகிறான். நான் அங்கே ஒரு தேனீர்க்கடை போடலாம் என்று எண்ணுறேன் அதற்குத் தங்களின் அறிவுரை?*

*வ.வேணு,*
*சங்கானை,*

யாராவது நல்ல தேனீர்க் கடைக்காரராகப் பார்த்து கேட்டுப்பாரும்.

*பாவலா!*

*மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து இருட்டாக இருக்கும் என்கிறார்களே?*

*சி.சியாமளா,*
*கிளிநொச்சி.*

அதற்கென்ன... மின்சாரம் இருக்கும்தானே தொடர்ச்சியாக வீடியோவில் படம் பார்ப்பதற்கு.

*பாவலா!*

*இக்கால சினிமாப் படங்களையும் முற்கால சினிமாப் படங்களையும் ஒப்பிட்டு வித்தியாசம் கூறமுடியுமா?*

*சி.சங்கர்,*
*வவுனியா.*

முற்கால சினிமாப் படங்கள் கலைத்துவம்மிக்கவை இக்கால சினிமாப் படங்கள் கொலைத்துவம் மிக்கவை... அது சரி நீங்கள் கேட்பது தமிழ் சினிமாவைப் பற்றித் தானே!

*தமிழ் மக்களுக்கு உதவிகள் செய்யாமல் உதவி செய்வதாகக் கூறும் அரசு பற்றி யாது கூற விரும்புகிறீர்?*

*சுதன்,*
*கோணாவில்.*

சிறிலங்கா அரசு எதையுமே எமக்குத் தரப்போவதில்லை என்பதையும் தமிழ்மக்கள் அரசமைக்கும் நிலைக்கு சிறிலங்கா அரசு கொண்டுசெல்கிறது என்பதையும் சர்வதேசம் நன்கு புரிந்துகொண்டுள்ளது என்பதையும் கூறவிரும்புகிறேன்.




"அடுத்த அஞ்சு வருசத்துக்குத் தேர்தலில்லையாமெண்டு சனாதிபதி சொல்லிப்போட்டா"

ஓமோம், இனி அடுத்த அஞ்சுவருசத்துக்கு சட்டம் ஒழுங்கு ஒண்டுமில்லையெண்டு சொல்லுங்கோ"

அதென்னப்பா ஊரெல்லாம் பத்தியெரியக்க வரியமொரு தேர்தல் இப்பதான் ஏதோ உருக்கமான கதை.

அதொண்டும் பிரச்சினையில்ல ஜேயார் போட்டசட்டம், ஜேயார் போனவழியெண்டு சொல்லிச் சொல்லி அந்தத் தடத்திலயே தானும் நடக்கிறா அதில என்னப்பா பிழை. அதுசரி என்ன ஜேவிப்பீக்காரர் புதுசா ஒரு புலுடாவிட்டிருக்கினம். தங்களைக் கேக்காம சனாதிபதி செய்யிறவேலையளுக்குத் தாங்கள் பொறுப்பில்லையாமெண்டு.

அதொண்டுமில்ல உள்ளுக்க கதைச்சுப்பேசி இவைக்குத் தெரியாமச்செய்யிற வேலை. வயதிகுறைஞ்சவள் ஒருநாள் வக்கனையாச் சமைச்சாளாம். தனக்கும் புருசனுக்கும் அளவாத்தானாம் சமைச்சாள் மனிசிக்காறி, என்னெயிற விருந்தாளியா ஒருத்தன் வந்திட்டான். அவனைப் போக்காட்ட இவைக்கு வழியில்லை. மனிசன் திடீரெண்டு சண்டையக் கிழப்பி மனிசிக்கு அடிக்கத்துவங்க. அவளும் குய்யோ முறையோண்டு குழற விருந்தாளி வெளிக்கிட்டுப் போயிற்றானாம். அவன் போனபிறகு இவன் மனிசியிட்ட "எடியே நான் அடிச்சனெண்டோ நினைச்சாய்" எண்டு கேட்க அவள் "நான் அழுதனெண்டோ நினைச்சியள் எண்டாள். அப்ப வீட்டுக்குப் பின்னால நிண்டு விருந்தாளி "நான் போயிற்றனெண்டோ பார்த்தியள்" எண்டு உள்ளுக்க வந்தானாம்."

சரியாச் சொன்னாய் இதுதான் இலங்கை அரசியல்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–105



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்–105**

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் : .............................................................

முகவரி : .............................................................

.............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –104



**மா.அகிலன்,**
**சேரன் வெதுப்பகம்,**
**மல்லாவி.**

### பரிசுக்குரிய வரிகள்

*கடாரம் வென்ற சோழன் ஏறிய கடலே! இன்று*
*கூடாரம் என்ற எல்லைக்குள் முடங்கியதெம் உடலே*
*படாரும் பட்டழித்து பரிதவிக்கின்றோம் தாயே*
*கொடயாரும் இல்லையம்மா உன்மடியே தஞ்சம் இனி.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கண்ணீர் காயா நெஞ்சங்களே வெயிலிலே*
*வாடும் உங்களுக்கு அதோ ஒரு ஆலமரம்*
*துயரத்தை விட்டுவிட்டு மனதிற்கு ஓய்வுகொடுக்க*
*செல்லுங்கள் அந்த கொட்டகையுள்.*

ச.வசந்தராஜ்,
புதுக்குடியிருப்பு.

*அல்லும் பகலும் அயராது உழைத்து*
*அழகாய் நாம் அமைத்த வீடுகள் யாவற்றையும்*
*அள்ளிச் சென்றாள் கடலன்னை.*
*அல்லலுற்ற எம் வாழ்வுக்கு அடைக்கலம் இக் கொட்டகையே.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*சிறப்பாக வாழ்ந்த எம் உறவுகள் இயற்கையின் சீற்றத்தால்*
*சீர்குலைந்து தறப்பால் குடிசையில் வாழ்கிறார்கள் மத வெறிபிடித்த*
*சிறிலங்கா அரசே! உடனடியாக இவர்களுக்கும் உலக*
*நாடுகள் வழங்கும் உதவியை பகிர்ந்து கொடு.*

க.ஜெயக்குமார்,
புளியங்குளம்.

*சுனாமி பரிசளித்த பரிதவிப்பு நிலையினால்*
*அன்பு உறவுகளே சோர வேண்டாம்*
*தறப்பாளில் கொட்டகை ஒவ்வொன்றும் தெரிகின்றன*
*அங்கே செல்லுங்கள் உங்கள் இருப்பிற்காக.*

யோ.கபிலன்,
நெடுங்கேணி.

*கல்லாலும் மண்ணாலும் அழகான வீடுகட்டி*
*சுனாமி என்னும் கூற்றனிடம் பறிகொடுத்து*
*உதவியின்றி ஏங்கி நிற்கும் உறவுகளே*
*ஏக்கம் இன்றி இங்கே செல்லுங்கள் தோள்கொடுப்போம்.*

க.நிறோயன்,
மாறாயிலுப்பை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# நெஸ்பிறே பால்மா உற்பத்தியாளர்களுக்கு எமது நன்றிகள்!






சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பகுதி
வாழ் மக்களுக்கு அம்மன் களஞ்சியம் ஊடாக பாதிக்கப்பட்ட
பகுதிகளின் அனைத்து நலன்புரி நிலையங்களுக்கும் நேரடியாக விஜயம்
செய்து மெகிநூடில்ஸ்சமைத்துக்கொடுத்தும், நெஸ்பிறே
பால்பைக்கற்றுக்களை வழங்கியும் மற்றும் குழந்தைப்பால்மா,
நெஸ்பிறேபால்மா, ஆகியவற்றினை வழங்கியும், வவுனியா
தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக தனது பால் சேகரிப்பு
நீர் தாங்கியினை (பவுசர்)வழங்கியமைக்காகவும் நெஸ்பிறே பால்மா
உற்பத்தியாளர்களாகிய நெஸ்லே லங்கா நிறுவனத்திற்குஎமது சார்பிலும்,
எமது மக்களின் சார்பிலும்
மிகுந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.






## அம்மன் களஞ்சியம்

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே: 021-228 5852 , 228 - 5077



# பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும் மாபெரும் பரிசுப்போட்டி



நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

கிழமை தோறும் ஒரு ஏசியா
ஈருருளி உரிமையாளராகுங்கள்!



Nestlé
NESPRAY

அதிகூடிய பால்
அதிகூடிய சுவை
அதிகூடிய கரையும் தன்மை






நீங்கள்
செய்யவேண்டியது
இதுதான்!

இங்கே வெட்டவும் →




நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின்
மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம்
பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதி
தினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன்
மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும்
ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள்.
இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி
ஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில்
வன்னிப்பகுதியைச்
சேர்ந்தவர்கள் மட்டுமே
பங்குபற்ற முடியும்.

குலுக்கல் மூலம் தெரிவு
செய்யப்படும் வெற்றியாளரின்
பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில்
பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

## அம்மன் களஞ்சியம்

அம்மன் களஞ்சிய ஊழியர்கள்
இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-11146)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registed as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாத -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-15 28-01-2005 வெள்ளிக்கிழமை ஓசை -345


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
T.P:0712-610008
(சி-11140)
விநாயகர் வீதி. மயிலிட்டி.



## முல்லைத்தீவு,வடமராட்சி கிழக்குப் பகுதி சேதங்களைப் பாலசிங்கம் பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமிப் பேரலைகளால் முற்றாக அழிவடைந்து போயுள்ள முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குக் கரையோரப் பிரதேசங்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்றுப் பார்வையிட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு நகரப் பகுதிக்கு வருகை தந்த ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோரைப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை கூட்டிச் சென்று காண்பித்தார். கடல் பேரலைகள் ஏற்படுத்திய சேதங்களைப் பார்வையிட்டதுடன் நகரப் பகுதியில் சிதைவடைந்து போயுள்ள கிறிஸ்தவ தேவாலயம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம் ஆகிய பகுதிகளையும் முல்லை மகாவித்தியாலயம், செந்தளிர் சிறுவர் இல்லம் போன்றன இருந்த இடங்களையும் பார்வையிட்டனர்.

முல்லைத்தீவின் கோர அழிவுகளைப் பார்வையிட்ட பின்னர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தினார். மதியம் 12.00 மணியுடன் மேற்படி நிகழ்வுகள் நிறைவடைந்தன.

பிற்பகல் 3.30 மணிக்குப் பேரலைகள் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்திய பெரும் அழிவுகளைப் பார்வை

(IVஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்த வேளையிலும் அரசியல் நகர்வை மேற்கொள்ள அரசு விளைந்து நிற்கிறது!

## அன்ரன் பாலசிங்கம் குற்றச்சாட்டு

(அலுவலக செய்தியாளர்)

**அனர்த்தப் பேரழிவுச் சூழ்நிலையில் அரசு தனது அதிகாரத்தை நிலைநாட்டி அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவே முயற்சிக்கிறது. இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்.**

சுனாமிப்பேரலைகளால் பாதிக்கப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியிருக்கும் மக்களைச் சந்தித்து உரையாற்றும்போது அவர் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

ஆழிப் பேரலை அனர்த்தம் உலகத்தில் உள்ள அனைத்து மக்களையும் அதிர்ச்சிக்கும், ஆழ்ந்த கவலைக்கும் உள்ளாக்கி இருக்கின்றது. இது ஒரு மாபெரும் துயரச் சம்பவம். இப்படியான கோர நிகழ்வுகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஏற்படுவதாகத்தான் வரலாறுகள் கூறு கின்றன. ஆனால், இப்படியான ஒரு அனர்த்தம் தமிழீழ மண்ணில் நிகழ்ந்தது உலகத்

(IIIஆம் பக்கம் பார்க்க)

## படகுக் கட்டுமானப் பயிற்சிக் கல்லூரி அடேல் பாலசிங்கத்தால் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடமாரட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் எம்.எம்.எஸ் நிறுவனமும் இணைந்து தாளையடியில் அமைந்துள்ள புதிய படகுக்கட்டுமான பயிற்சிக் கல்லூரியை திருமதி அடேல் பாலசிங்கம் நேற்றுத் திறந்து வைத்தார்.

நேற்று மாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை மங்கை படகு கட்டுமானப்பிரிவுப் பொறுப்பாளர் ஆனதி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார் பெயர்ப் பலகையை திருமதி அடேல் பாலசிங்கம் திரை நீக்கம் செய்து பயிற்சி கல்லூரிக்கான நாடாவை

(IVஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இதுவரையில் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை

**லக்ஷ்மன் கதிர்காமர்**

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இதுவரை இணக்கப்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைக் குழுவின் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும் போது அமைச்சர் கதிர்காமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். விடுதலைப்புலி

(IVஆம் பக்கம் பார்க்க)

**இவ்வருட இறுதிக்குள் தேர்தல்**

## சனாதிபதியின் கூற்றிற்கு பீரிஸ் வரவேற்பு!

சனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதிக்குள் நடத்தப்படும் என சனாதிபதி தெரிவித்துள்ளமையை தமது கட்சி வரவேற்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜிஎல்பீரிஸ் இது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில்

(IVஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அரசிடம் சிறந்த செயல்திட்டம் இல்லை

**ஜாதிக ஹெல உறுமய தலைவர் சாடல்**

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கத்திடம் சிறந்த செயல்திட்டம் ஒன்று இல்லையென ஜாதிகஹெல உறுமய கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய அனர்த்தத்தின்போது அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படாமை இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி நகரில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த செயற்றிட்டம் தொடர்பாக இதுவரை சரியான எந்தவொரு முகாமைத்துவமும் இல்லை. சனாதிபதிக்குத் தேவை ஒன்று உள்ளது. பிரதமருக்கும் தேவையுள்ளது. நேர்த்தியாக வேலை செய்வோர் இல்லை.

இது சிங்களவருக்கு ஏற்பட்டுள்

(IVஆம் பக்கம் பார்க்க)

## அரச நிவாரணப் பணிகளில் பாரிய முரண்பாடுகள்

**பவ்ரல் அமைப்பின் தலைவர்**

(கொழும்பு)

சுனாமிஅனர்த்தத்தின் பின்னரான அரசின் நிவாரணப் பணிகளில் பாரிய முரண்பாடுகள் நிலவுவதாக சுயாதீன தேர்தல்களுக்கான அமைப்பான பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்சிலி றொட்றிகோ கூறியுள்ளார். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள நிவாரணப்பணிகள் வெளிப்படையான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

(IVஆம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியமர்வு குறித்து ஆராயும்கூட்டத்தில் குழப்பம் ஏற்படுத்த ஈ.பி.டி.பி யினர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமாக ஆராயவதற்கு நேற்று முன்தினம் மாலை யாழ்.அரச செயலகத்தில் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்திருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் மேற்கொண்ட விதண்டா வாதத்தினால் கூட்டததில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, சுனாமி அனர்த்தப்புனர்வாழ்வு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் கூட்டப்பட்டிருந்த மேற்படி கூட்டத்தில் இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்,யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வணகுரு,யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க துணைத்தலைவர் குட்டித்தம்பி மற்றும் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன்,கா. ஈழவேந்தன்,பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் ஆகியோரும் யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், கடற்புலிகளைச் சேர்ந்த கங்கை அழகன், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் மதனராஜன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு. வாகனப் பற்றாக்குறை பெரும் தடையாக இருப்பதாகப் பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஈ.பி.டி.பி யினரின் பதவிக்காலம் முடிந்தும். மீள ஒப்படைக்காது வைத்திருக்கும் பிரதேச சபை வாகனங்களை அதிகாரிகளுக்கு வழங்குவதன் மூலம் அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தலாம் என யோசனையை முன்வைத்தார். இதனை அடுத்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் மதனராஜன் கூட்டத்தின் மத்தியில் குழப்பங்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து அக்கூட்டத்தில் கலந்திருந்த ஏனைய தமிழ் கூட்டமைப்பினரும் கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து ஒருமித்த குரலில் தமிழ் தேசியம் பற்றியும்,தமிழ் மக்களின் அபிவிருத்தி, புனர்வழ்வு நடவடிக்கைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கவும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் எவருக்கும் அருகதை கிடையாது என்பதை வலியுறுத்தினர். இதேவேளை யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் யாழ்ப்பாணக் கட்டளை தளபதி மேஜர்ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரச சார்பற்ற அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். ஆயினும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளோ தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் உட்பட அரசியல் கட்சியினரோ கலந்து கெள்ளவில்லை. (33)

# "விளையாடுவோம் வாசிப்போம்" நூல் அறிமுக விழா நாளை

"விளையாடுவோம் வாசிப்போம்" நூல் அறிமுகவிழா நாளை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில நடைபெறவுள்ளது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் வண.பிதா. பிறான்சிஸ் யோசப் அடிகளார் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் வ. யோகநாதன் அவர்களும், வாழ்த்துரைகளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் (மாகாணகல்வித் திணைக்களம், திருகோணமலை) கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரட்னம், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, [illegible]ணுக்காய் வலயக் கல்விப் [illegible]ணிப்பாளர் தெய்வேந்திரன் , கநசாமி (ஜி.ரி.இசற்.வன்னி) ஆகியோர் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், அவர்கருடன் நூல் வெளியீடை செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகளும், மதிப்பீட்டுரைளை செல்வராசா (ஜி.ரி.இசற் வணி), தமிழீழத் தேர்வு ஆணையாளர் சரவணபவன், கணேசலிஙகம் (வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி) ஏற்புரையை நூலாசிரியர் முல்லை றிசனா அவர்களும், நன்றியுரையை அபராஜிதனும் நிகழ்த்துவர்.


## வரிவிளம்பரம்

### இந்து நாகரிக கருத்தரங்கு

2005 பரீட்சை எடுக்கும் மாணவர்களிற்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் 29.01.2005 காலை 9 மணிக்கு நடைபெறும் இடம்:- கேம்பிறிஜ் கல்லூரி, உதய நகர், கிளிநொச்சி ஆசிரியா திரு.எஸ். ரமேஸ் (5613)

### தவறிவிட்டது

பாலேந்திரன் கலைசெவி 33, தோப்புக்காடு,காரைநகர் என்பவரது அசிரிய பரீட்சைக்கன பெறுபெற்றுச் சான்றிதழ் கிளிநொச்சி சந்தையை அண்மித்த பகுதியில் தவறிவிட்டது கன்டெடுத்தவர்கள் சந்தையின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் (5469)





- பெற்றோரை இழந்த சிறுவருக்குதவ -

# கம்பர் மலை கலாவாணி இளைஞர்மன்றம் இரண்டு இலட்சம் ரூபா நிதி உதவி

வல்வெட்டித்துறை - கம்பர்மலை கலாவாணி இளைஞர்மன்றம் இரண்டு இலட்சத்து 12 ஆயிரத்து 500ரூபா நிதியை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவும் முகமாக விடிவைக் காத்திரு என்னும் நிகழ்ச்சியை நடத்தி அதன் மூலம் பெறப்பட்ட மேற்படி நிதியை வழங்கியுள்ளனர்.

இந்நிதியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமி அனர்த்த அவசர கால நடவடிக்கை பணியகத்தின் பணியாளரிடம் கடந்த திங்கட்கிழமை வழங்கினர்.


# அறிவித்தல்

ஓமந்தை மத்திய கல்லூரி பழைய் மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29.01.2005 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் . சகல பழைய மாணவர்களும் தவறாது சமூகமளிக்கவும்.

(சி.11225)

க.சிவசேகரம்,
செயலாளர்.

# முல்லை வர்த்தக சங்க அவசர அறிவித்தல்

முல்லைப் பிரதேச வர்த்தக சங்கத்துக்குட்பட்ட அனைத்து வர்த்தக,தொழில்சார் நிலைய உரிமையாளர்கட்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் 29.01.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு முல்லைத் தீவு நகரப் பகுதியில் சந்தைக்கு முன்பாக இடம்பெற இருப்பதால் அனைத்து வர்த்தக/தொழில்சார் நிலைய உரிமையாளர்களையும் தவறாது சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(5615)

தகவல் :
செயலாளர்,
வர்த்தக சங்கம்,
முல்லைத்தீவு

# தமிழீழப் போக்கு வரவுக்கழகம்

சுமையுந்து / இழுபொறி

## ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் ஓட்டுநர் (பயிலுநர்)பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை:-ஆண்டு 08
02. அகவை:-23தொடக்கம் 35வரை
03. உயரம்:-05அடி 05அங்குலம்
04. நிறை:-55kg

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவுநாள்:-05.02.2005
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 08.02.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழக நடுவப்பணிமனையில் நடைபெறும்.
03. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை,அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு,மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை, புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நேரக் கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,விசுவமடு.

(சி11097)

# ஆழிப்பேரலை அழித்த பகுதிகளை அரசியல் ஆலோசகர் பார்வையிட்டபோது...




அழிவடைந்த செந்தளிர் சிறுவர் இல்லத்தைப் பார்வையிடுகையில்



வட்டுவாகல் வண்ணாங்குள அழிவுகளைப் பார்வையிடுகையில்




முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுடன்



படகுக் கட்டுமானப் பயிற்சிக் கல்லூரியை திருமதி அடேல் பாலசிங்கம் திறந்து வைக்கிறார்



படகேறி கடலுக்குப் போகையில்...



வடமராட்சி கிழக்கில் கடற்படைத் தளபதிகளிடம் மக்களின் அழிவுகளைக் கேட்டறிகையில்

(படங்கள் : அ. லோகீசன்)

## அனர்த்த....

தமிழர்களுக்கே பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், துன்பங்கள், வேதனைகள் உட்பட்ட ஆழமான பரிமாணங்கள் அனைத்தையும் நாங்கள் அறிவோம் அதன் தாற்பரியத்தை வார்த்தைகளால் கூறமுடியாது. ஆறுதல்கூடச் சொல்ல முடியாத அளவுக்கு இந்தத் துயரம் உங்களை அழுத்தும் என்பது எங்களுக்குத் தெரியும்.

நான் தலைவரின் அழைப்பில்தான் இங்கே வந்தேன். இலங்கை அரசாங்கம் எமது மக்களுக்கு உதவி செய்வதில் என்னென்ன தடைகளை விதித்து வருகின்றது. அத்துடன் உங்களுக்குத் தெரியும். நோர்வே அரசாங்கத்தில் இருந்து பெரிய முக்கியமான மந்திரிகள் இங்கு வந்து தலைவரைச் சந்தித்தபோது நானும்கூட இருந்து எங்களது மக்களின்ர பிரச்சினைகளை எடுத்து விளக்கி உலக நாடுகளின் நிதி உதவி அவசர தேவை என்பதையும் அவர்களுக்கு எடுத்து விளக்கி இருந்தோம். தலைவர் அவர்களின் பிரதிநிதியாகத்தான் நான் இங்கு வந்திருக்கின்றேன். என்னென்று சொன்னால், தலைவர் அவர்களோடு பேசும்போது அவரின் ஆழமான உணர்வலைகளை என்னால் புரிய முடிந்தது. சகல அரசியல் இராணுவ நடவடிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு முதன்மையாக ஆழிப்பேரழிவால் மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களில் இருந்து அவர்களுக்கு உடனடியாகப் புனர்வாழ்வு அளிப்பதற்காக இயக்கத்தின் சகல அமைப்புக்களையும் பணியில் இறக்கியிருக்கின்றார். இது உங்களுக்கும் தெரியும்.

ஆழிப்பேரலை தாக்கியபொழுது உங்களைக் காப்பாற்றவும் உங்களுக்கான அவசர உதவிகளைப் செய்யவும் எமது படையணிகள் அதாவது, கடற்புலி, அரசியல்துறை உட்பட அனைத்துப் பிரிவுகளையும் உங்களுக்கு உதவிக்காக அனுப்பி எமது விடுதலை இயக்கமே உங்களுக்குப் பேருதவி செய்து வருகிறது. இதை உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஆனால், இதைவிட சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசாங் கத்துடனும் பேச்சுக்களை நடத்தி உலகத் தலைவர்களை அழைத்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்திக்கலந்தாலோசித்து உங்கள் வாழ்வை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க எமது தலைமை முழு முயற்சிகளையும் செய்து வருகிறது என்ற ஒரு தகவலைச் சொல்வதற்காகவேதான் நான் இங்கு வந்திருக்கின்றேன்.

எங்களுக்குத் தெரியும். இந்த அகதி முகாம்களில் பாடசாலைகளில் இப்படியாக வாழ்க்கையைத் தொடர நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை. வெகுவிரைவில் உங்களை ஒரு வீடமைப்புத்திட்டத்தில் மாற்றி உங்கள் சொந்த காணிகளில் குடியமர்த்தி மீண்டும் தொழில் வாய்ப்பை உருவாக்கித்தந்து ஒரு பெரிய புனர்நிர்மாணத் திட்டத்தில் எமது இயக்கம் முழு மூச்சுடன் பணியாற்றி வருகிறது. இதை நான் உங்களிடம் சொல்வதற்காகவும் தான் இங்கு வந்திருக்கின்றேன்.

கொழும்பு அரசாங்கத்துடனும், நாங்கள் ஒரு மட்டத்தில் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். அதாவது, வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் நிதி உதவிகளுடன் நிவாரணப் பொருட்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தப் பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக உங்களுக்கு கிடைக்கிறது. இப்பொழுது உணவு, உடை, மருந்து போன்ற அவசர உதவிகள் உங்களுக்குக்கிடைத்து வருகிறது. இவை ஆரம்பகால உதவிகள். இதை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியாது. இந்த நிலையில், பெருமளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருள் உதவி, நிதியுதவிகள் என்பனவற்றை பெற்றுத்தந்து வீடமைப்பைத் துரிதப்படுத்தி அகதிமுகாம்களில் இருந்து உங்களது சொந்த மண்ணுக்கும், சொந்த வீடுகளுக்கும் திருப்பி அனுப்புகின்ற திட்டத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். இது முக்கியமான விடயம்.

இன்று உலக நாடுகள் பெருமளவு உதவிகளைச் செய் வதற்கு வாக்களித்திருக்கின்றன. ஆனால், இந்த உதவிகள் இலங்கை அரசாங்கம் ஊடாகவேதான் வரவேண்டியிருக் கின்றது. அது ஒரு அரசு என்ற ரீதியில் வெளி நாடுகள் உடனடியாக அரசுக்கு வழங்கும். ஆனால், நாங்கள் சொல்கிறோம். அரசு இந்தப் பெரும் நிதியைப் பெற்று எமது மக்களுக்கு சரிசமனாக பங்கிடுமா என்பதில் எங்களுக்கு சந்தேகம்.

சிங்கள அரசு இந்தச் சுனாமி அனர்த்தத்தை அரசியல் இலபாத்துக்காகப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கென அளிக்கப்பட்ட நிதி உதவியை வேறு வழிகளில் தனது அரசையும், இராணுவ இயந்திரத்தையும் பலப்படுத்தித் தனது அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்தவும் பயன்படுத்தலாம் என்ற நோக்கில் நாங்கள் உலக நாடுகளிடம் ஒரு வேண்டு தலை விடுத்திருக்கிறோம். அதாவது, வட-கிழக்குப் பகுதி கள் தான் பெரிய அழிவில் சிக்கி இருக்கிறது. வட-கிழக்கின் கரையோரப் பகுதிகளில்தான் 20ஆயிரம் மக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எமது மீனவ சமுகம் இராணுவக் கடற்படை ஒடுக்குமுறை காரணமாகப் பெரும் துயரங்களைச் சந்தித்து வந்தது. இவ்வாறு துன்பச் சுமையுடன் வாழ்ந்த இந்த மக்கள் மீது சுனாமி அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எமது கடலோர மீனவ மக்களின் துயர வரலாறு சுனாமியுடன் வந்தது அல்ல. அதுதான் தலைவர் சொல்லியிருக்கிறார். முதலாவது சுனாமி ஆமியால் ஏற்பட்ட சுனாமி இராணுவக், கடற்படையின் கொடுமையால் பல்லாயிரக் கணக்கான மீனவ மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மீனவ தொழில் துறை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மக்கள் தமது வாழ்க்கையை சமாதான காலத்தில் மீளக்கட்டி எழுப்ப முயற்சித்தபோதுதான் இயற்கையின் சீற்றத்தால் ஒரு பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் தலைவர் இரண்டாவது சுனாமி என்கிறார். வெளிநாடுகளுக்கு இதைத்தான் சொல்லி வருகிறோம். நீண்ட காலமாகப் பெரும் இடர்பாடுகளுக்குள் சிக்கி இருந்த இந்த மக்களுக்கு நிரந்தரமான புனர்வாழ்வும், சுபீட்சமான வாழ்வும் அமைத்துக் கொடுக்க வேண்டும். போராட்டம் என்ற ரீதியில் அரசியல் உரிமைக் காகப் போராடுகின்ற போராட்டம் வேறு மக்களின் பொருளாதார வாழ்வுக்கான போராட்டம்தான் இப்போது நடைபெறுகிறது. இது நாங்கள் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேசி அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பெருந்தொகை நிதி உதவியைப் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு வந்து சேரும் வழிவகையை அமைக்கக்கூடிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

பேச்சுவார்த்தை ஒரு மட்டத்தில் நடைறெுகிறது. அது எந்த மட்டம் என்று சொன்னால், கொழும்பில் இருக்கிற சமாதானச் செயலகத்திற்கும் ,கிளிநொச்சியில் இருக்கின்ற சமாதான செயலகத்திற்கும் மத்தியில் தான் பேச்சு நடைபெறுகிறது. அது என்ன பேச்சு என்றால் நிவாரண உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமத்துவமாகப் பகிர்ந்தளிப்பதற்கு இரண்டு தரப்பும் இணைக்கப்பாடு கண்ட ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்குத்தான் இந்த பேச்சுநடைபெறுகிறது. இதிலும் எங்களுக்கு சில சிக்கல்கள் இருக்கிறது.

சந்திரிகா அரசாங்கம் இலங்கை அரச நிர்வாகத்தின் கீழ் இந்தக் கட்டமைப்பைக் கொண்டு வந்து தனது அதிகாரத்தை நிலை நாட்ட இந்த அனர்த்தப் பேரழிவு சூழ்நிலையிலும் தனது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முயற்சிக்கிறது. ஆனால், தலைவர் பிரபாகரன் நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் சொன்னார். இந்தப் பணம் எங்கள் அமைப்பின் ஊடாக வரத் தேவையில்லை. நீங்கள் உங்களது வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலமாவது எங்கள் மக்களுக்கு அந்தப் பணத்தை, நேரடியாகக் கொண்டு வந்து வேலைத் திட்டங்களை நீங்களே செய்து மக்களின் வாழ்வை மேம்படுத்துங்கள். விடுதலைப் புலிகளிடம் இந்தப் பணம் வரவேண்டும் என நாங்கள் நிர்ப்பந்திக்கவில்லை. எங்களுக்கு வேண்டியது உலக அனுதாபத்தால் வந்த பேருதவி எமது மக்களின் விடிவிற்கும் சுபீட்சத்திற்கும் நல்வாழ்வுக்காகவும் கிடைக்க வேண்டும் என்பதுதான் இயக்கத்தின் நிலைப்பாடு.

மக்களே உங்களது ஆழமான உணர்வலைகள் எங்களுக்குக்குப் புரியும். இப்பொழுது கடலைத் திட்டிப் பலனில்லை. கடலுக்குப் பயந்து எங்களால் இருக்க முடியாது. கடலும், கடல் வளமும் எங்கள் வாழ்க்கை வளத்தை மேம்பாடு செய்யும். ஒரு முக்கியமான இயற்கை வளம். இந்த வளத்தைப் பயன்படுத்தித்தான் நாங்கள் எங்கள் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும்.

எனவே, நாங்கள் மீண்டும் எங்கள் தொழில் முயற்சியை ஆரம்பிக்க வேண்டும். உங்கள் தொழில் வாய்ப்புக்கான புற நிலையை எங்கள்இயக்கம் ஏற்படுத்தித் தரும். அதில்தான் நாங்கள் முழு மூச்சாக இருக்கின்றோம். இதற்காக உலக நாடுகள் எங்கும் பிரச்சாரம் செய்து ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவோம். என்ற வாக்குறுதியைத் தருகின்றேன் எனத் தனது உரையில் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# இல.தமிழர் விவகாரத்தில் இந்தியா தொடர்ந்து தவறிழைத்து வருகிறது

## ஜவகர்லால் நேரு பல்கலை .பேராசிரியர் குற்றச்சாட்டு

(லண்டன்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விடயத்தில் இந்தியா கடைப்பிடித்தகொள்கை குறித்து இந்தியாவின் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சகாதேவன் விசனம் தெரிவித்துள்ளார். அவர் பி.பி.சி. தமிழோசைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்க இராணுவப்படையினர் இலங்கைக்கு வருகைதந்த போதிலிருந்து இந்திய அரசு அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் கூறியிருந்தார். ஆனால் அந்த ஆட்சேபனையைச் சரி செய்ததாகவும் கூறப்பட்டது. அதேவேளை இந்திய வெளியுறவு அமைச்சர் ஓர் பேட்டியில் கூறியிருந்தார். இரண்டு நாடுகளிடையேயிருந்து இலங்கைக்கு என்ன தேவை என்பது குறித்து கலந்தாலோசித்த பின்னர் யார் வேண்டும் என்றாலும் இலங்கைக்கு உதவி செய்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ள அவர், இதிலிருந்து தெரிகிறது இலங்கை அரசு முன்கூட்டியே இந்திய அரசிடம் இதைக் கலந்தாலோசிக்கவில்லை என்று அப்படிக் கலந்தாலோசித்து அவர்களுடைய தேவைகளை எடுத்துக்காட்டி இந்திய அரசினுடைய ஓர் ஒத்துழைப்பை நாடியிருந்தால் இந்தியாவினுடைய ஆட்சேபனை வந்திருக்காதெனத் தெரிகிறது.

இந்திய அரசினுடைய கொள்கை என்பது ஒரு சரிசமனான கொள்கை இல்லை என்று தெரிகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் இலங்கைத்தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்திய அரசு அவர்களை விடுதலைப் புலிகள் வழியாகவே பார்க்கின்றது. இது சரிசமமான அணுகுமுறை அல்ல. விடுதலைப்புலிகளைத் தாண்டி இலங்கைத் தமிழர்களைப் பார்க்கவில்லை. அதற்கு காரணம் என்னவென்றால் இந்தியாவில் உணர்த்துவதற்கு யாரும் இல்லை. தமிழர்களின் பிரதிநிதிகளை எடுத்துக் கொண்டாலும் சரி இந்தியாவிலுள்ள தமிழர்களுடைய பிரதிநிதிகளை எடுத்துக்கொண்டாலும் சரி இப்பிரச்சினையை எடுத்துக் காட்டி வலியுறுத்தும் வகையில் யாரும் நடந்துகொள்வில்லை இவ் அணுகு முறையை மாற்றுவதற்கு அரசு முயற்சிகளை எடுக்கவேண்டும். அப்படி எடுத்தால்தான் இது மாறும் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ அவ்வேலையைச் செய்து வந்தாலும் ஒரு தலைவரைச் சந்திக்கின்றபோது இவ்வாறு செய்ய வேண்டுமெனக் கூறுவார்களே தவிர இம் முயற்சி இன்னும் செய்யப்படவில்லை. அவ் அணுகுமுறையை மாற்றுவதற்கு இரண்டு விதமான முயற்சிகள் தேவை. ஒன்று இந்தியா உள்நாட்டுப் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதிகளும் இதற்காக முயலவேண்டும். அப்போதுதான் முரண்பாடான சரிசமம் இல்லாத கொள்கை மாறும் என மேலும் தெரிவித்தார். அது சும்மா கூறி விட்டு இருந்தால் இந்தியா வைப்பொறுத்தவரை ஏகப்பட்ட பிரச்சினைகளைக் கையாள வேண்டிய முறையில் மாற்றம் தேவை. இதற்கு சனநாயக அடிப்படையிலான முயற்சி தேவை என்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் இந்தியாவின் உதவிகள் சம்பந்தமாக சில முரண்பாட்டுப்போக்கு இருக்கின்றது. இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சகல உரிமைகளும் இருக்கின்றது. இதற்காக அவர்கள் பாடுபடுவது நியாயம் என முன்னர் இந்தியா தெரிவித்திருந்தது. ஆனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்களும் நிவாரணம் தேவைப்படுகின்றபோது அந் நிவாரண உதவிகளை இலங்கை அரசு செய்யும் எனவும் அரசிற்கு நாம் உதவி செய்யவோம என இந்திய அரசு பொதுவான ஒரு அணுகுமுறையை ஏற்படுத்துவது ஒரு முரண்பாடான கருத்தாகும். இவ்விடயத்தில் இந்தியாவின் புலிகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளே இடையூறாக இருக்கிறது. அவ் இடையூறு மனிதாபிமான சம்பந்தப்பட்ட தமிழர் பிரச்சினைகளும் இந்தியாவின் கொள்கைகளினால் அடிபட்டுப் போகின்றது. இக்கொள்கைகளை மாற்றுவதற்கு சில இடைவெளிகள் இருக்கின்றன. அதைச் சிறிது சிறிதாகக் காலம் தான் மாற்றவேண்டும் என்றார்.

# அமெ. சமாதான அமைப்பின் பணிப்பாளர் கொழும்பு விஜயம்

ஐக்கிய அமெரிக்க சமாதான அமைப்பின் பணிப்பாளர் வஸ்கியுஸ் தற்சமயம் இலங்கையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று இலங்கையை வந்தடைந்த அவர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதுடன் அரசாங்க அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்

ஏற்கனவே இலங்கையில் மீள்கட்டுமானம் தொடர்பில் வருகை தந்திருந்த அமெரிக்கத் தொண்டர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதன் அவசியம் குறித்தே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது

அமெரிக்க அரசாங்கத்தின் நிறுவனமான இந்தச் சமாதான குழு உலகளாவிய ரீதியில் இரண்டு வருடகால அடிப்படையில் தொண்டர்களை அனுப்பி வைக்கிறது

1996 ஆம் ஆண்டு மாத்திரம் சுமார் 550 தொண்டர்கள் இந்த அடிப்படையில் இலங்கை உட்பட்ட 39 நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்

அந்தத் தொண்டர்கள் சுமார் 300 இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை அமெரிக்க அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருந்தனர்

### இலங்கையர் நாடு திரும்ப லெபனான் சலுகை

லெபனானில் நிர்க்கதிக்குள்ளான இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக லெபனான் அரசு தெரிவித்தது. இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைக் கவனத்தில் கொண்டு இவ்வாறு தெரிவித்துள்ளது.

# மே. 21. இல் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

பட்டதாரி பயிலுனர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களை மே மாதம் முதல் நிரந்தரமாக்கு வதற்கு அரசாங்கம் தீர்மானித்துளளது. 42000 பட்டதாரிகள் தற்போது பயிலுனர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் பிரதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார். மே மாதம் 21ஆம் திகதி இவர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவார்கள். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற முக்கிய சந்திப்பொன்றில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

# யாழ். கல்வியியற் கல்லூரி மாணவனைக் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் 3ஆம் வருட மாணவனொருவன் கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் காணாமற் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ள மண்டைத்தீவுக் கிராமத்தினில் வசித்துவந்த பத்மநாதன் திவாகரன் (வயது - 24) எனும் மாணவனே காணாமற்போயுள்ளார்.

இதுவரை காலமும் கல்வியியற் கல்லூரியின் விடுதியினில் வசித்து வந்திருந்த இம்மாணவன் ஆசிரிய பயிற்சிக்காக வேலணை மகாவித்தியாலயத்தினில் அண்மைக் காலப் பகுதியினில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையினில் மண்டைதீவிலுள்ள தனது வீட்டிலிருந்து வேலணை மகாவித்தியாலயத்திற்குச் சென்று வந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாறானதோர் நிலையினில் கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை வேளையில் மண்டைதீவிலுள்ள தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்த வேளையினிலேயே அம்மாணவன் காணாமற் போயிருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

### -கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்குள்-

# கட்டடம் அமைப்பதில்லையென்ற அரசின் முடிவுக்கு ஐதே.க. எதிர்ப்பு

(கொழும்பு)

கடற்கரையிலிருந்து நூறு மீற்றர் பகுதிக்குள் புதிய கட்டடங்களை அமைப்பதில்லை என்ற அரசின் ஏற்பாட்டை ஐ.தே.கட்சி எதிர்த்துள்ளது.

நேற்று சனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கட்சித்தலைவர் கூட்டத்திலேயே ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கருஜெயசூரிய தமது இந்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகக் கூறிய அவர், ஒவ்வொரு பிரதேசத்தின் தன்மையின் அடிப்படையிலும் இந்த வரையறை மாற்றம் பெற வேண்டும் என்பதே தமது கட்சியின் கொள்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கட்சித்தலைவர்களுக்கான கூட்டம் முடிவடைந்த பின்னர் இரவு 8.00 மணிக்கு கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்குள் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்ற யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை இது தொடர்பில் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளது. இந்த நிலையில் மீனவர்கள் தமது தொழில்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மீன்பிடிக் கலங்களைப் பாதுகாத்து வைக்கவும் இந்த 100 மீற்றருக்குள் அனுமதி வழங்கப்படுவதற்கு அமைச்சரவையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு...

யிட்டனர். அத்துடன் சிறிது நேரம் கடலிலும் பயணம் செய்தனர். அதன் பின்னர் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், எம்.எம்.எஸ் நிறுவனமும் இணைந்து தாளையடியில் நிறுவியுள்ள படகுக் கட்டுமானப் பயிற்சிக் கல்லூரி திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிட்டனர். (லோ,தீ)

### சனாதிபதி..

கருத்துரைத்தபோது, அரசியலமைப்பின்படி தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டியது அவசியமானதாகும்.

அதன்படி அடுத்த சனாதிபதி தேர்தல் இந்த வருட இறுதிக்குள் நடைபெறவேண்டும். அதனை சனாதிபதியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனவே அது தமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாந்தோட்டையில் சனாதிபதி ஐந்து வருடங்களுக்குள் தேர்தல்கள் நடைபெறாது எனத் தெரிவித்த கருத்து பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டைக் கட்டியெழுப்ப தற்சமயம் அதிகளவான நிதிகள் நாட்டுக்குள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் அவற்றை உரிய முறையில் நிர்வகிக்கும் பொறுப்பு குறித்து மக்கள் திருப்தி கொண்டிருக்கிறார்களா? என்பது அறியப்படவேண்டும் எனில் அந்தத் திருப்தியை அறிந்து கொள்வதற்கு சனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டியது அவசியமாகும்.

### புலிகளுடன்...

களுடன் இணைந்து செயற்படுவது குறித்து பேச்சுக்கள் நடத்தப் படுகின்றன. ஆனால் இதுவரை இந்த விடயம் தொடர்பில் எந்தவிதமான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது விருப்பு வெறுப்புக்களைக் கைவிட்டு நாட்டு நலன் குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் விருப்பமில்லாதவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட ஹரிம் பீரிஸ் எந்த ஒரு சர்வதேச உதவியும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடியாக வழங்கப்படமாட்டாது. விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் வேலைக்கான உடன்பாடு தொடர்பாகவே பேச்சுக்கள் நடத்தப்படுகின்றதென்றும் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத எந்த ஒரு அமைப்பின் ஊடாகவும் வெளிநாட்டு உதவிகள் கையாளப்பட முடியாது என்றும் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு ஒரு பொழுதும் மாற்றமடையாது என்றும் ஹரிம் பீரிஸ் குறிப்பிட்டார்.

### அரச...

இது அவ்வாறு இடம்பெறுகிறதா என்பதை முதலில் தமது அமைப்பு கண்காணிக்கவுள்ளது.

அத்துடன் இது தொடர்பான தமது பணிகள் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இதனை மறுத்துள்ள சனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரான மனோ தித்தவல நிவாரணப் பணிகளில் உரிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

### படகுக்...

வெட்டி கல்லூரியை திறந்து வைத்தார். தொடர்ந்து சிறப்புரையை கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை, அரசியல் அலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார் நன்றியுரையை சமாச செயலாளர் அ. சுப்ரணிஸ்லாஸ நிகழ்த்தினார். இந்நிகழ்வில் தமிழீழ கடற்படைத் தளபதி மங்களேஸ் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர் மேற்படி நிகழ்வு சமாச பொதுமுகாமையாளர் த.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (லோ.தீ)

### அனர்த்த....

கெட்ட சகுனம் இன்று இலங்கைக்கு கிடைக்கும் நிவாரணங்களை முறையான முகாமைத்துவத்துடன் மேற்கொண்டிருந்தால் இந்த நாட்டைச் சிறப்பானதொன்றாக மாற்றமுடியும்.

பாராளுமன்றம் என்பது இந்த நாட்டில் இருக்கும் மாயையான ஒன்றாகும். இதன் மூலம் எந்தவொரு நன்மையும் சிங்கள, பௌத்தருக்கு இல்லை. எனவே சிங்கள, பௌத்தர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்திருக்க வேண்டாம். ஏனைய அழுத்தங்களூடாக ஒன்றிணைய வேண்டும். எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது